திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



மாலை 1] விகாரி வைகாசி ஜூன் 1959 [மணி 9

ரதி.

சென்னை அரசாங்க அறநிலையப்

பொருளடக்கம்

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம்: ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,
மவுண்ட் ரோட், சென்னை-2.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 1] விகாரி வைகாசி - 1959 ஜூன் [மணி 9

-: ஆலய அமைப்பு :-

இந்து சமய நாகரீகமே திருக்கோயில் நாகரீகம். அதுவும் தென்னுடாகிய தமிழகத்திலுள்ள திருக்கோயில்களின் வளர்ச்சியைப்பற்றியும் அத்திருக்கோயில்கள் கட்டப்பெற்ற முறைகளைப்பற்றியும் வரலாற்றைப்பற்றியும் ஓரளவு ஆராய்ந்தோம். இப்போது திருக்கோயில்கள் அமைப்பைப்பற்றிச் சிறிது சிந்திப்போம்.

ஆலயங்கள் அமைப்பில் சரீரப் பிரஸ்தாரம், இருதயப்பிரஸ்தாரம் என இருவகையுண்டு. காமிகாகமம், காரணுகமம், சுப்பபேதாகமம் முதலிய சிவாகமங்கள் இருபத்தெட்டு. பாஞ்சராத்திரம், வைகானசம் என்பன வைஷ்ணவ ஆகமங்கள். 207 உபாகமங்களும், 108 சம்ஹிதைகளும் உள்ளன. மானசாரம், அம்சுமபேதம், மலமதம் முதலிய சிற்ப நூல்களும், கந்தபுராணம் முதலிய பதினெண் புராணங்களும் ஆலய அமைப்பற்றிக் கூறுகின்றன. திருக்கோயில் அமைப்பில் ஆலயத்தை ஒரு வாஸ்துபுருஷனின் உடல் அமைப்பாகக் கருதி ஆலயம் கட்டுவதையே சரீரப்பிரஸ்தாரமென்பர். ஆ— இலயம் = ஆலயம். ஆ - பசு = உயிர், இலயம் - தங்குதல். உயிர்தங்கும் இடம்- உடம்பு.

"எவ்வுயிரும் பராபரன்றன்
சந்நிதியாகுமிலங்கும்
உயிர்உடல் அனைத்துமீசன்
கோயில்"

—சிவஞானதீபம்.

திருக்கோயிலுள்ளிருக்குந்
திருமேனிதன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச்
சிவனுறை வனங்கே
யுருக்கோலி மந்திரத்தாலே
நினையுமவர்க்கு
முளனெங்கும் இலனிங்கும்
உளனென்பார்க்கு
மிருப்பாய வடிவாகி
யிந்தனத்தினெரிபோன்
மந்திரத்தின் வந்து
தித்தேயிருஞ்சுரபிக்கெங்கு
முருக்காண வொண்ணுத
பான்முலைப் பால்விம்மி
யொழுகுவது போல்
வெளிப்பட்டருளுவ என்பர்க்கே.

—சிவஞானசித்தியார்.

கோயில் கட்டுமுன் நல்ல இடமாகத் தேர்ந்தெடுத்தல் வேண்டுமென்பது யாவரும் அறிந்ததே. மரஞ்செடிகள் நிறைந்த இடம், நீர்வளம் நிலவளம் உள்ளவையாயிருத்தல் நலம். அஸ்திவாரம் மிகவும் ஆழமாக இருக்கவேண்டும். மதில்கள் பெரியவைகளாக அமைக்கப் பெறவேண்டும். நல்ல தண்ணீர்க் கிணறு அமைய வேண்டும். இன்றும் எல்லாத் திருக்கோயில்களிலும் உள்ள கிணற்றுநீர் ஊரிலேயே மிகவும் நல்ல தண்ணீராக அமைந்திருக்கக் காண்கிறோம்.

ஒரு மனிதன் மல்லாந்து படுத்திருக்கும்போது இரண்டு பாதங்களும் மேல் நோக்கியிருக்கும் பாவனையாக கோபுரம் அமைந்துள்ளது. அடுத்து மூலாதாரத்தில் கொடிமரமும், தொப்புளில் பலிபீடமும், இருதய ஸ்தானத்தில் நந்தியும், பிரம்ம கபாலத்தில் மூலலிங்கத்தையும் அமைத்தனர். இறைவனுக்குப் பிரம்மம் என்ற பெயருண்டு. மூலலிங்கமோ மூல மூர்த்தியோ இருக்குமிடம் கருப்பக்கிரகம் அல்லது மூலஸ்தானம் எனப்படும். அதையடுத்திருப்பது அர்த்த மண்டபம் எனப்படும். இவ்விரண்டு பகுதிகளில் கருப்பக்கிரகத்திலுள்ள அபிஷேகநீர் போவதற்காக அமைக்கப்பெற்ற கோமுகி துவாரத்தையும் வாசல்களையும் தவிர வேறு துவாரங்கள் கிடையாது. சிவன் கோவில்களில் மூலலிங்கத்தினருகே போகசக்தியம்மன் உருவம் ஒன்று கருப்பக்கிரகத்தில் அல்லது அர்த்த மண்டபத்தில் அமைக்கப் பெற்றிருக்கும். இது இறைவன் அம்மையப்பராக இருந்து அருள்புரிகிறுன் என்பதைக் காட்டும் வகையில் அமைந்துள்ளது. எக்காரணத்தைக் கொண்டும் இவ்விரண்டு பகுதிகளில் மின்சாரம் முதலிய விளக்குகள் அமைக்கப் பெறக்கூடாது.

ஆகமவிதிப்படியமைக்கப்பெறும் ஆலயங்களில் ஐந்து பிரகாரங்களும், ஐந்து சுற்றுமதில்களும் இருத்தல்வேண்டும். ஆனால் சிலகோயில்களில் மூன்று மதில்களும் ஒரே மதிலும் இருக்கக் காண்கிறோம். இவையே ஐந்து சுற்று மதில்களையும் குறிப்பாக உணர்த்துவதாகக் கொள்ளவேண்டும்.

மனித உடல் ஐம்பூதங்கள் சேர்க்கையாலானது. அன்னமயகோசம், பிராணமயகோசம், மனேமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்ற ஐந்து கோசங்களால் அமைந்த தென்பதைக் காட்டுவனவே ஐந்து சுற்று மதில்களும்.

கொடிமரம் உடம்பில் உள்ள வீணைத்தண்டைக் குறிப்பதாகவும் அதையொட்டியுள்ள எலும்புக்கூட்டு வளையல்களைப் போன்று தாம்பிர வளையல்கள் கொடிமரத்தில் அமைக்கப்பெறுகின்றன. உடம்பில் இவ்வெலும்பு வளையங்கள் 33 இருப்பது போலவே கொடிமரத்திலும் அமைந்திருக்கும். சில இடங்களில் குறைவாக இருந்தாலும் குறிப்பாக 33 வளையங்களையே உணர்த்தும். சுழுமுனைநாடி வழியாகக் குண்டலினிசக்தி ஏறி பிரமரந்திரத்தை அணுகுவதைக் குறிக்கவே கொடிமரத்தில் கொடிப் படத்தை (ரிஷபம், சேவல், கருடன்) அலங்காரம்செய்து சர்வோபசாரத்துடன் ஏற்றுகிறோம். கொடிமரத்தின் அளவு மூலலிங்க மட்டத்திலிருந்து தூபியாகிய பிரமரந்திரம் வரையுள்ள அளவேயாகும். கொடியேற்றம் என்பது இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் 3 நாடிகளாலும் ரேசக பூரக கும்பகஞ் சேர்ந்த பிராணுயாம வழிபாட்டால் இறைவன் திருவடிப்பேற்றை எய்தும் முறையையும் ஆன்மாக்கள் பதிதர்மத்தை வழுவாது செய்தால் அவைகளையுயர்த்தித் தன்னிணையடிகளில் சேர்த்துக் கொள்வான் என்பதையும் காட்டும். கொடிமரம் பதி, அதில் உயர்த்தப்படும்

தருமக்கொடி ஆன்மா அல்லது பசு, அதைக் கட்டும் கயிறு பாசம் என முப் பொருளுண்மையும் உணர்த்தப்பெறும்.

கோபுரத்தையே ஆறு ஆதாரநிலைகளைக் குறிப்பதாக்க் கொண்டால் கோபுர வாயில் மூலாதாரம். அதன் இருபுறமும் விநாயகரும் முருகனும் அமைக்கப்பெறுவர். அடுத்துள்ள நிலை சுவாதிட்டானம். பிரம்மா சரஸ்வதி படிமங்களுடன் விளங்கும். பிருதிவிதத்துவபுவனங்களைக் குறிக்கும். அதையடுத்துள்ள நிலை மணிபூரகம். திருமாலும் லக்ஷ்மியும் அதிதேவதைகள். அப்புதத்துவ புவனங்களைக் குறிக்கும். அதற்குமேலுள்ள நிலை அனாகதம். தேயு தத்துவம் அதிதேவதை சிவம் - சத்தி. அதற்கு மேலுள்ள நிலை விசுத்தி வாயு தத்துவத்தைக் குறிக்கும். இதற்கு அதிதேவதை மகேசன் - மகேசை. அதற்கு அடுத்து மேலுள்ளநிலை ஆஞ்ஞை ஆகாய தத்துவத்தைக் குறிக்கும். இதற்கு அதிதேவதை சதாசிவன் - மனோன்மணி.

ஆறுநிலைகளுக்கு மேற்பட்ட நிலைகள் உள்ள கோபுரங்களில் நிராதாரதத்துவங்களும் மீதானமும் குறிக்கப்பெறும்.

கருப்பக் கிரகத்தின் மேலுள்ள விமானமும் தூபியும் தூலலிங்கத்தையும், மூல லிங்கம் சூக்குமலிங்கத்தையும் குறிக்கும் என்பது திருமந்திரத்தில் உள்ளது.

“பரய விமானமும் தூல மதாகுமால்
ஆய சதாசிவம் ஆகுநற்சூக்குமம்
பரய பலிபீடம் பத்திரலிங்கமாம்
ஆய அரனிலை ஆய்ந்து கொள்வார்கட்கே”

விமானமும் தூபியும் சிவபெருமான் பஞ்ச முகங்களைக் குறிக்கும்.

சத்திதான் நிற்கின்ற ஐம்முகம் சாற்றிடில்
உத்தரம் வாமம் உரைத்திடும் சத்தி
பச்சிமம் பூர்வம் தற்புருடன் உரை
தெற்கில் அகோரம் தென்கிழக்கு ஈசனே.

தூபியின் உச்சிக்கலசத்தை ஈசான முகமாகக் கொள்வதுண்டு.

பலிபீடத்தில் பலி கொடுக்கப்பட வேண்டியவை காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மச்சரம், டம்பம், தர்ப்பம், ஈர்ஷை, அசூயை, என்னும் துர்க்குணங்கள். பலிபீடத்தினருகே நின்று இத்துர்க்குணங்களைப் பலிகொடுத்துத் தூய மனத்துடன் உள் செல்ல வேண்டும்.

வெளிப்பக்கம் இருக்கும் நந்திக்கு முன்பு ஒரு பலிபீடமும் லிங்கத்துக்கு அணுக்கமாக உள் மண்டபத்திலிருக்கும் நந்திக்குப் பின்புறம் பலிபீடமும் இருக்கும். நம்மைப் பதியிடம் அணுகாமல் தடுக்கும் பலிபீடம் பாசத்தைக் குறிக்கும். அந்தப் பாசம் நாம் பதியினை யணுகினால் மறைந்து போகும்.

‘ஆயபதிதான் அருட்சிவலிங்கமாம்
ஆயபசுவும் அடலேறு எனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகு நற்பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வீரே’

‘பதி பசுபாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப்போல் பசுபாசம் அனாதி
பதியினைச் சென்ற ணுகாப் பசுபாசம்
பதி அணுகில் பசுபாசம் நிலாவே’

என்பது திருமந்திரம்.

5 பிரகாரங்கள் பஞ்சகோசங்களைக் குறிப்பதைப் போல் கருப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நானமண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் என்னும் மண்டபங்கள் உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பதைக் குறிக்குமெனக் கொள்வதுண்டு. ஆயிரக்கால் மண்டபம் மூலையிலிருக்கும் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை போன்ற உன்மணியையும், பக்கத்திருக்

கும் தீர்த்தம் மூளையின் மேற்புறமுள்ள நீர்நிலையையும் குறிக்கும்.

உடம்பினுள் இருதயம் எப்போதும் துடித்துக் கொண்டிருப்பது அம்பலக் கூத்தனுகிய நடராஜப்பெருமான் நடனத்தைக்குறிக்கும். 'தில்லை மூதூராடிய திருவடி பல்லுயிரெல்லாம் பயின்றனனுகி' என்பது திருவாசகம். நடராஜப்பெருமானுடைய பஞ்சசபா மண்டபங்களையும் பஞ்ச கோசங்களாகப் பாவிப்பதுண்டு. இராஜ சபை அன்னமய கோசத்தையும், தேவ சபை பிராணமய கோசத்தையும், நிருத்த சபை மனேமய கோசத்தையும், கனக சபை விஞ்ஞானமய கோசத்தையும், சிற் சபை ஆனந்தமய கோசத்தையும் குறிக்கும்.

'உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பாலயம்
வள்ளற் பெருமானுக்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே',

என்ற திருமந்திரத்தில் கோபுரத்தை வாய் என்ருல் நந்தியை வாய்க்குள்ளிருக்கும் நாவினுக்கு ஒப்பிடலாம். நம்முடைய நாக்கினுடைய உதவியால்தான் எப்பொருளும் உடம்பினுள் செல்லக்கூடும். அது போன்று நந்தியெம்பெருமான் அருள் பெற்றுக் கோயிலுக்குள் சென்று வழிபடுதல் வேண்டுமென்பது விதி.

எங்கும் நிறைந்து விளங்கும் பரம் பொருள் ஊனுடம்பிலுள்ள உயிரினிடத்தில் சிறந்து விளங்குகிருன். சிவமும் சத்தியுமாய் அறிவும் அருளுமாய் உயிர்காவலனுய் என்பதை விளக்கும் பின்வரும் திருமந்திரம் :—

'தான் எங்குளன் அங்குளன் தையல் மாதேவி
ஊன் எங்குளது அங்குளன் உயிர்க்காவலன்
வான் எங்குளது அங்குள மந்தமாருதம்
கோன் எங்கும் நின்ற குறிபல பாரே'.

'காயமே கோயிலாக கடிமனமடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணிலிங்கமாக'

என்ருர் அப்பர்.

'உரைசேரும் எண்பத்து நான்கு நூருயிரமாம்
யோனி பேத
நிரை சேரப்படைத்து அவற்றின்
உயிர்க் குயிராய் அங்கங்கேநின்ருன் கோயில்'

என்ருர் சம்பந்தர்.

'உடம்பினைப்பெற்ற பயனுவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக்காண்'

—ஔவையார்.

'எவ்வுயிரும் பராபரன்தன்
சந்நிதியதாகும் இலங்கு
முயிருடலனைத்தும்
ஈசன் கோயில்'

❖❖❖❖❖❖❖❖

சென்னை, கோமளீஸ்வரன்பேட்டை, ஸ்ரீகோமளீஸ்வரர் கோயிலில் 10-5-59 ஞாயிற்றுக் கிழமையன்று காலை 10 மணிக்கு சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு அ. உத்தண்டராமப் பிள்ளை ஐ.ஏ.எஸ். அவர்கள் பன்னிரு திருமுறைக்கோயிலை நடராஜப் பெருமாள் சந்நிதியில் பிரதிஷ்டை செய்தார்கள். அது சம்பந்தமாக முதல் 3 நாட்களில் திரு. நடேசனுர், திரு. நடேசநாயகர் பி. ஏ. தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம், வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் பன்னிரு திருமுறைகளின் பெருமைகளைப் பற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள். அன்று காலை 8 மணிக்கு "திருமுறைக்கோயில்" சர்வாலங்காரத்துடனும், தேவார திருப்புகழ் சபைகளுடனும் "சிவ" எனும் யானைமீது கோயில் மாடவீதிகளில் பவனி வந்தது. பிறகு 10 மணிக்கு திரு ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள், பி.ஏ., எல்.டி. "திருமுறைப் பிரதிஷ்டை"யின் அவசியத்தைப் பற்றி உரையாற்றினுர்கள். மானேஜிங் டிரஸ்டி திரு. எம். டி. மூர்த்தி அவர்கள் நன்றி கூறினுர்கள். திருவிழா 11-30 க்கு முடிவடைந்தது.

சைவம்

திரு K. வச்சிரவேலு முதலியார், B.A., L.T.,

7. சிவப்பிரகாசம்: இது உமாபதிசிவ ஞர் அருளிச் செய்த நூல்களுள் தலை சிறந்தது. சிவஞான போதத்தின் சார்புநூல் எனப்படும். முதனூலாகிய சிவஞானபோதத்தினும், வழி நூலாகிய சிவஞான சித்தியினும் எடுத்தோதாமல் குறிப்பாகக் கூறப்பட்ட பல பொருள்களை இஃது எடுத்தோதி விளக்குகிறது. பாயிரம், பொதுவதிகாரம், உண்மையதிகாரம் என்னும் மூன்று பெரும்பாகுபாடு உடையது. நூறு திருவிருத்தங்களால் ஆயது.

திருக்கயிலாய பரம்பரையில் வழிவந்த சந்தான குரவர்கள் இன்னுர் என்பது இதன் பாயிரத்தால் பெறப்படுகின்றது. மனமொழி மெய்களால் இயற்றப்படும் கிரியை என்பவை எல்லாம் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்; சிவ ஞானம் திருவருள் கண்ணுகக் காணும் காட்சியாகிய பரஞானம், அக்காட்சியை விளங்கக் கூறும் அருணூல்களாகிய அபரஞானம் என இரண்டு வகைப்படும்; சிவஞானபோதம் அபர ஞானங்களின் முடிந்த முடிபாக உள்ளது என்பவையும் பாயிரத்துள் கூறப்படுகின்றன.

பாயிரத்தில் வரும் இரண்டு திருவிருத்தங்கள் குப்பிடத்தக்கவை. ஒன்று புறச்சமயத்தவர்க்கிருளாய் எனத் தொடங்குவது. இது சித்தாந்த சைவத்தின் தனிச்சிறப்பை இனிது எடுத்து இயம்புவது. மற்றென்று அவையடக்கச் செய்யுள். அது "தொன்மைய ஆம் எனும் எவையும் நன்ருகா; இன்றுதோன்றிய நூலெனும் எவையும் தீதாகா" எனத் தொடங்குகிறது.

8. திருவருட் பயன்: இது சைவ சித்தாந்த ஞான நெறியைத் தெள்ளத் தெளிய இனிது விளக்குவது. செந்தமிழ்ப் பொது மறையாகிய திருக்குறளுக்கு ஒழிபு (Supplement) எனக் கொள்ளத் தக்கது.

பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருண்மலநிலை, அருளது நிலை, அருளுரு நிலை, அறியும்நெறி, உயிர்விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்தருள்நிலை, அணைந்தோர் தன்மை என்னும் பத்து அதிகாரங்களை உடையது. அதிகாரம் ஒன்றுக்குப் பத்துக்குறள் வெண்பாக்கள் விதம் நூறு குறட்பாக்களால் ஆயது.

'அகர வுயிர்போல் அறிவாகி எங்கும் நிகரிலிறை நிற்கும் நிறைந்து' என்பது முதற் பாட்டு;

'கள்ளத்தலைவர் துயர்கருதித் தங்கருணை
தெள்ளத்(து) அலைவர் மிக'

என்பது இறுதிப் பாட்டு.

9. வினு வெண்பா: பதின்மூன்று வெண்பாக்களால் ஆயது. இதன்கண் வரும்

"காண்பானும் காட்டுவதும்
காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி
காணர்கள்—காண்பானும்
காட்டுவதுங் காண்பதுவும்
தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர்"

என்னும் செய்யுள் சுத்தாத்வைத சித்தாந்த முத்தியினியல்பை எடுத்துரைக்கின்றது. 'ஞானம், ஞேயம், ஞாதுரு எனப் பகுத்துணர்வார்க்கு அனுபவநிலை வரவில்லை; அவை முத்திநிலையில் இல்லை என்பாரும் இன்புறு நிலையை எய்துவார் அல்லர்' என்பது இதன் பொருள்.

10. போற்றிப் பஃறொடை: இறைவன் திருவருள் உயிர்களை அநாதி கேவலத்திலிருந்து எடுத்துச் சகல நிலைக்கு உய்த்துப்

பிறப்பிறப்புட்பட்டுச் சுழல வைக்கின்றது; பின், பக்குவ நிலை யெய்திய உயிர்களை, ஞான தீக்கை செய்து சுத்த நிலை எனப்படும் பர முத்திநிலையில் உய்க்கின்றது. இவ்வாறு உயிர்களுக்குத் திருவருள் தொன்று தொட்டுச் செய்து வரும் உபகாரங்களை நினைந்து போற்றுவதாக, இந்நூல், பஃறொடை வெண் பாவால் ஆக்கப்பட்டுள்ளது.

11. கொடிக்கவி: தில்லையிலே கொடியேறும் பொருட்டுப் பாடப்பட்டது. ஒரு கட்டளைக் கலித்துறையும் நான்கு வெண்பாக்களும் ஆக ஐந்து பாட்டுக்களால் ஆயது. ஞானதீக்கையின் பயனும், திருவைந்தெழுத்தின் ஓதுமுறைகளும், பொருளும் உரைப்பது.

12. நெஞ்சுவிடு தூது: ஆசிரியர் உமாபதிசிவனார் தம்முடைய ஞானாசிரியராகிய மறைஞான சம்பந்தர்பால் சென்று மாலையை வாங்கி வரும்படி தம் நெஞ்சுக்குச் சொல்லித் தூது அனுப்புவதாகச் செய்யப்பட்டது. பல சமயங்களின் பொருணிலைகளை இது, இது என இனிது விளக்கிச் சித்தாந்த சைவத்தின் சிறப்பை உணர்விப்பது.

13. உண்மை நெறி விளக்கம்: உயிர் சகல நிலையின் நீங்கிச் சுத்தநிலை எய்தி இறைவன் திருவடியைத் தலைக்கூடும் ஞான நெறிக்கண், மேற்கொள்ள வேண்டிய ஞானச்செய்திகளைத் (1) தத்துவ உருவம், (2) தத்துவக் காட்சி, (3) தத்துவ சுத்தி, (4) ஆன்ம உருவம், (5) ஆன்மக் காட்சி, (6) ஆன்ம சுத்தி, (7) சிவ ரூபம், (8) சிவ தரிசனம், (9) சிவ யோகம், (10) சிவபோகம் என்னும் **தசகாரியங்களாக** (பத்துச்செயல்களாக) வைத்து விளக்குவது. இந்நூல் உமாபதி சிவனாரால் இயற்றப்பட்டது எனக் கொள்ளுதல் மரபாக இருந்தது. இக்கால ஆராய்ச்சி வேறு முடிபு கண்டுளது. அம்முடிவு இது சீகாழித் தத்துவநாதர் இயற்றிய தென்பது.

14. சங்கற்ப நிராகரணம்: பரமுத்தி நிலையைத் தலைப்படும் உயிர் மேற்கொள்ள வேண்டிய ஞானச் செய்திகளில் ஐயமும், மருட்கையும் விளைப்பனவாகப் பல சமயங்களின் முடிவுகள் உள்ளன. அச்சமயங்களை (1) மாயாவாதம், (2) ஐக்கியவாதம், (3) பாடாணவாதம், (4) பேதவாதம், (5) சிவசமவாதம், (6) சங்கிராந்த வாதம், (7) ஈசுவர அவிகாரவாதம், (8) நிமித்தகாரண பரிணாம வாதம், (9) சைவ வாதம் என வகைப்படுத்தி, அவற்றின் முடிபுகளைச் சங்கற்பங்கள் என வைத்துக் கூறி, அச்சங்கற்பங்களை நிராகரிக்கின்றது. இந்நூல் 13 அகவற்பாக்களையும் 1 வெண்பாவையும் உடையது.

சாலிவாகன ஆண்டு 1235 (கி. பி. 1313)-ல், திருத்தில்லையில், ஆனிப் பெருவிழாவில், ஆறும் நாளன்று சைவாகம வழி ஒழுகும் எண்மரும், மாயாவாதி ஒருவனும் தேர்மண்டபத்தில் ஒருபுறம் இருந்தனர். மெய்கண்ட தேவர் திருவருள்பெற்ற அடியார் ஒருவர் மற்றொரு பக்கம் இருந்தனர். உண்மை விழைவோன் ஒருவன் அங்குவந்து, "தம்பிரானார் திருவருணிலை எத்தன்மைத்து?" என மாயாவாதியை வினவினன். அவன் அதற்குத் தான் கற்றதை விடையாகத்தர, ஏனைய எண்மரும் அப்பேச்சிற் குறுக்கிட்டு ஒருவரை ஒருவர் மறுத்துத் தம்தம் கருத்துக்களைக் கூறினர். அன்னோர் கூற்றுகளைக் கேட்டிருந்த மெய்கண்டதேவர் அருள்பெற்ற அடியார், அவற்றை யெல்லாம் சங்கற்பங்களாக வைத்து உரைத்து, நிராகரித்து, உண்மை விழைவோனைச் "சிவப்பிரகாசச் செழுந்தமிழ் நூலை"த் திருவருள் சார்பாகநின்று சிந்தித்து உணர்ந்தால் மெய்யுணர்வு நிலையைத் தலைப்படல்கூடும் என அறிவுறுத்துகின்றார். இவ்வாறு இந்நூற்பொருள் அமைந்துள்ளது. இதனால் இதனைச் சிவப்பிரகாசத்தின் பரபக்கம் எனக் கொள்ளலாம்.

இதன் கண் நிமித்த காரணபரிணாம வாதம் என்றது சிவாத்துவித சைவம் எனவும், சைவவாதம் என்றது சுத்தசைவம் எனவும் கூறப்படும். அவை இரண்டும் சித்தாந்த சைவநெறியோடு பெரிதும் ஒத்து, சில குறியீட்டு வாய்பாடுகளாலும், முத்திநிலைபற்றிய அதிநுட்பக் கருத்துக்களாலும், வேறுபடத் தோன்றுவன ஆகும்.

இக்காலத்து இப்பதினான்கு நூல்களோடு **துகளறு போதம்** என்னும் ஞானநூலினையும் உடன்கூட்டி **மெய்கண்ட நூல்கள்** என அச்சிட்டு வழங்குவர்.

துகளறு போதம் மெய்கண்ட தேவர் வழிவந்த சீகாழிச் சிற்றம்பல நாடிகள் அருளிச் செய்தது. இது பரமுத்தி நிலையை எய்தும்

ஞான நெறிக்கண் நிற்கும் நிலைகளை பூதப் பழிப்பு முதலாகப் பரமானந்த அவசம் வரை முப்பது அவதரம் என வைத்துக் கூறுவது. இம்முப்பதில் முன் ஏழு அவதரங்கள் பாச அவதரம் எனவும், பின் பதினைந்து அவதரங்கள் பசுஅவதரம் எனவும், இறுதி எட்டு அவதரங்கள் பதிஅவதரம் என்வும் வகை செய்யப் படும்.

உண்மை நெறி விளக்கம் இதன் வழி நூல் ஆகும் எனவும், இதன்கண் கூறப்படும் முப்பது அவதரங்களும், உண்மை நெறிவிளக்கம் கூறும் தசகாரியமாய் அடங்கும் எனவும் சிந்தனை உரை கூறுகின்றது.

இதுகாறும் விளக்கம் செய்யப்பட்ட பதினைந்து ஞான நூல்களும் மெய்யுணர்வின் இயல்பும், விளைவும், பயனும் உணர விரும்புவோர் அனைவராலும் ஓதி உணரத் தக்கவை.

உள நூலில் (Psychology) ஆன்மா, (Psyche, soul, self) மனம் (Mind) என்றாற் போல வரும் சொற்களின் திட்டவட்டமான கருத்தை நிச்சயித்தற்கு இந்த நூல்களின் ஆராய்ச்சி உதவியாக இருக்கக்கூடும் என்பதை உளநூல் ஆசிரியர்களுக்குத் தெரிவித்தல் இந்து சமயப் பற்றுடையோர்க்குக் கடமை ஆகும்.

மெய்கண்ட நூல்கள் தோன்றக் காரணமாக இருந்த சூழ் நிலை:

மேலே விளக்கப்பட்ட மெய்கண்ட நூல்களின் போக்கு, நோக்கு, பொருணிலை, அருமை, பெருமை என்பவற்றை உள்ளவாறு உணரவேண்டின், அவற்றைத் தமிழகச் சமய இயக்க வரலாற்றைப் பின்னணியாக வைத்துக் கருதுதல் வேண்டும். ஆதலால், அவ் வரலாறு கீழே சுருக்கமாகத் தரப்படுகின்றது.

தமிழகத்தில், வைதிக ஒழுக்கநெறி, சமய வாழ்க்கை, இலக்கியம், பண்பாடு, கலை முதலியவற்றின் மறுமலர்ச்சி கி. பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உண்டாயிற்று என்பதும், அதற்குக் காரணமாக இருந்த பெருமக்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இரு பேராசிரியர்கள் என்பதும் சைவ இலக்கியங்கள் என்ற தலைப்பின் கீழ்க் காட்டப்பட்டன. அவ்விரண்டு ஆசிரியர்களால் வைதிக நெறிக்கு மாறுபட்ட புறச்சமய இடர்கள் நீங்கிவிட்டமையால், தமிழகத்தில் சிவ நெறியோடு பிற வைதிகநெறிகளும், திருப்பதிக வழக்கோடு வேத வழக்கும், சிவாகம வழக்கும் தலையெடுத்து வளரத்தொடங்கின. அதன் பயனாகப் பின்காணும் விளைவுகள் உளவாயின:—

1. **ஆழ்வார்கள் தோற்றம்:**—கி. பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய நம்மாழ்வார், பெரியாழ்வார், சூடிக்கொடுத்த நாச்சியார், திருமங்கை மன்னர் முதலிய திருமால் அன்பர்கள் இயற்றிய பிரபந்தங்களால் திருமாலை முதற்கடவுளாகக்கொண்டு வழிபடும் கொள்கை வளர்வதாயிற்று.

ஆழ்வார்கள் நெறி பலவகைகளில் சிவ நெறியோடு ஒத்தது. ஆயினும், அதனைச் சைவர்கள் வேறாகக் கருதி வருவதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு உள்ளன: (1) சிவ நெறியில் முதற் கடவுளுக்குப் பிறப்பு; (அல்லது அவதாரம்) கூறப்படுவதில்லை. "நால் வகை யோனிவாய்ப்பட்டுப் பிறப்பன யாவை, அவையெல்லாம் உயிர்கள் (சிவவர்க்கம்), அங்ஙனம் பிறத்தல் இல்லது யாது, அதுவே பதிப்பொருள் (முதற்கடவுள்)" என்பது சைவத்தின் அடிப்படைக்கொள்கை. ஆதலினால், கடவுளுக்கு உபசாரமாகக் கூடப் பிறப்பு உண்டு என்று கூறுதல் சைவ மரபு அன்று. ஆனால், ஆழ்வார்கள் கடவுளுக்குப் பத்து அவதாரமாகிய பிறப்பு உண்டு என்பதை உடன்பட்டவர்கள். (2) பரமுத்தி நிலையாகிய இன்புறு நிலையில் உயிர்க்கோ கடவுளுக்கோ உடம்பு உண்டு என்ற கொள்கை சைவத்தில் இல்லை. உயிர் மாயாகாரியமாகிய கருவிகரணங்களின் தொடர்பு சிறிதும் இன்றித் தன் உண்மை நிலையில் நிற்ப, அந்நிலையில் அதற்குச் சார்பாக உள்ள முதல்வன் திருவருள், பூவில் விரியும் மணம்போல விளங்கித் தோன்றி, அவ்வுயிரைத் தன் வியாபகத்தில் அடங்கக்கொண்டு, சிவவண்ணமாக்கி இன்புறுத்தும். இவ்வாறு 'ஓங்குணர்வினுள் அடங்கி, உள்ளத்துள் இன்பு ஒடுங்கத் தூங்கு' வதே பரமுத்தி நிட்டைநிலை எனச் சைவம் கூறும். ஆயின், ஆழ்வார்கள் கொள்கை 'முத்தியில் உயிர்கள் பரமபதத்தில் திவ்விய சரீரத்துடன் நித்திய சூரிகளாய்ப் பகவானது திருமேனியை விழித்தவண்ணமே கண்டு நிரதிசய இன்பத்தில் ஆழும்' என்பதாகக் கூறப்படுகின்றது.

(தொடரும்

திருப்பாணாழ்வார்

காட்டவே கண்ட பாதம்
கமலநல் லாடை உந்தி
தேட்டரு முதர பந்தம்
திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி
முனியேறித் தனிபு குந்து
பாட்டினுற் கண்டு வாழும்
பாணர்தாள் பரவி னேமே.

—திருமலைநம்பிகள்.

"பாடல் சால் சிறப்பிற் பரதத்து ஓங்கிய கோடாச் செங்கோற் சோழர்தங் குலக்கொடி" என்றும், "கோள்நிலை திரிந்து கோடை நீடி னும்தான் நிலை திரியாத் தண்டமிழ்ப்பாவை" என்றும் நல்லிசைப் புலவர் போற்றும் காவிரித் திருநதி வற்ருது பாய்ந்து வளங்கொழிக்கும் சோழ வளநாடு. அந்நாட்டை யாண்ட சோழ மன்னர்கள் ஐந்து இடங்களைத் தலை நகர்களாகக் கொண்டிருந்தனர். அவைகளில் ஒன்று உறையூர் என்பது. ஒரு காலத்தில் இங்கு யானையுடன் எதிர்த்துக் கோழி ஒன்று போர் செய்த காரணத்தில் கோழி என்றும் அவ்வூர்க்குப் பெயர் உண்டாயிற்று. 'ஊரெனப்படுவது உறையூர்' என்றும் சிறப்பிக்கப் படுவது. தருமவருமன் என்ற சோழனுக்கு மகளாய் நீளாதேவி அவதரித்த பெருமையை யுடையது. இவ்வாறு விளங்கிய உறந்தை யம்பதியில் பாணர்சேரியில் திருமாலின் திருமறுவின் (ஸ்ரீவத்ஸ) அமிசராய் ஒரு தெய்வக்குழவி அவதரித்தது; பாணர்குலத்தில் வளர்ந்தது; தம்மரபினுக்கு ஏற்ப யாழ்ப்பாடலில் வல்லவாய்த் திகழ்ந்தது. ஆதலின் **பாணர்** என்றே அழைக்கப்பட்டனர்.

இவர் மனம் எம்பெருமான் திருவடித் தொண்டில் ஈடுபட்டது. திருவரங்கத்தில் பாம்பணையிற் பள்ளிகொண்டெழுந்தருளி யிருக்கும் பரமனுக்குப் பாடல் பணி செய்ய எண்ணினர். தாம் தாழ்ந்த குலத்தவராதலின் காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையேயுள்ள திருவரங்கத் திருப்பதியில் அடிவைக்க அஞ்சினர். திருக்காவிரியின் தென்கரையிலே திருமுகத்துறைக்கு எதிராக நின்றுகொண்டு யாழிசை யெழுப்பி, தம் குரலொலியுடன் எம்பெருமான் புகழைப் பாடி வருவராயினர்.

இவ்வாறு திருப்பாணர் இசைத் தொண்டு புரிந்து வருங்காலையில் உலோக சாரங்கர் என்பார் திருவரங்கச் செல்வனுர்க்குத் திருமஞ்சனம் எடுத்துப் போகப் பொன்னித் துறையை அடைந்தனர். நீர்முகக்கும் துறைக்கருகில் நின்று இசைபாடும் பாணரை அகலச் செல்லுமாறு பலமுறை சொன்னுர். பாணர் மெய்ம்மறந்திருந்த நிலையில் அவர் செவிகளில் படவில்லை. அதனை யறிந்து கொள்ளாத அங்கிருந்தோர் அவர் மேல் கற்களை விசி யெறிந்தனர். அவர்கள் செய்கையால் அவருக்கு ஊறு ஒன்றும் உண்டாகவில்லை. உலோக சாரங்கர் திருமஞ்சனம் கொண்டு இறைவன் சந்நிதியை யடைந்ததும் எம்பெருமான் நெற்றியினின்றும் இரத்தம் பெருகுவதைக் கண்டார்; பதைபதைத்தார். அன்றிரவு உலோக சாரங்கர் கனவில் திருமகள்நாதன் தோன்றி 'நமக்குச் சிறந்த அன்பரான பாண் பெருமானை நீர் நெகிழநினைத்து நம்முடைய திருமேனியை நோகச் செய்வது தகுதியோ? அவரை நுமது தோளிலேற்றிக் கொண்டு நம் பக்கலில் கடுகக் கொண்டு வருவீர்' என்று பணித்தனர்.

மறுநாள் விடியற்காலையில் உலோக சாரங்கர் உற்றதை ஊரினுள்ளாருக்கு அறிவித்தனர். அனைவரும் உடன்வர, திருமுகத்துறையிலே வழக்கம்போல கானமழை பொழிந்துகொண்டிருக்கும் பாண்பெருமானை வணங்கி, 'நம் பெருமாளிடத்துக்குத் தேவரீரை எழுந்தருளுவித்துக் கொண்டு வரும்படி அடியேனுக்கு ஆணை பிறந்துளது' என்று கூறினர். 'இழிகுலத்தவனை யான் திருவரங்பெருநகரை மிதிக்கும் தகுதியுடையேனே' என்று கூறி மறுத்தனர். உலோக சாரங்கர் 'அப்பதியில் அடியிட வேண்டாம். என் தோளில் ஏறி யருள்க' என்று சொல்லி, அவரைத் தோளின் மேலேற்றிச் சென்று அழகிய மணவாளன் திருமண்டபத்தருகே இறக்கிவிட்டனர். எம்பெருமானின் சயனத்

திருக்கோலக் காட்சி பாண்பெருமாளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது; இறைவன் திருவருள் வெள்ளத்தில் திளைத்தார்; அத்திருவுருவின் அழகைக் கண்குளிரக் கண்டார். தாம் அங்ஙனம் கண்ட அனுபவத் திறத்தை உலகினர்க்கு உணர்த்தும் பொருட்டு 'அமலனாதிபிரான்' என்று தொடங்கும் பத்துப் பாசுரங்களைப் பாடி யருளினர். பரமனின் பாதாதிகேசப் பேரெழிலை அப்பாடல்களில் புகழ்ந்துரைத்தார். திருவரங்கநாதன் பாண்பெருமாளை அவர் திருமேனியோடு அங்கீகரித்தருளினன். திருப்பாணாழ்வாரும் யாவரும் காணும்படியாக திருமகள்நாதன் திருவடிகளிலே மறைந்தருளினர்.

திருப்பாணாழ்வார் பாடியருளிய அமலனாதிபிரான் என்ற பத்து திருப்பாடல்களும் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் முதல் ஆயிரத்துள் இடம் பெற்றுள்ளது. முதல் பாசுரத்தில் 'அரங்கத்தம்மான் திருக்கமல பாதம் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றதே' என்று எம்பெருமானின் திருவடிப் பெருமையைக் கூறுகிருர். அதில், அரங்கத்தம்மான் என்று சேஷித்வமும், கமலம் என்று போக்யத்வமும், பாதம் என்று உபாயத்வமும், உணர்த்தியருளினர். அடுத்துவரும் பாடல்களில் இறைவனுடைய பொன்னுடை, திருவுந்தி, உதரபந்தம், திருமார்பு, திருமிடறு திருவாய், திருக்கண், திருமேனி என்பவற்றில் தமக்குள்ள ஈடுபாட்டை முறையே கூறி, கடைசியில்,

'கொண்டல் வண்ணனைக் கோவலனாய்
வெண்ணெய்
உண்ட வாயனென் உள்ளங் கவர்ந்தானை
அண்டர் கோனணி அரங்கனென் அமுதினைக்
கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே'

என்று தமது துணிபை வெளியிட்டு வையகத்தோரை வாழ்வித்தருளுகிருர். இதை,

'காண்பனவு முரைப்பனவு மற்றொன் றின்றிக்
கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல்
பாண்பெருமா ளருள்செய்த பாடல் பத்தும்
பழமறையின் பொருளென்று பரவுமின்கள்'

என்று புகழப்பட்டிருக்கிறது.

மேலும், திருவரங்கத்தமுதனர் அருளிச்செய்த இராமானுச நூற்றந்தாதியில்,

'சீரிய நான்மறைச் செம்பொருள்
செந்தமி ழாலளித்த
பாரிய லும்புகழ்ப் பாண்பெரு
மாள்சர ணாம்பதுமத்
தாரியல் சென்னி யிராமா நுசன்
றன்னைச் சார்ந்தவர்தம்
காரிய வண்மையென் னாற்சொல்லொ
ணாதிக் கடலிடத்தே'

என்று பாணருடைய பாசுரங்கள் நான்மறையின் செம்பொருளைக் கூறுவன என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

திருப்பாணாழ்வார், கலி 343 (கி. மு. 2760) துர்மதி கார்த்திகை கிருஷ்ணபட்சம் துவிதியை புதன்கிழமை உரோகிணி நட்சத்திரத்தன்று அவதரித்ததாக மூவாயிரப்படி குருபரம்பரையில் கூறப்பட்டிருக்கிறது. உபதேசரத்தினமாலையில்,

'கார்த்திகையில் ரோகிணிநாள் காண்மினென்று
காசினியில்
வாய்த்தபுகழ்ப்பாணர் வந்துதிப்பால்-ஆத்தியர்கள்
அன்புடனே தானமல னாதிப் பிரானகற்று
நன்குடனே கொண்டாடும் நாள்'

என்று அவர் அவதரித்த மாதமும் நாளும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சி வல்லுநர்கள், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுக்குட்பட்ட காலத்தில் ஆழ்வார்கள் இருந்திருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். தொண்டரடிப்பொடியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், திருப்பாணாழ்வாரும் ஒரு காலத்தவராகக் கொள்ளப்படுகின்றனர். ஆகலின், திருப்பாணாழ்வார் எட்டாம் நூற்றாண்டிலோ அல்லது ஒன்பதாம் நூற்றாண்டிலோ விளங்கினர் என்று அறிஞர் எண்ணுகின்றனர்.

'உம்பர்தொழும் மெய்ஞ்ஞானத்
துறையூரான் வாழியே
உரோகிணிநாள் கார்த்திகையில்
உதித்தவள்ளல் வாழியே
வம்பவிழ்தார் முனிதோளில்
வந்தபிரான் வாழியே
மலர்க்கண்ணை மற்றொன்றில்
வையாதான் வாழியே

✳ திருப்பாதிரிப்புலியூர் ✳

ஈன்றுளு மாயெனக் கெந்தையு
மாயுடன் தோன்றினராய்
மூன்று யுலகம் படைத்துகந்
தான்மனத் துள்ளிருக்க
ஏன்று லிமையவர்க் கன்பன்
திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றுத் துணையா யிருந்தனன்
தன்னடி யோங்களுக்கே

—திருநாவுக்கரசர்.

முன்னம்நின்ற முடக்கால்
முயற்குருள் செய்துநீள்
புன்னைநின்று கமழ்பா
திரிப்புலி யூருளான்
தன்னைநின்று வணங்குந்
தனைத்தவ மில்லிகள்
பின்னைநின்ற பிணியாக்
கையைப்பெறு வார்களே

—திருஞானசம்பந்தர்.

“பாடல் பெற்ற சிவத்தலங்கள் சோழநாடு, பாண்டிய நாடு, மலைநாடு, தொண்டைநாடு, நடுநாடு, துளுவநாடு, கொங்குநாடு, வடநாடு, ஈழநாடு என்ற ஒன்பது பகுதிகளில் உள்ளவைகளாக ஆன்றோர் பிரித்திருக்கின்றனர். அவைகளில் ஒன்றான நடுநாட்டில் 22 சிவத்தலங்கள் இருக்கின்றன. நடுநாட்டின் ஒரு பகுதியான திருமுனைப்பாடி நாட்டைப் பற்றி “அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும் பிறந்தருள உளதானல் நம்மளவோ பேருலகில் சிறந்த திருமுனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு” என்று கூறுகிறார். அத்தகைய நடுநாட்டில் பாடல்பெற்ற தலங்களுள் நடு நாயகமாய் விளங்குவது திருப்பாதிரிப்புலியூர் என்ற சிவப்பதி. இது திருப்பாதிரிப்புலியூர் (Cuddalore N. T.) இரயில் நிலையத்திற்கு மேற்கே கால்மைல் தொலைவிலிருக்கின்றது; கெடிலநதியின் தென்கரையில் உள்ளது.

இத்தலம் திருப்பாப்புலியூர் என்று சாதாரணமாக அழைக்கப்படுகிறது. திருப்பாதிரிப்புலியூர் என்பதே இதன் சரியான பெயர். பாதிரி மரம் தலவிருட்சமான படியாலும், புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்) இங்கு வழிப்பட்டுப் பேறுபெற்றமையாலும் இப்பதிக்குப் பாதிரிப்புலியூர் என்ற பெயர் உண்டாயிற்றென்பர். வடபுலியூர் என்றும் வழங்கப்படும். அருணகிரிநாதர் தம் திருப்புகழில், பாடலவளநகர் என்ற பெயரைச் சொல்கிறார்.

கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. கோயிலின் வாயிலை கோபுரம் ஒன்று அழகு செய்கிறது. இறைவனின் திருநாமங்கள் தோன்றுத்துணை நாதர், பாடாலீசுவரர் என்பன. கல்வெட்டுக்களில் திருக்கடைநாழனுடையார் என்றிருக்கிறது. கோயிலின் வெளிப்பிரகாரத்திற்கு வடபால் அம்பிகை கோயில் கொண்டெழுந்தருளியுள்ளாள். கிழக்கு பார்த்த சந்நிதி; தனிவாயிலும் உண்டு. தோகையம்பிகை, பெரியநாயகியம்மன் என்பவை அம்பாளின் திருநாமங்கள். தலவிருட்சம் பாதிரி மரம். தீர்த்தம் கெடிலநதியும், சிவகர தீர்த்தமும் ஆம்.

பல்லவ மன்னன் சமணர்களின் தூண்டுதலின் பேரில் திருநாவுக்கரசருக்குப் பலவித இன்னல்களை இழைத்தான். அவைகளால் அவருக்கு எந்த தீங்கும் நேரிடவில்லை. கடைசியாக அவரைக் கல்லில் கட்டிக் கடலில் தள்ளினர். அப்பரடிகள் ‘ ‘எப்பரிசாயினும் ஆக எந்தையை ஏத்துவ’னென்று,

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்

அம்புவியில் மதிலரங்கா
அகம்புகுந்தான் வாழியே
அமலனுதிப் பிரான்பத்தும்
அருளினன் வாழியே
செம்பொனடி முடியளவும்
சேவிப்போன் வாழியே
திருப்பாணன் பொற்பதங்கள்
செகதலத்தில் வாழியே’

கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

என்ற திருப்பதிகத்தை ஓதிக்கொண்டு கல்லே சிவிகையாக எம்பெருமான் திருவருட்டுணை யால் இத்தலத்தில் கரையேறினர். இதைச் சேக்கிழார் பெருமான்,

வாய்ந்தசீர் வருணனே வாக்கின் மன்னரைச்
சேர்ந்தடை கருங்கலே சிவிகை ஆயிட
ஏந்தியே கொண்டெழுந் தருள வித்தனன்
பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில்

என்று கூறியிருக்கிறார். இவ்வற்புதச் செய்தி இத்தலத்திற்குத் தனிச்சிறப்பையும், மிக்க பெருமையையும் தருகின்றது. அப்பர் பெரு மான் கரையேறிய இத்தலத்தின் பகுதியை இன்றும் மக்கள் கரையேற விட்டகுப்பம் என்று வழங்குகின்றனர். மேலும், வாகீசர் கரை ஏறிய ஐதிக உற்சவம் ஆண்டுதோறும் சித்திரை மாதம் அனுஷ நட்சத்திரத்தில் கரையேற விட்ட நகரில் நடைபெற்று வரு கின்றது.

அப்பர் சுவாமிகள் இப்பதியைப் பற்றி ஒரு பதிகம் ஓதியருளியிருக்கிறார். இது அவர் கடலினின்றும் கரையேறியதும் பாடியதாக வரலாறு. முதல் பாட்டு 'ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்' என்று தொடங்கி, 'தோன்றாத் துணையாய் இருத்தனன் தன்னடி யோங்களுக்கே' என்று முடிக்கிறார். "தேய மெல்லா நின்றிறைஞ்சும் திருப்பாதிரிப்புலி யூர்' என்றும், 'பண்ணார்ந்தமைந்த பொருள் கள் பயில் பாதிரிப்புலியூர்' என்றும், "தொழு வார்க்கிரங்கியிருந்தருள் செய்பாதிரிப்புலியூர்' என்றும் கூறுகிறார். ஒரு பாடலில், 'புழு வாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரம் தரவேண்டும்' என்று வேண்டுகிறார். மற்றொரு பாசுரத்தில் 'திருவாய்ப் பொலிய சிவாயநம வென்று நீற ணிந்தேன்' என்று திருநீறு அணிந்துகொள் ளும் முறையை அறிவுறுத்துகிறார்: உலகம் பாதலத்தில் போய், கடல்மூடி, திசைகெட்டு, சூரிய சந்திரர்கள் வீழ்ந்தபோதிலும் இறை வன் திருவடிகள் இருப்பதால் நெஞ்சத்தை அஞ்சவேண்டாம் என்று வேறு ஒரு பாட்டில் சொல்கிறார். இன்னும், காப்புத் திருத்தாண் டகத்தில் 'சிறையார் புனற்கெடில வீரட்டமும் திருப்பாதிரிப்புலியூர் திருவாமாத்தூர்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு ஒரு பதிகம் அருளியிருக்கிறார். முதற்பாடலில் 'முன்ன நின்ற முடக்கான் முயற்கருள் செய்' என்று கூறியிருப்பது, மங்கண முனிவர் என் பவர் சாபத்தால் முயல் உருவம் அடைந்து இத்தலத்தில் இறைவனை வழிபட்டு அருள் பெற்றதைக் குறிக்கும் என்பர். 'போதினு லும் புகையாலும் உய்த்தேயடியார்கள் தாம் போதினலே வழிபாடு செய்யப்புலியூர்' என் றும், 'அன்னந்தாவும் அணியார் பொழில் மணியார் புன்னே பொன்னந்தாது சொரி பாதிரிப்புலியூர்' என்றும் கவினுறப் புகழ்ந் துள்ளார். 'பாதிரிப்புலியூர்தனை உள்ள நம் மேல் வினையாயின ஒழியுங்களே' என்று ஒரு பாசுரத்தில் கூறுகிறார்.

அருணகிரிநாதர் ஒரு திருப்புகழில் இப்பதி யைப் பாடியிருக்கிறார். அதில், இறைவி இத் தலத்தில் தவம் செய்ததை 'அமலைமுன் அரிய தவஞ்செய் பாடல வளநகர்' என்ற குறிப் பால் உணர்த்துகிறார்.

இலக்கணம் சிதம்பரநாத முனிவர் இயற்றிய தலபுராணம் இப்பதிக்கு உண்டு. பார்வதிதேவி தவம் செய்ய இறைவன் பாதிரி மரத்தின் கீழ் ஜோதியாய்க் காட்சியளித்தது, புலிக்கால் முனிவர் பூசித்தது, முயல் உருவடைந்த மங் கணமுனிவர் வழிபட்டுச் சாபம் நீங்கியது, மாணிக்க வாசகருக்காக கோயிலுக்குத் தென் பால் ஓடிய கெடிலநதி வடபுறம் ஓட இறை வன் அருளியது, அப்பரடிகள் கல்லே புணை யாகக் கொண்டு கரையேறியது முதலியவை களை இப்புராணம் கூறுகிறது.

தொல்காப்பியத் தேவரென்னும் புலவர் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் என்னும் அரிய நூலை இயற்றியுள்ளார். இக்கலம்பகத்தை இரட்டையர்கள்,

தொல்காப்பியந் தேவர் சொன்ன
தமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு
நாமுரைப்ப தேறுமோ

என்று புகழ்ந்துரைத்திருக்கின்றனர். 'பண் பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்' என்று கலம்பகம் பாடுவதில் மிகவும் வல்லவர்களாகச்

சொல்லப்படும் இரட்டைப் புலவர்களே இந் நூலைச் சிறப்பித்தனர் என்றால் இதன் பெருமையைக் கூறவும் வேண்டுமோ?

"வெண்ணீறணிந்த அண்ணல் வீற்றிருக்கும் பாதிரிப்புலியூரைச் சார்ந்து அவன் புகழ் பாடி ஏத்துமின்கள்" என்ற கூற்றினால் இப் பதியின் மகிமை நன்கு விளங்கும்.

திருப்பாதிரிப்புலியூர்க் கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை கி. பி. 10-ஆம் நூற்றாண்டுமுதல் 13-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தவை. பரகேசரி வர்மன் (905-47), இராஜராஜன் (985-1013), இராஜேந்திரன் (1011-53), இராஜ மகேந்திரன், வீரராஜேந்திரன், முதற் குலோத்துங்கன் (1070-1118), விக்கிரமபாண்டியன், விஜயநகர மன்னன் வீரவிருபண்ணன் இவ்வரசர்களின் ஆட்சிக்காலத்தில ஏற்பட்டவை. அவைகளில் கோயிலுக்கு விளக்குகளுக்காகப் பொன், ஆடு, விளக்குகள், பூசைக்காகப் பொன், நிலம், நந்தவனம் முதலிய வற்றிற்காகத் தானங்கள் வழங்கப்பட்டதைக் கூறப்பட்டிருக்கிறது. விக்கிரம பாண்டியனுடைய கி. பி. 1285-1287 ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கோயில் நிலத்தைச் சில பிராமணர்கள் அனுபவித்து வந்ததை திரும்பக் கைப்பற்றிக் கோயிலுக்கு வழங்கியதைக் குறிக்கப் பட்டிருக்கிறது. இதிலேயே கோப் பெருஞ்சிங்கன் என்ற அரசனைப் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. விஜயநகர வீரவிருபண்ண மன்னன் கல்வெட்டில் புஷ்பகிரிமடம் என்று வருகிறது. அது வித்தியாரண்யர் காலத்தில் ஏற்பட்ட சங்கரர் மடத்தின் ஒரு கிளைமடம் என்று சொல்லப்படுகிறது. ஒரு கல்வெட்டு நிலை விற்பனையைப் பற்றிக் கூறுகிறது.

சித்திரை மாதத்தில் பத்துநாட்கள் அப்பர் உற்சவமும், கரையேறி ஐதிக விழாவும், வைகாசி மாதத்தில் பிரமோற்சவமும், மற்ற மாதங்களில் சிவாலயங்களில் வழக்கமாக நடைபெறும் விழாக்களும் இத்தலத்தில் நடைபெறுகின்றன. தைஅமாவாசையில் கடலில் தீர்த்த வாரியும் உண்டு.

நிணமொடு குருதி நரம்பு மாறிய
நசைகுடல் மிடையு மெலும்பு தோலிவை
நிரைநிரை செறியு முடம்பு நோய்படு
முதுகாயம்

நிலைநிலை யுருவ மலங்க ளாவது
நவதொளை யுடைய குரம்பை யாமிதில்
நிகழ்தரு பொழுதில் முயன்ற மாதவ
முயல்வோரும்

உணர்விலி செபமு நலொன்று தானிலி
நிறையிலி முறையி லியன்பு தானிலி
உயர்விலி யெனினு மெனெஞ்சு தானினை
வழியாமுன்

ஒருதிரு மரக தநுங்க மாமிசை
யுறுமுக மொளிவி டவந்து நான்மறை
புபநிட தமதை விளங்க நீயருள்
புரிவாயே

புணரியில் விரவி யெழுந்த ஞாயிறு
விலகிய புரிசை யிலங்கை வாழ்பதி
பொலமணி மகுட சிரங்கள் தாமொரு
பதுமாறிப்

புவியிடை யுருள முனிந்து கூர்கணை
யுறுசிலை வளைய வலிந்து நாடிய
புயலதி விறல ரிவிண்டு மால்திரு
மருகோனே

அணிதரு கயிலை நடுங்க வோரெழு
குலகிரி யடைய இடிந்து தூளெழ
அலையெறி யுததி குழம்ப வேல்விடு
முருகோனே

அமலைமு ளரிய தவஞ்செய் பாடல
வளநகர் மருவி யமர்ந்த தேசிக
அறுமுக குறம களன்ப மாதவர்
பெருமாளே

—அருணகிரிநாதர்.

அம்பாசமுத்திரம் ஸ்ரீ காசிவிசுவநாதசாமி கோயிலுக்குப் பாத்தியப்பட்ட ஸ்ரீ அம்மையப்பர் ஆலயத்தில் 27-3-59 வெள்ளியன்று ஓதுவாமூர்த்திகள், தேவாரம், சிவபுராணம் முதலிய பன்னிரு திருமுறைகளை ஓதிவர, "பன்னிரு திருமுறைகளை" அலங்கரித்து ஊர்வலமாக எடுத்து வந்து நெல்லை அறநிலையத் துறை உதவி ஆணையாளர் திரு. டி. எச். விவேகானந்தம்பிள்ளை, பி. ஏ., எல். டி., அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அத்துடன் சமய நூல் நிலையத்தையும் திறந்து வைத்து, திருமுறையின் பெருமை பற்றியும் சமய நூல் நிலையத்தின் அவசியம் பற்றியும் அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள். அறங்காலவர்கள் குழுத்தலைவர் திரு. ஏ. நடராஜ முதலியார் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார்கள்.

அருளாளப்பெருமாள்

(நின்ற திருக்கோலம்)

"வடக்கே காசி, தெற்கே காஞ்சி" என்று கூறுவதுண்டு. முத்திதரும் நகரங்கள் ஏழு உண்டு என்றும், அவற்றுள் ஒன்று காஞ்சிஎன்றும் கூறுவோருமுண்டு.

முத்திதரும் நகர்ஏழில்
முக்கியமாம் கச்சி

என்று கூறுவதிலிருந்தும் காஞ்சியின் சிறப்பு ஒருவாறு புலனாகும். காஞ்சிக்கு ஒரு தனிச் சிறப்புதேவாராஜப் பெருமாள் என்றும் வரதராஜப் பெருமாள் என்றும் மக்கள் போற்றும் அருளாளப் பெருமான் கோயில் கொண்டிருப்பதாகும் என்பது வைணவர் கருத்து.

மூர்த்தியும் கீர்த்தியும்

பொதுவாக வேதாந்திகள் விக்கிரக வழிபாட்டைச் சமய ஞான ஏணி ஏற்றத்தில் ஒரு கீழ்ப்படியாகக் கருதுவார்கள். ஆனால் உபய வேதாந்தக் கொள்கைகளையுடைய வைணவர்களோ விக்கிரகத்தை இறைவனது அர்ச்சா ரூபம் என்று மதிக்கிறார்கள். 'உபய வேதாந்தம்' என்பது வடமொழி வேதத்தையும் (அதாவது சுருதி என்ற வேதத்தையும் உபநிஷதங்களையும்) தமிழ்ப் பிரபந்தங்களையும் குறிப்பதாகும். 'அர்ச்சாரூபம்' என்பது கடவுள் தன் பேரருளால் விக்கிரகத்திலும் அவதரித்து (இறங்கி)க் காட்சிதரும் நிலையைச் சுட்டிக் காட்டுகிறது.

இராமாவதாரத்தில் இராமனாகவும் கிருஷ்ணவதாரத்தில் கிருஷ்ணனாகவும் காட்சி வழங்கிய இறைவன் அர்ச்சாவதாரம் என்ற நிலையில் அர்ச்சை அல்லது விக்கிரக மூர்த்தியாகக் காட்சி வழங்குகிறான் என்று வைணவர்கள் நம்புகிறார்கள். இராமாவதாரம் கிருஷ்ணவதாரம் முதலான அவதார காலங்களில் இறையருள் மழை போலப் பொழிந்தது என்பர். ஆனால் மழை ஓய்ந்தபின், அம்மழை நீர்த் தேங்கி நிற்கும் மடு அல்லது குளம்தானே பயன் தரக் கூடும். இத்தகைய நீர்நிலைதான் அர்ச்சாவதாரம் என்ற விக்கிரக நிலை. இக் கருத்தை அவதாரத்திலே தேங்கின மடு அர்ச்சாவதாரம்' என்று ஒரு சூத்திர வடிவில் வெளியிடுவதுண்டு.

அர்ச்சாவதாரம் என்ற விக்கிரக நிலை இறைவனது பேரருளுக்குச் சான்றாக இருப்பதால் அறிஞர்களுக்கு விக்கிரக வழிபாடு அவசியம் இல்லை என்ற அறிவு மதக் கொள்கையை வைணவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. விக்கிரகமூர்த்திகளைப் பொதுவாக அருளாளனாகிய திருமாலின் 'அர்ச்சை அவதாரம்' என்று கருதும்போது, 'அருளாளப் பெருமான்' என்று சிறப்பித்துச் சொல்லப்பெறும் வரதராஜப் பெருமாளுக்கு ஒரு தனிச் சிறப்பு ஏற்படத்தான் செய்கிறது. எனவே அருளாளப் பெருமானின் திருக்கோலத்தையும் அதன் உட்பொருளையும் குறித்துச் சிந்தித்துப் பார்ப்பது பக்தர்களுக்கு ஒரு சிறந்த நற்பயன் விளைவிக்கும் காரியம்தான்.

உண்மையான பக்தி ஞானபக்திதான், மூடபக்தி அன்று. இதயத்தை வசிகரிப்பதுடன் அறிவுக்கும் விருந்தாகிறதுபக்தி. காஞ்சிபுரத்து ஸ்ரீவரதராஜப் பெருமாளை அர்ச்சாவதார நிலை வழிபடும் பேறு பெற்றிருக்கும் பொழுது வைகுண்ட வாசத்தையும் தாம் விரும்பவில்லை என்று உறுதி கூறிய வேதாந்த தேசிகரின் அறிவுக் கூர்மையை அறியாதார் யார்?

'அருளே அழகு, அழகே அருள்' என்று சொல்லும்படி அருளாளப் பெருமாள் பேரழகராகவும் காட்சி வழங்குகிறார். இந்த உண்மையைப் புலப்படுத்தவே பெருமாளை அலங்கரிக்கிறார்கள்; விழாக் காலங்களில்

விசேஷமாக அலங்கரிக்கிறார்கள்; காஞ்சி புரத்து வரதரின் கருடோத்ஸவம் என்றால் அது தேசப் பிரசித்தமான ஒரு பெரு விழா. மாட்டுப் பொங்கலன்று (ஒவ்வொரு தை மாதம் இரண்டாம் தேதியிலும்) நடைபெறும் திருவிழாவும் அன்பர்களின் அழகுணர்ச்சிக்குப் பெருந் தூண்டுகோலாக உதவும் முறையில் கொண்டாடப்படுகிறது. வரதராஜரின் தோட்ட உத்ஸவமும் இப்பெருமானின் அழகுக் கோலத்தையும் அருட்கோலத்தையும் அன்பருக்கு உணர்த்துவதுதான். சுருங்கச் சொன்னால், 'அழகிற் சிறந்த அருளாளன் மஹோத்ஸவங்கள் எல்லாமே அழகு' என்று ஒரு நவீன பக்த ரசிகர் கூறியிருப்பது பொருத்தம்தான்.

உலகிலுள்ள அழகுகளெல்லாம் இறைவனுடைய எல்லையில்லாத அணிகளாகும். இதை நினைவூட்டப் பெருமானை ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கிறார்கள். விழாக் காலங்களில் வெகு அழகாகவும் கம்பீரமாகவும் அலங்கரிக்கிறார்கள். பூமாலைகளாலும் சிறப்பாக அலங்கரிக்கிறார்கள்.

> வண்மையுடன் வரம்தருவார்
> வந்தார் நாமே

என்றும,

> நருமவழி அழியாமல்
> காப்பார் வந்தார்

என்றும் திருச்சின்னம் ஊத, பெருமாள் புறப்படும் அழகு அன்பர் உள்ளங்களை வசிகரித்து மலரச் செய்கிறது.

கண்ணனுடைய நடையை மானசிகமாக அனுபவித்த பெரியாழ்வார், 'வாரணம் (யானை) பைய நின்று ஊர்வதுபோல்' என்று அந்த நடையை வருணிக்கிறார். இந்த ஆழ்வாரின் திருமகளான கோதையோ சிங்கம் புறப்பட்டு வருவதுபோல் கண்ணன் நடையிட்டு வருவதை வருணித்திருக்கிறாள். நின்ற திருக்கோலத்து வரதராஜப் பெருமாள் எழுந்தருளும் போது மேலே சொன்ன இருவகை நடைகளின் கம்பீரமும் நினைவிற்கு வருகிறது அடியவர்களுக்கு.

நின்ற நிலை

இது நடையழகு என்றால் நின்ற நிலையழகை என்னென்பது? இந்த நிலையே இப்பெருமான் மறைகளும் அறிய முடியாத ஒருவர் என்பதையும், முத்தி தரவல்ல முதல்வர் என்பதையும், 'உயர்வற உயர் நலம்' உடையவர் என்பதையும், அன்பர்களை அழகாலும் அருளாலும் ஆட்கொள்ளும் பெருந்தெய்வம் என்பதையும் புலப்படுத்துகிறது என்பர்.

நின்ற கோலத்தில் அருளாளரின் அடியிணைச் சிறப்பை அனுபவிக்கும் பக்தர்கள் 'அருளின் அறிகுறி இத்திருவடிகளே' என்பர். இப்பாதமலருடன் தங்கள் நெஞ்சில் மலரும் அன்பு மலரைச் சேர்த்துப் பூசிப்பர். இத்திருவடிகளைத் 'தாயகம்' என்று ஆறுதல் அடைவர்.

திருவடி முதல் திருமுடிவரை இத்திருக் கோலத்தைத் தரிசிக்கும் உண்மை சுபாவத்தை இந்த அழகும் அருளும் என்ன பாடு படுத்துகின்றன தெரியுமா?

> உள்ளுவர் ஆனந்தக் கண்ணீர்
> உகுப்பர், உகந்தெழுந்து
> துள்ளுவர், பாடுவர், ஆடுவர்
> உண்மைச் சுபாவத்தரே.

என்பது அருளாளப் பெருமானின் நின்ற திருக்கோலத்தை அனுபவித்த ஒரு மெய்யன்பரின் வாக்கு.

இப்பெருமானைத் தரிசித்து வரம்பெற வந்தவர்கள் 'இப்படி உன்னை வாழ்த்தி வணங்கும் வரம் பெறுவதே போதும், போதும்' என்கிறார்களாம். 'பேரின்பப் பெருங்கடலே இப்படி இந்த நிர்மல மூர்த்தியாகக் காட்சி அளிக்கிறது!' என்று பரவசமாகிறார்களாம். 'அஞ்சல்' என்று அருளும் திருக்கோலம் இது எனப் பூரித்துப் போகிறார்களாம்.

சற்றே சாய்ந்து நிமிர்ந்த கொண்டையுடன் காட்சிதரும் முக மண்டலத்தைத் தரிசிக்கும்பொழுது,

> மையல் ஏற்றி மயக்க உன்முகம்
> மாயமந்திரம் தான்கொலோ?

என்ற ஆண்டாள் வாக்கு நினைவிற்கு வருகிறது. இந்த முகச்சோதியின் அழகு வெள்

ளத்திற்கு அணையிடுவது போல் காணப்படு கின்றன குண்டலங்கள். இந்த நிலையில் அப யம் அளிக்கும் திருக்கை தரிசிக்கத் தரிசிக்க ஆறுதல் அளிப்பது பக்தர்களுக்குக் கண் கூடான அனுபவம்.

மாலையும் தோளுமாகக் காணும் அந்த அழகைத்தான் என்னென்பது?

தோள்கண்டார் தோளே கண்டார்!

என்ற அனுபவம்தான். கை அபயமளிக்கத் தோள்களின் ஆண்மை அழகும் கம்பீரமும் துணை புரிகின்றன.

அகன்று பரந்த திருமார்பின் பொலிவும் அணிமணிகளும், அன்பர்களை அணைத்துக் காக்கும் பரஞ்சுடரின் தனிப்பெரும் கரு ணையை நினைவூட்டுகின்றன. உடனே,

கரைக்(கு) அடங்காக் கருணைக்கடலே!
என்தன் கண்மணியே!

என்று போற்றத் தோன்றுகிறது பக்தமணி களுக்கு.

வாழி வரதன், அருளாளன்
என்னும்நம் வானவர்கோன்!

என்று வாழ்த்தவும் தோன்றுகிறது.

திருவடிச் சிறப்பு

வரதராஜப் பெருமாளின் நின்ற திருக் கோலத்தில் முதல் ஆனந்தம் தருவது திரு வடியின் காட்சியல்லவா? "இத்திருவடிகளை அல்லவா துயர் அறு சுடர் அடி" என்று ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் வரு ணித்திருக்கிறார்? என்று எண்ணத் தோன்று கிறது. இந்த எண்ணத்துடன் இத்திருவடி கள் முதல் திருமுடிவரை மேனியின் பூரணப் பொலிவை ஆபரணங்களுடனும் பூமாலையுட னும் சேவிப்பதுடன், பூக்கள் எல்லாம் களை யப்பெற்ற நிலையிலும் ஏகாந்த சேவையாக அனுபவிப்பதில் பக்தர்களுக்கு ஆசை உண்டு.

'உண்மை அலங்கரிக்கப் பெறாத நிலை யில் மிகவும் அதிகமாய் அலங்கரிக்கப்பெற் றதுபோலக் காண்கிறது!' என்று ஆங்கிலத் தில் கூறுவதுண்டு. மெய்ப்பொருளான அருளாளப் பெருமாளும் பூக்களை எல்லாம் களைந்த நிலையில், சங்கும் சக்கரமுமாய்க் காட்சி வழங்கும்போது 'இதுவோ பேரழகு!' என்ற ஒரு மகத்தான உணர்ச்சியைத் தோற்றுவிக்கிறார். இந்த அனுபவத்தைத் திருவாளர் டி. இராமசுவாமி ஐயங்கார் என்ற அறிஞர் 'வரதராஜப் பெருமாளின் தோட்ட உத்ஸவம்' என்ற சிறு நூலில் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

'ஆபரணங்களுக்கு ஆபரணமான பெரு மாள்' என்று பெருமாளைக் குறிப்பிடுவதும் உண்டு. உண்மையே அழகாய் இருக்கும் பொழுது, உண்மைக்கு வேறு அழகும் வேண் டுமோ? இத்தகைய உணர்ச்சியைத் திருமஞ் சன வேளையிலும் பக்தர்கள் பெறக்கூடும்.

இப்பெருமானுடைய திருவடிகளைத் 'துயர்அறு சுடர் அடி' என்று நம்மாழ்வார் சிறப்பித்துப் பேசுவதன் பொருள் என்ன? பக்தர்களுடைய துயரங்களைப் போக்கும் வழி கள் என்று சாதாரணமாக நினைக்கக்கூடும். இது சரியன்று என்பது வைணவப் பேரறி ஞர்களின் கருத்து. அருளாளன் தன் துய ரைப் போக்கிக்கொள்ளுகிறானும் தன் திருவடி களாலே. இது எப்படி?

பெருமாளுக்கும் துயரம் இருக்க முடி யுமா? அருளாளராக இருப்பதால் இவருக்கும் ஒரு துயரம் இருக்கிறதாம். அதாவது எல் லாரும் நம் அருளுக்கு இலக்காகவில்லையே என்ற துயரம்தான். அகன்று பரந்து எடுப் பாகக் காணும் அந்தத் திருமார்பிலே இத் துயரம் குடிகொண்டிருக்கிறதாம். இத்துய ரத்தைப் போக்குவது எளிமைக்கு அறிகுறி யான திருவடிதான்.

திருமுடி அருளாளரின் பெருமைக்கு அறிகுறி, அகிலலோக ஆட்சிக்கு அறிகுறி. இந்த முடிச்சோதியைக் காட்டிலும் பக்தர்க ளுக்குத் தாரகமாவது அடிச்சோதிதான். ஆகவேதான் நம்மாழ்வார் 'துயர் அறு சுடர் அடி' என்று அடிச்சோதியின் எளிமைச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறார்.

முன்னழகும் பின்னழகும்

'முன்பிலும் பின்பழகிய பெருமாள்' என்ற சொற்றொடரும் பெருமாளின் அழகு குறிக்க வழங்கப்படுகிறது.

மைவண்ண நறுங்குஞ்சிக்
குழல்பின் தாழ

என்ற திருமங்கை யாழ்வாரின் வருணனையை நினைவில் வைத்துக்கொண்டால், பெருமாளின் முன் பக்கத்து அழகுடன் பின்பக்கத்து அழகையும் உணரத் தொடங்கலாம். இக்காட்சியையும் வரதராஜப் பெருமாளின் நின்ற திருக்கோலத்தில்—'கேசபாசங்கள் ஒரு முடியாகச் சேர்க்கப்பட்டுத் திருத்தோள்களிலும் திருமுதுகிலுமாகத் தவழும்' நிலையில்—கண்டு களிக்கலாம். வரதராஜரின் முன் சேவையைப் போல் பின் சேவையும் அழகு வாய்ந்ததே.

உண்மை அழகாகவும் அருளாகவும் வெள்ளமிடும்பொழுது, முன் எங்கே?—பின் எங்கே? இத்தகைய அழகனை 'என் நெஞ்சம் கோயில் கொண்ட பேரருளாளன்' என்பர் திருமங்கையாழ்வார். இப்படி நெஞ்சுள் இருக்கும்பொழுதும் முன்னழகு என்றும் பின்னழகு என்றும் வேறுபடுத்திப் பேசமுடியுமா?

தத்துவ அமுது

அருளாளப் பெருமானின் திருவடிக் கீழ் 'பூண்ட அன்பாளன்' என்று இராமாநுஜரைக் குறிப்பிடுகிறது இராமாநுஜ நூற்றந்தாதி. இப்பெருமானின் நின்ற திருக்கோலம் உணர்த்திய தத்துவம் இராமாநுஜர் கண்ட வைணவமாக விரிந்திருக்கிறது என்றால் இத்தத்துவத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டுவது எளிதன்று.

இப்பெருமாளின் மகுடத்தையும் வதனத்தையும் திருமார்பையும் திருவடிகளையும் தரிசித்தவர்கள், இத்திருக்கோலத்தின் தத்துவமாகக் கண்ட பொருளைப் பின்வருமாறு வெளியிடுகிறார்கள்:

உருவில் உறை கின்ற உயிரென
அடியவர் உகந்த அமுதென
அருமறைகள் ஒன்றி அடிதொழ
அருள்வரதர் நின்ற பெருமையே.

உலகம் எங்கும் உயிர்க்குயிராக இருக்கும் பெருமான் அடியவர் உகந்த அமுதாகவும் இருக்கிறான். அழகும் அருளும் அடியவர்களுக்கே சிறப்பாகப் பயன்படும் என்பது குறிப்பு.

அத்திகிரி அருளாளர்க்(கு)
அடைக்கலம்நான் புகுந்தேனே

என்று அடைக்கலம் புகுவோர்க்கே இறையருள் அமுதமாகத் தன்னைத்தானே வழங்குகிறதாம்.

இத்தகைய அருள் தரும வழியை அழியாமல் காப்பாற்றுகிறது என்றும், வானேற வழிதந்தும், வண்மையுடன் வரம் தந்தும் உலகத்தை வாழ்விக்கிறது என்றும் வேதாந்த தேசிகர் கூறியுள்ளார். அனைத்துலகும் காக்கும் திருவருள்தான் அருளாளப் பெருமாள் என்ற நின்ற திருக்கோலத்தில் காஞ்சியில் காட்சி தருகிறது என்பது வைணவர்களின் நம்பிக்கை.

சென்னை ஸ்ரீ வடபழநி ஆண்டவர் தேவஸ்தானத்தில் இவ்வருஷம் மார்ச்சு மாதம் 16 தேதி முதல் 24 தேதி வரையில் பங்குனி உத்திர இலட்சார்ச்சனையும், முதல் தடவையாக மாதம் 25 தேதி முதல் 27 தேதி வரையில் தெப்போற்சவமும் வெகு சிறப்பாக நடைபெற்றன. ஆறுஇலட்சத்து பன்னிரண்டாயிரம் அர்ச்சனைகளும் நடைபெற்றன. ஷை தெப்போற்சவத்தை சுமார் ஒரு இலட்சம் சேவார்த்திகள் கண்டு ஆனந்தித்தார்கள். தெப்போற்சவத்தை கனம் அறநிலைய அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் திரு. சர். பி. டி. இராஜன், எம். எல். சி., அவர்கள், சென்னை மேயர் திரு. கே. கமலக்கண்ணன் அவர்கள் மூன்று நாட்களிலும் முறையே ஆரம்பித்து வைத்தார்கள். புது ஆண்டுப்பிறப்பன்று (14-4-49) பால் விநியோக விழாவில் 120 படி பால் ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்து ஏழைக்குழந்தைகளுக்கும் சேவார்த்திகளுக்கும் அறநிலைய ஆணையர்திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களின் மனைவியார் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டு சுமார் ஓராயிரம் குழந்தைகளுக்கும் சேவார்த்திகளுக்கும் பால் வழங்கப்பட்டது.

— செய்திகள் —

சென்னை, ஸ்ரீ சென்னை கேசவப் பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவ விடையாற்றி விழா 2-5-59 முதல் 11-5-59 முடிய நடைபெற்றது.

பழநி, ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி கோயிலில் 2-5-59ந் தேதி சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில், அடிவாரம் பள்ளியறைத்தோட்டத்தில் தண்டபாணி நிலையத்திற்கு கல்நாட்டு விழாவும், மலைக்கோயில் முன் மண்டபத்தில் இரண்டாவது நாதசுர இசைப் பயிற்சியாளர்களுக்குச் சான்று இதழ் வழங்குதலும், மலைக்கோயிலில் வேத ஆகம பாடசாலை ஆரம்ப விழாவும் நடைபெற்றன.

பெரம்பலூர் தாலூகா, சிறுவாச்சூர் ஸ்ரீ மதுரகாளியம்மன் கோயிலில் 12-5-59 முதல் 23-5-59 முடிய மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 271-ஆம் ஆண்டு மகேசுவரபூசைத் திருநாளாகிய 24-5-59 அன்று வடக்கே இமயமலையில் 12,000 அடி உயரத்திலிலுள்ள திருக்கேதாரம் முதல் தெற்கே கன்னியாகுமரி ஈறாக உள்ள 28 தலங்களில், ரூ. 5,40,600- மூலதனமிட்டு, அந்தணர், அருந்தவர், ஏழைகளுக்கு அன்னம் பாலிப்புக்காக ரூ. 9,721 செலவில் டி திருநாள் சிறப்பாக நடைபெற்றது.

கிராமம் என்று வழங்கப்படும் திருமுண்டீச்சரம் தலத்தில் 2-5-59 சனிக்கிழமையன்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருநட்சத்திர விழா சிறப்பாக நடைபெற்றது.

திருவிடைமருதூர், ஸ்ரீ பிருகத்சுந்தர குசாம்பிகா சமேத ஸ்ரீ மகாலிங்கசாமிக்குத் திருக்கல்யாண மகோற்சவம் 12-5-59 முதல் 21-5-59 முடிய வெகு சிறப்பாக நடைபெற்றது.

கோயில்பட்டி ஸ்ரீ பூவணநாதசுவாமி கோயிலில் அவ்வூர் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் திரு. டி. எஸ். பஞ்சாபகேசன், பி.ஏ. அவர்களால் நூல் நிலையத் திறப்பு விழா நடைபெற்றது.

சோளசிம்மபுரம், ஸ்ரீ லட்சுமிநரசிம்ம சுவாமி கோயிலில் ஸ்ரீ நரசிம்ம ஜயந்தி 21-5-59 தேதி நடைபெற்றது.

சூரியனார்கோயில், திருக்கைலாய பரம்பரை ஸ்ரீகந்தமரபான சிவாக்கிரயோகிகள் ஆதீனத்துக்குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அதிவர்ணச்ரம சைவ பரிபாலக ஆதி சிவாக்கிரயோகீசுவர சுவாமிகளின் குருபூசை 11-5-59 சிறப்பாக நடைபெற்றது.

திருப்புன்கூரில், ஸ்ரீ சௌந்தரநாயகி அம்பாள் உடன்கூடிய ஸ்ரீ சிவலோகநாத சுவாமிகோயிலில் வைசாக மகோற்சவம் 12-5-59 முதல் 23-5-59 முடிய நடைபெற்றது.

திருக்காட்டுப்பள்ளி, ஸ்ரீசௌந்திரநாயகி அம்பாள் உடன்கூடிய ஸ்ரீ அக்னீசுவரசுவாமி ஆலயத்தில் திருப்பணி வேலை சென்ற 1956-ம் ஆண்டு சென்னை அரசினர் உதவித் தொகை ரூ. 7,000மும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக ரூ. 4,000மும் கொண்டு ஆரம்பித்து மதிற்சுவர், அர்த்த மண்டபம், மகாமண்டபம், சுவாமி, அம்பாள், விமானங்கள் முதலியன பழுது பார்க்கப்பட்டு சென்ற 29-4-59 புதன்கிழமை காலை 9-45 மணிக்கு அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. தேவகோட்டை ஸ்ரீ எஸ். வி. எம். மெய்யப்பச் செட்டியார் அவர்களும், தஞ்சை அறநிலையப் பாதுகாப்புத்துறை துணை ஆணையர் திரு. ஏ. சக்கரை, பி.ஏ., பி.எல்., அவர்களும், உதவி ஆணையர் திரு. கே. வி. குமாரன் நாயர், பி.ஏ., அவர்களும் கலந்துகொண்டனர்.

சென்னை, புரசை ஸ்ரீ பங்கசாம்பாள் உடன்கூடிய ஸ்ரீ கங்காதரேசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 12-5-59 முதல் 23-5-59 முடிய நடைபெற்றது.

அம்பாசமுத்திரம், ஸ்ரீ கிருஷ்ணசுவாமி கோயிலில் வைகாசி விசாகப் பெருந்திருவிழா

13-5-59 முதல் 22-5-59 முடிய நடை பெற்றது.

திருஇடும்பாவனம், மங்களநாயகி உடன் கூடிய சத்குணநாதர் கோயிலில் வைகாசி விசாகப் பெருவிழா 11-5-59 முதல் 23-5-59 முடிய நடைபெற்றது.

எட்டிகுடி, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலில் 21-5-59 தேதி தெப்ப உற்சவம் நடைபெற்றது.

மதுரை, ஸ்ரீ கூடலழகர் கோயிலில் வைகாசி பிரமோற்சவம் 14-5-59 முதல் 28-5-59 முடிய நடைபெற்றது.

பாமணி, ஸ்ரீ அமிர்தநாயகி உடன் கூடிய ஸ்ரீ நாகநாதசுவாமி கோயிலில் 12-5-59 முதல் 23-5-59 முடிய பிரம்மோற்சவம் நடை பெற்றது.

சென்னை, ஸ்ரீ சென்னமல்லீசுவரர், ஸ்ரீ சென்ன கேசவப்பெருமாள் கோயிலில் வசந்த உற்சவங்கள் ஸ்ரீ ஈசுவரருக்கு 13-5-59 முதல் 22-5-59 வரையும், ஸ்ரீபெருமாளுக்கு 25-5-59 முதல் 31-5-59 வரையும் சிறப்பாக நடை பெற்றது.

பாமணி, ஸ்ரீ நாகநாதசுவாமி கோயிலில் 15-5-59 முதல் 17-5-59 முடிய வைகாசி விசாக உற்சவமும், 23-5-59 தேதி விடை யாற்றி உற்சவமும் நடைபெற்றன.

பாபநாசம் தாலூகா, உடையார்கோயில், ஸ்ரீ தர்மவல்லி அம்பாள் உடன்கூடிய ஸ்ரீ கரவந்திசுவரசுவாமி கோயிலில் 12-7-59-ல் உத்திர நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 10 நாழிகைக்குள் சிம்ம லக்னத்தில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறும்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம், தருமபுரம் ஸ்ரீ ஞானம்பிகை உடன் கூடிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயிலில் மகோற்சவம் 17-5-59 முதல் 29-5-59 முடிய நடைபெற்றது. 18-5-59 முதல் 28-5-59 முடிய நடைபெற்ற திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் சமயச் சொற்பொழிவுகளும் குரு பூஜை முதலியனவும் நடைபெற்றன.

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனத் துக்குச் சொந்தமான திருமுருகன் தேவால யத்தில் 21-5-59 தேதி வைகாசி விசாகத்திரு விழா சிறப்பாக நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புத் தூர், ஸ்ரீ திருத்தளிநாதர் ஆலயத்தில் 17-5-59 முதல் 22-5-59 முடிய திருமுறைத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.



திருவாஞ்சியம் திருப்பதிகக் கல்வெட்டுத் திறப்பு விழா.

ஆவூர், ஸ்ரீ பசுபதீசுவர சுவாமி கோயிலில் 31-3-57 முதல் ஆலய வழிபாடு ஆரம்பிக்கப்பட்டு, 12-5-59 செவ்வாய்க்கிழமை நூறுவது வழிபாடு சிறப்பாக கொண்டாடப் பட்டது. அவ்வமயம் திப்பிருஜபுரம் திரு பி. என். இராமமூர்த்தி தீட்சிதர் அவர்கள் ஸ்ரீ சங்கரர் ஜனனமும் ஆலயவழிபாடும் என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

கும்பகோணம், ஸ்ரீமங்களாம்பிகா உடன் கூடிய ஸ்ரீ ஆதிகும்பேசுவர சுவாமி கோயிலில் திருக்கல்யாணத் திருவிழா 17-5-59 முதல் 23-5-59 முடிய சிறப்பாக நடைபெற்றது.

திருத்தேவூர், ஸ்ரீ மதுரபாஷனி அம்பிகா உடன்கூடிய ஸ்ரீ தேவபுரீசுவர சுவாமி கோயிலில் வைசாக உற்சவம் 21-5-59 முதல் 23-5-59 முடிய நடைபெற்றது.

திருநெல்வேலி, சுவாமி நெல்லையப்பர், ஸ்ரீ காந்திமதியம்மன் பிள்ளையன் (உச்சிகால, அர்த்தசாம) கட்டளைகளில் வைகாசி விசாகத் திருவிழா 20-5-59 முதல் 22-5-59 முடிய நடைபெற்றது.

திருவாழ்கொளிபுத்தூர், திருவண்டமர் பூங்குழல்நாயகி உடன்கூடிய திருமாணிக்க வண்ணசுவாமி கோயிலில் திரு. ஜி. சுந்தரேசம் பிள்ளை அவர்கள் தலைமையில், இந்து மத அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராம பிள்ளை, ஐ. ஏ. எஸ்., அவர்களால் திருப்பணி துவக்க விழாவும் திருப்பதிகக் கல்வெட்டுத் திறப்பு விழாவும் 25-5-59 சிறப்பாக நடைபெற்றது.

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பெரிய புராண நிதி கொண்டு, தில்லையில் நடராஜப் பெருமான் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் 2-6-59 முதல் 10-6-59 முடிய பல தமிழ்ப் புலவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

துறையூர், ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி வகையரு கோயிலில் பெருமாள்மலை ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி சுவாமி சிரவண உத்சவம் 27-5-59 28-5-59-தேதிகளில் நடைபெற்றது.

சென்னை, ஸ்ரீ அமிர்தவல்லி உடன் கூடிய ஸ்ரீ சவுமிய தாமோதாரப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 26-5-59 முதல் 5-6-59 முடிய சிறப்பாக நடைபெறும்.



திருவாஞ்சியம் நூல்நிலையத் திறப்புவிழா

மதுரை திருஞானசம்பந்த சற்குருநாத தேசிக சுவாமிகளது குருபூசை மகோற்சவம் 20-5-59 முதல் 24-5-59வரை நடைபெற்றது.

தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலுக்கா, திருப்புகலூர் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவிழா.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவிழா 22-4-59 முதல் 1-5-59 முடிய மிக சிறப்பான முறையில் நடைபெற்றது.

வெகு காலமாக நிறுத்தப்பட்டிருந்த "தெப்ப விழா" நாவுக்கரசரை கல்லோடணைத்துக்கட்டிய 4-ம் திருநாளன்று இவ்வாண்டு நடத்தப்பட்டது.

29-4-59 முதல் 1-5-59 முடிய மூன்றும் ஆண்டு திருமுறை மகாநாடு நடத்தப்பட்டது. முதல் நாள் பூவனூர் ஸ்ரீ பி. சுப்பையா முதலியார் அவர்கள் தலைமையில் திரு. ஆறுமுக நாவலர், திரு. வீரசிவம், திரு. ஈசான சிவாசாரியார் ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள். 2-ம் நாள் திரு. கே கனகசபைப் பிள்ளை அவர்கள் தலைமை


யில் உலக ஊழியர், கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் ஆகியோர் சொற்பொழி வாற்றினர்கள். இரவு திருமதி கே. பி. சுந்தராம்பாள், எம். எல். சி. அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் நடந்தது. கடைசிநாள் தஞ்சை அறநிலையப் பாதுகாப்பு இலாகா துணை ஆணையாளர் திரு. ஏ. சக்கரை சேர்வை அவர்கள் தலைமையில் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார், திரு ராய. சொக்கலிங்கன், திரு. வெள்ளைவாரணர், திரு. கோ. சிவஞானம் ஆகியோர் சொற்பொழி வாற்றினர்கள்.

அன்றைய தினம் தேவாரப் பாடல்கள் 104 மனப்பாடம் செய்து தேவாரப் போட்டியில் கலந்துகொண்டு முதற்பரிசு பெற்றவருக்கு 1 பவுன் மெடலும், இரண்டாம் பரிசு பெற்றவருக்கு அரை பவுன் மெடலும், இதரர்களுக்கு சன்மானமும் வழங்கப்பட்டது. திருமுறை மகாநாட்டிற்கு வந்திருந்த ஓதுவார்களுக்கு தேவஸ்தானத்திலிருந்து சன்மானங்கள் வழங்கப்பட்டன.

திருக்காருயில், ஸ்ரீ தியாகராஜசுவாமி கோயிலில் 3-5-59 முதல் 22-5-59 வரை வைகாசி விசாகப் பெருவிழா நடைபெற்றது 10-5-59 முதல் 17-5-59 வரை வேதபாராயணமும், தேவாரபாராயணமும், நாதசுரக் கச்சேரியும், இன்னிசைக்கச்சேரியும், சமயச் சொற்பொழிவுகளும், சிறப்பாகநடைபெற்றன.

சென்னை, பூங்காநகர், கந்தசாமி கோயிலில் வசந்தோற்சவம் அதைச் சார்ந்த வசந்த மண்டப பங்களாவில் 13-5-59 முதல் 31-5-59 வரையில், சிறப்பாக நடைபெற்றது. தினந்தோறும் திருமுருக கிருபானந்தவாரியாரின் கந்தபுராணச் சொற்பொழிவும் நடைபெற்றது.

மூவலூர், ஸ்ரீ மங்கள சௌந்தரநாயகி உடன்கூடிய ஸ்ரீ மார்க்கசகாயேசுவரசுவாமி ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 24-5-59ல் தொடங்கி 29-5-59ல் நடைபெற்றது.



சேலம் ஸ்ரீ சுகவனேசுவரசுவாமி கோயில் பன்னிரு சைவத் திருமுறைத் திருவிழா.
25-3-1959.

பழநியில் 2-5-59ல் நடைபெற்ற ஆலோசனைக் குழு கூட்டம்

கலந்துகொண்ட உறுப்பினர்கள்

1. திரு. கே. வெங்கடசாமி நாயுடு.
2. திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர்.
3. திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை
4. திரு. கே. கே. சுப்பண்ண கவுண்டர்
5. திரு. மணலி இராமகிருஷ்ண முதலியார்.
6. திரு. ஏ. என். பரசுராமன்.
7. திரு. எஸ். வி. மெய்யப்ப செட்டியார்
8. பேராசிரியர் திரு. பி. சாம்பமூர்த்தி

பலதுணைக் குழுக்களின் அறிக்கைகள் பரிசிலிக்கப்பட்டன.

பழநியில் பல்கலை நிலையம்

பழநியில் துவக்க இருக்கும் பல்கலை நிலையத்தை ஸ்ரீபழநியாண்டவர் கீழ்க்கலைக் கல்லூரி என்ற பெயரில் ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டது.

ஸ்ரீபழநி ஆண்டவர் கீழ்க்கலைக் கல்லூரி

மூன்றுவித பயிற்சிகள் உண்டு; பட்டப் பயிற்சி சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைத்துக்கொள்ளுதல். சென்னை அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழக முன் பல்கலைக் கழகத்தேர்வு (Pass in Pre-university Examination) பெற்ற மாணவர்கள் அல்லது அதற்குச் சமநிறைவு உள்ள படிப்பு பெற்ற வேறு அமைப்புகளைச் சேர்ந்த மாணவர்கள்மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இப்பயிற்சி மூன்று ஆண்டு காலத்திற்குத் தரப்படும். Bachelor of Oriental Culture பட்டம் வழங்கப்படும். முதுகலைப் பயிற்சி (Post Graduate course) அளிப்பதற்கும் ஆவன செய்யப்படும். அதற்கு Master of Oriental Culture என்ற பட்டமும் ஏற்படுத்தப்படும். ஆராய்ச்சிகள் செய்வதற்கும் அதற்கு டாக்டர் பட்டம் அளிப்பதற்கும் வழிவகைகள் செய்யப்படும்.

2. மற்றுமொரு இரண்டாண்டுகளுக்கான பட்டப்பயிற்சியும் (Title Course) ஏற்படுத்தப்படும். அப்பட்டங்கள் ஆகம சிரோமணி, ஆகம வித்வான், ஆகம கலாநிதி என்பனவாகும். அதற்கு உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் (Pass in S.S.L.C.) சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். பரம்பரை அல்லது வேறு காரணங்களால் சித்திர, சிற்பக்கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு பட்டப்பயிற்சி ஆரம்பிக்கப்படும். அவர்களும் மூன்ருவது படிவம் அல்லது எட்டாவது வகுப்பு படித்தவர்களாக இருக்கவேண்டும். தகுதியுள்ளவர்களுக்கு படிப்புத் தகுதியிலிருந்து விலக்கு அளிக்கும் அதிகாரம் பொறுக்குக் குழுவுக்கு அளிக்கப்படும். இப்பட்டங்கள் (Titles and diplomas) அரசினரால் வழங்கப்படும். ஷை மூவகைப் பயிற்சிகளுக்கும் முழுவிவர பாட திட்டம் வகுப்பதற்கும், பொருட் செலவு முதலியவைகளைத் திட்டமிடுவதற்கும் கீழ்க் காணும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தனி துணைக்குழு அமைக்கப்படும்:—

1. திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை.
2. திரு கே. பாலசுப்பிரமணிய ஐயர்.
3. திரு எஸ். சச்சிதானந்தம் பிள்ளை.
4. திரு ஏ. என். பரசுராமன்
5. பேராசிரியர் திரு பி. சாம்பமூர்த்தி.

முதலாண்டுக்கும் பின் ஆண்டுகளுக்கும் மாறிவரும், நிலையான (recurring and non-recurring) செலவினங்கள் சரியான முறையில் மதிப்பிடப்படும். கனம் அறநிலைய அமைச்சர் அவர்களும் திரு கே. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களும் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களுடன் கலந்து பேசி ஷை கல்லூரி விரைவில் ஆரம்பிக்க முயற்சிப்பார்கள்.

2. கலை, கலாச்சாரம், ஓவியம், இசை முதலியவைபற்றி துணைக்குழுவின் அறிக்கை

துணைக்குழுவின் அறிக்கை கீழ்க்காணும் குறிப்புகளோடு பதிவு செய்யப்பட்டது. ஆலய வழிபாட்டுத் துறைகளுள் ஒன்ருன நடனத்தை மீண்டும் கொண்டுவருதல் சம்பந்தமாக சட்டசபை உறுப்பினர்கள் தக்க மாறுதல் கொண்டு வருவார்களானல் அதை அரசாங்கம் நன்முறையில் ஆலோசனை செய்யும்

என்று கனம் அறநிலைய அமைச்சர் அவர்கள் தம் கருத்தை அறிவித்தார்கள். பன்னிரண்டு வயதுக்குட்பட்ட பெண்கள் மட்டுமே நடனமாட அனுமதிக்கப்படுவார்களானால் அது சம்பந்தமாக பொது மக்களிடம் எவ்வித அதிருப்தியும் ஏற்படாது. திருப்பணி செய்ய இருக்கிற ஒரு கோயிலின் அல்லது திருப்பணி முடிந்த ஒரு கோயிலின் புகைப்படங்கள், அக்கோயிலினால், ஏற்படும் செலவை சமாளிக்க முடியுமானால், எடுக்கப்படும்.

ஆலோசனைக் குழுவிலிருந்து நிபுணர் குழு, திருப்பணிகள் நடக்கும் எல்லா இடங்களுக்கும் அனுப்பப்படமாட்டாது. சிறப்பான திருப்பணி வேலைகள் நடக்கும் இடங்களுக்கு மட்டுமே அனுப்பப்படும்.

நகைகள், ஒரு சில ஆலயங்களிலுள்ள குறிப்பிட்ட இசைக் கருவிகள் இவைகளைத் தவிர தனி அலுவலரை நியமிக்கக்கூடிய அளவில் சரித்திர, கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் இல்லை. சரிபார்த்தல் அலுவலரும் (Verificaton officer), இரத்தின பரிசோதகரும் (Gem specialist) நகைகளையும், விலை மதிப்புள்ள பொருள்களையும் சரிபார்க்கும் வேலையைச் செய்து வருகின்றனர்.

திருப்பணி துணைக்குழு

இக்குழுவின் அறிக்கை, கீழ்க்காணும் குறிப்புகளோடு பதிவு செய்யப்பட்டது. உதவி பொறியாளர் அல்லது ஓய்வுபெற்ற செயற்பொறியாளர் ஒருவரை (அறநிலைய) ஆணையர் அலுவலகத்திற்கும், ஒரு இளைய பொறியினரை ஒவ்வொரு துணை ஆணையாளர் அலுவலகத்திற்கும் நியமிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் இசைந்துள்ளார்கள். மாவட்டங்களில் உள்ள ஓய்வுபெற்ற பொறியாளர்களின் உதவியை வேண்டும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். திருப்பணியும் பழுதுபார்த்தல் வேலையும் நடைபெறுகின்ற கோயில்களின் பட்டியலை அனுப்பிவைக்கும் படிதுணை ஆணையர்களும் (Deputy Commissioner) உதவி ஆணையர்களும் (Asst. Commissioner) கேட்டுக் கொள்ளப்படுவார்கள். அரசினரால் அங்கீகாரம் செய்யப்பட்ட ஸ்தபதிகளின் பட்டியல் திருப்பணிக் குழுவிற்கு அனுப்பப்படும்.

இலக்கியமும் வெளியீடுகளும்

இவ்வறிக்கை கீழ்க்காணும் குறிப்புகளோடு பதிவு செய்யப்பட்டது.

ஒரு நூல் நிலையமும் ஆலயப்பொருட்களின் கலைக்கூடமும் ஆணையர் அலுவலகத்தில் நிறுவப்படும். நிலையங்கள், நந்தவனங்கள், பால்பண்ணைகள் எங்கு துவக்கமுடியுமோ அங்குத் துவக்கப்படவேண்டும். ஆகமங்களைச் சேகரித்தும் போதுமான விளக்கங்களோடு வெளியிடுதலுமான காரியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். சிறிய கோயில்களில் கணக்கு வைத்துக் கொள்ளும் முறை எளிமையாக்கப்படவேண்டும். அறுதை விடுதிகள் செயல்படும் தன்மைகளைப் பரிசிலிக்கப்படும். சென்னை, மயிலை ஸ்ரீ கபாலீசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டிருக்கும் அறுதை விடுதிக்கு ஒரு தனி ஆலோசனைக்குழு அமைக்கப்படும். அறுதை விடுதியை நன்முறைப்படுத்தும் வழிகளையும் செயல்படும் முறையினையும் ஆராயப்படும். இக்குழுவின் செயல்திறனை அறிந்து, மற்ற அறுதை விடுதிகளுக்கு இம்மாதிரி குழுக்கள் அமைப்பதுபற்றி யோசிக்கப்படும்.

திருநெல்லிக்காவல், ஸ்ரீ நெல்லிவனநாத சுவாமி கோயிலில் 12-4-59 முதல் 22-4-59 வரையில் பிரமோற்சவம் நடைபெற்றது. உற்சவ தினங்களில் சமயச் சொற்பொழிவுகளும், தேவார பாராயணமும் வேத பாராயணமும் சிறப்பாக நடைபெற்றன.

திருநாட்டியத்தான்குடி, ஸ்ரீ இரத்தின புரீசுவரசுவாமி கோயிலில் மகாகும்பாபிஷேகம் 27-4-59ல் சிறப்பாக நடைபெற்றது.

எட்டிகுடி, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலில் அமைக்கப்பட்டிருக்கும் நூல் நிலையத்தை சென்னை அறநிலைய ஆணையாளர் திரு. அ. உத்தண்டராம பிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்கள் 27-5-59 புதன்கிழமை திறந்து வைத்தார்கள்.

ஆச்சாள்புரம், ஸ்ரீ சிவலோகதியாகராச சுவாமி கோயிலில் 24-5-59 இரவு திருஞான சம்பந்தர் திருமண விழா சிறப்பாக நடைபெற்றது. அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ், உதவி ஆணையர் திரு. ஏ. சக்கரை, பி.ஏ., பி.எல். முதலியோர் ஷை விழாவில் கலந்துகொண்டார்கள்.

ஸ்ரீரங்கநாதர் ஆலயசம்புரோக்ட்சணம்

கர்ப்பகிரகத்திலும் காயத்ரி மண்டபத்திலும் திருப்பணி வேலைகள் சில தினங்களுக்கு முன் முடிந்துவிட்டன. மூலவரை புதுப்பிக்கும் வேலையையும் ஸ்தபதி ஆரம்பித்துள்ளார்.

இன்னும் சிறிது காலத்தில் புதுப்பிக்கும் வேலையை ஸ்தபதி முடித்து விடுவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. தங்க திருவாச்சி, சிம்மாசனம் இவைகளை மீண்டும் தயாரிப்பது, குலசேகரன்படி, நிலை, தூண்களுக்குத் தங்கத் தகடு அடிப்பது ஆகிய வேலைகள் விரைவாக நடந்து வருகின்றன. ஆதிசேஷன் தலைக்குத் தங்கக் கவசமும், உடலுக்கு வெள்ளிக்கவசமும் தயாரிக்கும் வேலையும் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த வேலைக்கு 1,500 தோலா தங்கமும் 15,000 தோலாவிற்கு அதிகமான வெள்ளியும், ரூ. 20,000 கூலியும் வேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் விரைவாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மகாசம்புரோக்ட்சணத்திற்கான தேதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. 1959 ஜூலை 1½-ந்தேதி நடைபெறும். பூர்வாங்க சடங்குகள் 4-ந்தேதி வாக்கிலிருந்து ஆரம்பமாகும். ஆகமசாஸ்திரங்களை நன்கு கற்றறிந்துள்ள பண்டிதர்கள் மாநாடு ஒன்று முன் கூட்டியே அறநிலைய துணைஆணையர் முன்னிலையில் நடைபெறும். மகா சம்புரோக்ட்சண விவரங்களை ஆராய்ந்து, இது சம்பந்தமான சடங்குகள் குறித்து இறுதித் திட்டம் வகுக்கப்படும். இந்த ஆலயத்தின் சிறப்புக்கும் மேன்மைக்கும் ஏற்ப மகாசம்புரோக்ட்சணம் நடத்தப்படும்.

புதுப்பிக்கும் வேலைகள், தங்கம் வெள்ளி கவசங்கள் செய்வது மகாசம்புரோக்ட்சணம் நடத்துவது ஆகியவைகளுக்கெல்லாம் 2 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. இதுவரை சுமார் 25,000 ரூபாயே கிடைத்துள்ளது. கோயம்புத்தூர், இராமகிருஷ்ண வித்தியாலய திரு இராமகிருஷ்ணர் ரூ. 3,000, திருவரங்கம் திரு சேஷய்யங்கார் ரூ. 1,500, ஹைதராபாத் திரு கோவர்த்தனலால் பனுசிலால் ரூ. 1,001, திருவரங்கம் திருமதி பத்மாசனி அம்மாள் ரூ. 1,000, சென்னை அத்தினருலு செட்டி. அறநிலையம் ரூ. 1,001 சமீபத்தில் நன்கொடையளித்திருப்பதும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கர்ப்பக்கிரகத்தில் பெருமளவில் திருப்பணி வேலையோ மூலவரைப் புதுப்பிக்கும் வேலையோ, மகா சம்புரோக்ட்சனமோ ஸ்ரீரங்கர் ஆலயத்தில் நம் நினைவுக்கு எட்டிய காலத்துக்குள் நடக்கவில்லை ஆகவே, இந்த தலைசிறந்த வைஷ்ணவ ஆலயத்தில் நடக்கும் இந்த மாபெரும் வைபவத்திற்கு விரைவில் பொது மக்கள் நன்கொடையளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கே. கே. மேனன்,
நிர்வாக அதிகாரி.

சென்னை, இராயப்பேட்டை சித்திபுத்தி விநாயக ஸ்ரீ சுந்தரேசுவரர் கோயிலில் 10-5-59 அன்று காலை பன்னிரு திருமுறைகள் பிரதிட்டை செய்யப்பட்டன. தருமபுர ஆதீனம் திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில், திரு. ச. சிவகுமாரன் எம்.ஏ., அவர்கள் "சமயகுரவர்" என்பதைப் பற்றியும், திரு. இளவழகனார்அவர்கள் "திருமுறைப் பெருமை"பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். மாலையில் சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராம பிள்ளை, ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும், திரு. புலவர் முருகவேள் அவர்களும் முறையே "திருமுறை வழிபாடு", "சேக்கிழார் சிறப்பு" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். அன்று இரவு நன்கு அலங்கரிக்கப்பட்ட அம்பாரியில் பன்னிருதிருமுறைகளும் வைக்கப்பட்டு, யானைமீது ஊர்வலமாகக்கொண்டு வரப்பட்டன. இந்த ஊர்வலத்தில் சென்னை அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராம பிள்ளை அவர்கள் கலந்து கொண்டார்கள்,

திருநாளைப்போவார்

செம்மையே திருநாளைப்
போவார்க்கு மடியேன்

—சுந்தரர்

நாவார் புகழ்த்தில்லை யம்பலத்
தானருள் பெற்றுநாளைப்
போவா னவனும் புறத்திருத்
தொண்டன்றன் புன்புலை போய்
மூவா யிரவர்கை கூப்ப
முனியா யவன்பதிநான்
மாவார் பொழிற்கை மாதனூ
ரென்பரிம் மண்டலத்தே

—நம்பியாண்டார் நம்பிகள்

சோழநாட்டு வளநாடுகளுள் மேற்கானாடு என்ற ஒரு உள்நாடு உண்டு. அதில், கொள்ளிடக் கரையில் ஆதனூர் என்ற வளம்பதி உள்ளது. அவ்வூரைச் சுற்றி செழித்த நெல் கழனிகளும் சோலைகளும் நிறைந்திருக்கும்; அது குடிகள் நெருங்கிய வீடுகளையுடையது; வழிவழியாய் உழவுத் தொழில் செய்து வருவோர் வாழும் சிறு கூரை வீடுகள் உள்ள புல்லைப்பாடி உண்டு. அப்புலைச்சேரியில் வாழ்வோர் நாய்களையும் கோழிகளையும் வளர்ப்பர். கூரை வீடுகளில் சுரைக்கொடி படர்ந்திருக்கும். அவ்வீடுகளைச் சூழ தென்னை, மருதம், வஞ்சி முதலிய மரங்கள் செறிந்திருக்கும். புலைமகளிர் பாட்டுப் பாடிக்கொண்டே நெல் குத்துவர். பறைகொட்டியாடியும் மகிழ்வர்.

இந்த புலைச்சேரியில் நந்தனுர் என்பவர் அவதரித்தார். உணர்வு வந்தநாள் முதல் சிவன் திருவடியே நினைக்கும் சிந்தையராய், மறந்தும் வேறு நினைவில்லாதவராய் வாழ்ந்து வந்தார். தமது குலப்பிறப்பின் வழிவந்த குல அறத்தின் வழி ஒழுகினர். திருக்கோயில்களிலுள்ள பேரிகை முதலியவற்றிற்கு போர் வைத்தோல், விசிவார் இவைகளும், வீணை யாழ் இவைகளுக்குத் தந்திரிகளும் (நரம்புகளும்), அருச்சனை முதலியவற்றிற்குக் கோரோசனையும் கொடுக்கும் திருப்பணிகளைச் செய்து வந்தார். கோயில்களின் புறத்தே நின்று அன்பினுல் ஆடுதலும் பாடுதலும் புரிந்தார்.

தமது ஊருக்கு அண்மையிலுள்ள திருப்புன்கூரில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள சிவலோகநாதரைத் தொழவேண்டுமென்ற பெருவிருப்பம் உண்டாயிற்று. திருப்புன்கூர் சென்றடைந்தார். இசைபாடி ஆடி இறைவனை நேரே வணங்க எண்ணினுர். சிவபெருமான் இடையேயுள்ள இடபதேவரைச் சற்று விலகியிருக்கும்படி கட்டளையிட நந்தனுர் சிவலோகநாதரை நேரே கண்டு வழிபட்டார். கோயிலின் பின்புறத்தேயுள்ள பள்ளத்தை குளமாகத் தோண்டினர். தம்மூர்த் திரும்பிப் பின்னர் பக்கத்தேயுள்ள பல தலங்களையும் வணங்கி இயன்ற பணிகளைச் செய்து வந்தார்.

இவ்வாறிருக்குங்கால் திருத்தில்லைத் திருமன்று சென்று தொழ ஆசை உண்டாயிற்று. தாம் தாழ்ந்த குலத்தவராதலின் போதலைத் தவிர்த்தார். ஆனுல் ஆசை அடங்காமையால் 'நாளைப்போவேன்' என்பார். இவ்வாறு பலநாட்கள் கழிந்தன. கடைசியாகப் போகவேண்டுமென்று துணிந்தார். புறப்பட்டார்; திருத்தில்லையின் எல்லையை யடைந்தார். தமது குலத்தின் குறைபாடு கருதி ஊரின் உள்ளணைய அஞ்சினர். எல்லையை இரவு பகலாக வலம் வந்தார். எம்பெருமான் திருநடனத்தை எப்படிக் காண்பது என்ற எண்ணத்துடன் ஒருநாள் துயில்வாராயினர். சிவபெருமான் அவரது கனவில் தோன்றி 'இப்பிறவிபோய் நீங்க நீ தீயின் மூழ்கி மறையவருடன் முன் அணைவாயாக' என்று திருவாய் மலர்ந்தருளினுர். அவ்வாறே தில்லை வாழந்தணர்கள் கனவிலும் தனித்தனி தோன்றி தீயமைத்துக் கொடுக்கும் வண்ணம் பணித்தருளினுர். அவர்களும் திருநாளைப் போவாரிடம் வந்து 'ஐயரே! அம்பலவர் அருளால் இப்பொழுது அணைந்தோம். தீயமைத்துக் கொடுக்கிறேம்' என்று கூறி யழைத்தனர். நாயனுரும் 'நான் உய்ந்தேன்' என்று கூறி அவர்களைப் பின் தொடர்

தார். தென்திசை மதிற்புறத்துத் திருவாயில் முன்பு தியமைக்கப்பட்டிருந்தது. திருநாளைப் போவார் அதை வலம் வந்து, இறைவன் திருவடிகளை நினைந்தபடியே அழலினுட்புகுந்தார். பொய்மாய உருவினை யொழித்துப் புண்ணிய முனிவராய்த் தீயினின்றும் எழுந்தனர். 'திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கைதொழுதார்; பரவரிய தொண்டர்களும் பணிந்து மனம் களிபயின்றார்.' தில்லைத் திருக்கூத்தனின் திருவடிகளை வணங்க விரைந்து நாயனர் புறப்பட்டார். உலகுய்ய நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டார். பின் அவரை யாருங் காணவில்லை. இறைவன் தமது திருவடிகளைத் தொழுதிருக்கும் அந்தமிலா ஆனந்தப் பெருவாழ்வை அளித்தருளினார்.

சேக்கிழார்சுவாமிகள் பெரியபுராணத்தில் மும்மையாலுலகாண்டச் சருக்கத்தில் நான்காவதாக திருநாளைப்போவார் நாயனர் புராணத்தைப் பாடியுள்ளார். முப்பத்தேழு இனிய பாடல்களையுடையது. ஆதனூர் என்பது இப்போது ஆதமங்கலம் என்று வழங்குகின்றது. வைத்தீசுவரன் கோயிலுக்கு மேற்கே இரண்டு கல் தொலைவில் திருப்புன்கூர் உளது. அதற்கு வட மேற்கே கொள்ளிடத்தைக் கடந்தால் ஆறு கல் தூரத்தில் ஆதனூர் இருக்கின்றது. இதன் சிறப்பை,

பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்கரத்தான்
முகந்துதர விருமருங்கு முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னுட்டு மேற்கானுட் டாதனூர்

என்று வெகு அழகாகக் கூறுகிறார். சோழ நாட்டை மண்டலங்கள், வள நாடுகள், கோட்டங்கள், கூற்றங்கள், ஊர்கள் என்று பிரித்திருந்தனர். அதில் மேற்கானடு என்ற உள் நாட்டிலுள்ளது ஆதனூர். அவ்வூரில் நாற்பது வேலி தனிவட்டமாகத் திருநாளைப் போவார்கானி என்று வழங்கும் நிலப்பகுதியிருக்கின்றது.

நந்தனர் என்பது இவரது இயற்பெயர். 'நாளைப்போவேன்' என்று நினைத்துக் கொண்டேயிருந்தபடியால் 'திருநாளைப்போவார்' என்ற திருநாமம் பெற்றார். திருப்புன்கூர்க் கோயிலில் நந்தி சிறிது சந்நிதியை விட்டு விலகியிருப்பதை இன்றும் காணலாம். இவர் திருப்பணியாகச் சொல்லப்பட்ட குளம் கோயிலுக்கு மேற்கே நந்தன்குளம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது. இவர் கையில் யாழ்வைத்துக்கொண்டு உட்கார்ந்து பாடும் திருக்கோலம் திருப்புன்கூர்க் கோயிலிலுள்ளது. இவருடைய திருவுருவம் தில்லையில் நடராஜப் பெருமான் சந்நிதியிலும் இருக்கின்றது. இவர் தீயில் குளித்தெழுந்த இடம் சிதம்பரத்தில் ஓமக்குளம் என்று வழங்குகிறது. நந்தனர் கோயிலும் அதன் அருகில் இருக்கிறது. உமாபதி சிவாசாரியார், 'இசைத்தமிழ் நூல்வல்லோர் பவமணுகாத் திருநாளைப் போவார், ஆனயர், பாணர், பரமனையே பாடுவார் ஆக நால்வர்' என்று நந்தனரை இசைத்தமிழ் வல்லவராக வகுத்திருக்கின்றனர்.

'நன்மைதிகழ் மேற்கானுட் டாதனூர்
வாழ் நந்தனர்
புறத்தொண்டர் நாளைப்போகப்
பொன்மலி தென்புலியூர்க்
கென்னுரைப் பார்புன்கூர்ப்
பொய்கையமைத் தடலேறு பிரியநோக்கி
வன்மதில்சூழ் தில்லையிறை யருளால்
வாய்ந்த வண்டழலி
னிடைமூழ்கி மறையோர் போற்ற
மின்மலிசெஞ் சடைமுனியா யெழுந்து
நாதன் விளங்குநடந்
தொழமன்றுள் மேவினரே'

—உமாபதிசிவசாரியார்.

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி கோயிலில் 26—4—59 யாகம் தொடங்கி, 29—4—59 அன்று காலை 6-50 மணிக்குமேல் 7-30 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

மயிலம்

[வித்வான் திரு. வே. சிவசுப்பிரமணியன்]

நன்றே வருகச் சிவபெருமான்
ஞானகரமே வருக மறை
நாலுமுணராப் பொருள் வருக
நறைப்பூங் கடம்பு மலர்பவளக்
குன்றே வருக மயிலூருங்
குருந்தேவருகக் கனகநகர்க்
கோமான் மகள்சேர் குகன்வருகக்
குறத்தி கணவா வருகவிரைந்
தின்றேவருகக் களிறேறி
யின்னேவருகக் கழறியவா
றியற்றியாள வருகவுன
தின்பங்கொடுக்க வருக வருண்
மன்றேவருகப் பலகோடி மலையாய்
வருக வருகவே
மயிலா சலத்தில் விளையாடும்
வாழ்வே வருக வருகவே.

—தண்டபாணி சுவாமிகள்

முழுமுதலாகிய பரம்பொருள் உயிர்களுக்கு நலம் நல்கப் பல திருக்கோலங்களைக் கொள்கின்றார். அன்பர் அன்புக் கெளியவனாகிய ஆண்டவன் கொண்ட அழகிய இளைய திருக்கோலமே முருகப் பெருமான் திரு அவதாரம் ஆகும்.

என்றும் இளைய அழகிய பெருமாளாகிய முருகன் நின்று விளங்கி அருள் செய்யும் தலங்கள் பல. அப்பெருமானது பலவிதத் திருவுருவங்களுள் ஒவ்வொன்றை ஒவ்வொரு தலத்தில் கண்டு தரிசிக்கலாம். சூரசங்கார மூர்த்தியாக, பாலசுப்பிரமணியனாக, தண்டாயுதபாணியாக, சற்குருவாக, வில்லேந்திய வேலனாக, திருமணக்கோலப்பெருமாளாக அவனைக் கண்டு ஆனந்தப்படுவோர் பலர்.

அன்பர்களது துன்பம் தொலைத்தாளும் தோன்றலாக, முன்னியது முடிக்கும் முதல்வனாகி விளங்கும் முருகப்பெருமான் இருமணம் கொண்ட திருமணக்கோலப் பெருமாளாக என்றும் காட்சிதரும் நன்று பெருகிய தலம் மயிலம்.


சென்னையிலிருந்து விழுப்புரம் செல்லும் பாதையில் திண்டிவனத்தை அடுத்துள்ளது மயிலம் புகைவண்டி நிலையம். அங்கிருந்து மூன்றுகல் தொலைவில் உள்ளது மயில மலை. திண்டிவனத்திலிருந்து புதுச்சேரி செல்லும் உந்துவண்டிப் பாதையில் எட்டாவது கல்லில் மயிலத்தை அடையலாம். கடல் மட்டத்திற்குச் சுமார் 328 அடி உயரம் உள்ள திருமலைமேல் முருகப் பெருமான் எழுந்தருளி இருக்கின்றான். மலைக்கோயில் கோபுரக் காட்சியை வெகு தொலைவிலிருந்தும் காணலாம்.

மயில் வடிவாகிய சூரபதுமன்மேல் முருகன் எழுந்தருளியதை நினைவூட்டுவதால் மயிலம் எனப் பெயரிய இம்மலை மயில் வடிவாக உள்ளது. சூரபதுமன் மயில்வடிவான மலையாக இருந்து தவம்செய்து முருகப்பெருமான் தன்மேல் எழுந்தருளப் பெற்றான் என்று புராண வரலாறும் உண்டு.

இரண்டு மலைகள் ஒன்றன்பின் ஒன்றாய் இணைந்துள்ளன. தென்புறம் உள்ள மலை தோகையாகவும், வடபுறம் உள்ள மலை உடலும் தலையுமாகவும் கொள்ள மயில் வடிவம் அமைதல் அறியலாம்.

இம்மயில மலையின் மேல் முருகப் பெருமான் திருமணக் கோலப் பெருமாளாக எழுந்தருளியிருப்பதற்குப் புராண வரலாறுஉண்டு. அது இத் திருக்கோயிலைச் சார்ந்த திருமடத்தோடு தொடர்புடையது. நெருப்பும் சூடும் போல இத்திருக்கோயிலும் திருமடமும் நெருங்கிய தொடர்புடையன. அப்புராண வரலாற்றைச் சுருக்கமாகக் காணலாம்.

கயிலையங்கிரியிற் சிவபிரான் திருவிளையாட்டால் சங்குகன்னர் என்னும் கணத்




மயிலம் திருக்கோயிலினுட் செல்லும் வழி.

தலைவர் உலகில் அவதரிக்க நேர்ந்தது. அவர் கடலிடைப் பால உருவினராய்த் திருநீறு, உருத்திராக்கம், சிவலிங்கம் அணிந்த திருக் கோலத்தோடு தோன்றினர். பாலசித்தர் என்னும் திருநாமம் பெற்றார். புதுச்சேரிக்கடுத்து மூன்று கல் தொலைவில் உள்ள பொம்மைய பாளையம் என்னும் சிற்றூரை அடுத்துள்ள கடற்கரையில் அவர் எழுந்தருளினர்.

விபூதி, உருத்திராக்கம், இட்டலிங்கம் முதலியவற்றுடன் வீரசைவத் திருக்கோலத் தவமுதல்வராய் எழுந்தருளிய அவர் அங்கு பலர்க்குப் பல ஆகமங்களையும் அரிய சாத்திரங்களையும் பல ஆண்டுகள் உபதேசித்துக் கொண்டிருந்தார். பல ஆண்டுகளின் பின் தவம் செய்ய விரும்பி பல இடங்கள் சென்றார். இடையில் நாரதர் அவரைச் சந்தித்தார். இறைவனது திருவருட் குறிப்பையும் முருகப்பெருமானது இடையருப் பரங்கருணை உலகிற்குப் பயன்பட ஒருமடை உண்டாகப் போகின்ற தன்மையையும் உணர்ந்த நாரதர் சங்குகன்னராகிய பாலசித்தர்க்குச், சூரபதுமன் மயில் வடிவுடைய மலையாக இருந்து தவம்செய்த மயில மலைக்குச் சென்று தவம் இயற்றல் நலம் என்று குறித்தனர்.

பாலசித்தரும் அங்குச் சென்று தவம் இயற்றி இருந்தார். முருகப் பெருமான் அருளாதொழிய அம்பிகைகள் இருவரையும் நோக்கித் தவம் செய்தனர். அன்பர்க்கருள முருகப்பெருமான் வேண்டினர் அம்பிகையர். முருகப்பெருமான் மறுக்கவே ஊடல் கொண்ட அம்பிகையர் கன்னியர் உருவு கொண்டு பாலசித்தர் பாதுகாப்பில் மயில மலையில் வந்து தங்கினர்.

அம்பிகையரைத் தேடிவந்த முருகப் பெருமான் மயில மலை அடைந்து பாலசித்தர் பால் அவர்கள் இருவரும் இருப்பதை அறிந்து பாலசித்தரோடு விளையாட்டாகப்



பழனி சேவற்கொடிமேல் வெள்ளைச் சேவல்

பொருதனர். போரின் முடிவில் தனது விசுவ ரூபதரிசனம் அளித்துப் பிரணவ உபதேசமும் செய்து பாலசித்தரை ஆட்கொண்டருளினர். பின்னர் பாலசித்தர் வேண்டுகோளின்படி அவர் கொடுக்கக் கன்னியர் இருவரையும் அங்கே மணந்துகொண்டு திருமணக்கோலப் பெருமானாக விளங்கி அன்பர்களுக்கு அருள் செய்து வருவாராயினர் என்பது அப் புராண வரலாறாகும்.

பாலசித்தர் மறைந்தருளிய இடம் இப்போது சிவபெருமான் சந்நிதியாக-விசுவநாதர் விசாலாக்ஷி சந்நிதியாக விளங்கி வருகிறது.

பாலசித்தரின்பின் பட்டத்துக்கு எழுந்தருளிய சுவாமிகள் சிவஞான பாலய சுவாமிகள் என்னும் பெயரினர். பேரருள் விளையாடல்கள் பலவற்றை நிகழ்த்தியவர்கள். கற்பனைக் களஞ்சியம் எனப்படும் புலவர் மாமணியாகிய சிவப்பிரகாச சுவாமிகளுக்கு ஞானாசாரியராக விளங்கியவர்கள்.

அவர்கள் காலத்தே செஞ்சியை ஆண்ட திரியம்பக மகாராஜன் சுவாமிகள் அருட்செயல் பலவற்றைக் கண்டு அவர்களுக்கு அடிமை பூண்டொழுகிச் சுவாமிகள் கட்டளைப்படி மயிலத்திலும் பொம்மையபாளையத்திலும் முருகப்பெருமானுக்குத் திருவாலயமும், சுவாமிகள் பூஜை செய்வதற்குத் திருமடமும் கட்டுவித்துச் சில கிராமங்களைச் சர்வமானியமாக எழுதி நியமித்தான். மேலும் பதினாறு விருதுகளைக் காணிக்கையாக அளித்தான்.

நடுநாட்டை ஆண்ட சிதம்பர பூபதி என்னும் அரசரும் இச்சுவாமிகளது அணுக்கத் தொண்டராவர். இவர்கள் காலத்தே ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் வந்து மயிலம் திருப்புகழ் பாடியருளினர்.

இவர்களுக்கு அடுத்தபடி எழுந்தருளிய அதாவது கி.பி. 1643 முதல் 1695 முடிய அருளாட்சி நடத்திய மூன்றாவது பட்டம் சுவாமிகள் காலத்தே இலக்கண விளக்க ஆசிரியரும், திருவாரூர்த் தமிழ்ப் பெரும் புலவரும் ஆகிய ஸ்ரீ வைத்தியநாத தேசிகர் வந்து சுவாமிகள் அன்புக்கிலக்காகி பாசவதைப் பரணி என்னும் நூலும், மயிலம் முருகன் பிள்ளைத் தமிழும் பாடினார்கள்.

பதினைந்தாம் பட்டமாக கி.பி. 1884 முதல் 1887 முடிய விளங்கிய சிவஞான பாலய சுவாமிகள் காலத்தேதான் தற்போதுள்ள இராஜகோபுரம் கட்டப்பட்டது. உற்சவர் சபா மண்டபம் கட்டப்பட்டது. இந்த சுவாமிகள் திருவுருவம் கோபுரவாயில் வடபுறத் திசைச் சுவரிலும், சபா மண்டபக் கற்றூணிலும் செதுக்கப்பட்டுள்ளது. இவர்கள் காலத்தே திருமுதுகுன்றம் தியாகராஜக் கவி என்பவரால் மயிலம்தல புராணம் பாடப்பட்டது.

பதினாறாம் பட்டம சுவாமிகள் காலத்தே (கி. பி. 1888-1916) கோயிலில் புதுமண்டபம், மேற்புறம் சபை, சுற்றுமதில், பூந்தோட்டம், வாகனமண்டபம், முதலியன கட்டப்பட்டன. வாகனங்கள் செய்து அமைக்கப்

பட்டன. விநாயகர் முதல் மூலவ மூர்த்திகளுக்கு வெள்ளிக்கவசமும், உற்சவமூர்த்திகளுக்குத் தங்கக் கவசமும் இன்னும் பல திருவாபரணங்களும் செய்யப்பட்டன.

பதினெட்டாம் பட்டமாகத் தற்போது விளங்கிவரும் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் தமது அருளாட்சிக் காலத்தே கோயில், திருமடம் இவைகள் பல்லாற்றானும் முன்னேற்ற மடைந்திருக்கின்றன. திருக்கோயிலையும் திருமடத்தையும் சார்ந்த நூல்களையெல்லாம் அச்சிட்டு இலவச வெளியீடாக வழங்கி வருகிறார்கள்.


கோயில், மடம் ஆகியவற்றின் வருவாயில் இருந்து தமிழ்க் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி, உயர்நிலைத் தொடக்கப்பள்ளி முதலியவற்றை நடத்தி வருகிறார்கள். சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் ஆண்டு விழாவை மயிலத்தில் இருமுறை நடத்தி வைத்தார்கள்.

பண்டு தொட்டுத் தொடர்ந்து இக்குரு பீடத்தால் பொலிவு பெற்றுவரும் இம்மயிலமலை சங்ககாலத்தே தொண்டை நாட்டில் ஓய்மாநாடு என்னும் பெயருள்ள பகுதியில் அடங்கி நல்லியக்கோடன் என்னும் பெருவள்ளலின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

கொல்லியங்குன்றம் என்னும் பெயருடன் இம்மலை விளங்கியது என்றும், அப்பெயரே இப்பொழுது கொல்லியங்குணம் என்னும் சிற்றூர்ப் பெயராகச் சிதைந்துள்ளது என்றும் கூறுவர் ஒரு சிலர். இக்கொல்லியங் குணம் என்னும் சிற்றூரை மயிலம் வரும் வழியில் ஒருகல் தொலைவில் அன்பர்கள் காணலாம். அவ்வழியில் பெரிய விநாயகர் திருவுருவம் ஒன்றைக் கண்டு மகிழலாம். மிக்க வரபலம் அருளும் விநாயகர் அவர். அவ்விநாயகருக்கு இப்பொழுது திருக்கோயில் பணி நடந்து வருகிறது.

மயிலத்தை அடுத்து 2½ கல் தொலைவில் விழுப்புரம் செல்லும் பெருவழிப் பாதையில் ஆறு ஒன்று ஓடுகிறது. அங்கே மயிலம் முருகப் பெருமான் ஆடிப் பதினெட்டில் ஆற்றுத் திருவிழாக் கொள்ளுவார்.

மயிலம் முருகன் சந்நிதி கிழக்கு நோக்கியது. இராஜகோபுரம் வழியாகச் சாதாரண நாட்களில் மக்கள் செல்வதில்லை. ஆனித் திருமஞ்சனம், மார்கழித் திருவாதிரை ஆகிய விழாக்களில் இராஜகோபுரம் வழியாகப் பஞ்சமூர்த்தி புறப்பாடு உண்டு. பெருவிழாக் காலங்களில் மக்களது நலத்துக்காக இராஜகோபுரம் திறந்து விடப்படும்.



பழனி சேவற்கொடிமேற் சிகப்புச் சேவல்

தெற்குப் பக்கமாகச் செல்லும் வாயில் ஒன்று உண்டு. அதுவே எப்பொழுதும் பயன்பட்டு வருகிறது. அவ்வாயிலின் மேல் முகட்டில் கார்த்திகைத் தீபம் வைக்கப்படும். அவ்வாயில் வழியாக உட்சென்றால் விநாயகர் சந்நிதி, விசுவநாதர் சந்நிதி, ஸ்ரீ சுப்ரமண்யர் சந்நிதி ஆகியவை முறையே அமைந்துள்ள படியைக் காணலாம். பரிவார தேவதைகளாக சண்டேசுவரர், நவக்கிரகங்கள் ஆகியவர்

களுக்குரிய ஆலயங்கள் உட்பிராகாரத்தில் அமைந்துள்ளன.

ஆதிசுவாமிகள் நிட்டை செய்துவந்த ஒடுக்கம் கோயிலின் உட்பிரகாரத்தில் இருக்கிறது. அது இப்போது அடைக்கப்பட்டுள்ளது. கல்லறையொன்று கற்கதவுடன் உட்பிராகாரத்தின் வடக்குப் பக்கத்தில் மணி மண்டபத்திற்குக் கீழ் இருக்கிறது. இதனுள் ஒருவர் தாராளமாக உட்காரலாம்.

ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி வள்ளி தெய்வயானை சமேதராய்க் கிழ்த்திசை நோக்கி நின்ற திருக்கோலத்துடன் காட்சியளிக்கிருர். மயில் இத்தலத்தில் வடக்கு நோக்கிய முகத்துடன் இருப்பது இத்தலத்தின் சிறப்பு நிலையாகும்.

கோயிலுக்குத் தென்புறத்தில் திருமடம் விளங்குகிறது.

திருக்கோயிலின் உட்பிரகாரம் நீங்கலாகக் கோயிலைச்சுற்றி ஒரு பிராகாரமும் கோயிலையும் மடத்தையும் சுற்றி மலையின் பாதிப்பகுதியில் ஒரு பிராகாரமும் விளங்குகின்றன. விழாக்காலங்களில் சுவாமி இம்மூன்றும் பிரா காரமாகிய இருத்தேர் விதியில் உலாக் கொள்ளுவார். ஊரில் உலாக்கொள்வது இல்லை. தெப்பத்துக்கு எழுந்தருளும்போதும் மாசி மகத்திலும், விஜயதசமி விழாவிலும், ஆடிப் பதினெட்டிலும் உத்ஸவ மூர்த்தி மலையினின்றும் இழிறங்கி ஊரிலே உலாக்கொள்ளுவார்.

இங்கே முருகப்பெருமானுக்குக் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களில் அபிடேக ஆராதனைகள் நடந்து வருகின்றன. விசேட அபிடேகங்களில் ஆண்டவன் பலவித அலங்காரத் திருக்கோலங் கோண்டருளும் காட்சி கண்கொள்ளாப் பேரழகுக் காட்சியாகும்.

சித்திரைப் பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனித்திருமஞ்சனம், ஆடிப்பதினெட்டு, புரட்டாசி நவராத்திரி, ஐப்பசி சஷ்டி, கார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் ஆகிய சிறப்புவிழாக்கள் நடைபெறுகின்றன. சித்திரை மாதம் வஸந்தோற்சவம் பதினெரு நாள் நடைபெறுகின்றது. ஐப்பசி சஷ்டி சூரசம்ஹார உற்சவமாக ஆறு நாள் நடைபெறுகின்றது. ஏழாம் நாள் தெய்வயானை திருக்கல்யாணம் நடைபெறுகின்றது. தைப்பூசம் விசேஷமானது. 1008 சங்காபிஷேகமும் இரவு தங்க மயில் வாகன சேவையும் உண்டு. பங்குனி உத்திரம் பெருந்திரு விழாவாகப் பதினெரு நாட்கள் நடைபெறுகின்றது.

மாதந்தோறும் மாதப் பிறப்பு, சஷ்டி, அமாவாசை, பௌர்ணமி, பரணி, கார்த்திகை, பிரதோஷம், சுக்கிரவாரம், விழாக்கள் உண்டு. கார்த்திகை விழாக்கள் சிறப்பாக இருக்கும். கார்த்திகை விழாக்களில் தங்க மயில் வாகனத்திலும், வெள்ளிமயில் வாகனத்திலும், விமானத்திலும் திருமுருகப் பெருமான் எழுந்தருளுவார்.

நடராஜர் அபிடேகம் ஆறும் உண்டு.

மாசி மகத்தின்போது மயிலம் முத்துக்குமார சுவாமி கடல்தீர்த்த வாரியை முன்னிட்டுப் புதுச்சேரிக்கு எழுந்தருளுவார். புதுவையில் ஐந்து நாட்கள் மிகச் சிறப்பாகத் திருவிழாக்கள் நடைபெறும்.

பங்குனிப் பெருந்திருவிழாவில் மட்டும் சுமார் ஒரு லக்ஷத்திற்கு மேற்பட்ட மக்கள் முருகப் பெருமானைக் கண்டு களிக்கின்றனர்.

அன்பர்கள் கோரிக்கைகள் நிறைவேற முடியிறக்குதல், காவடிகளில் தேன், பால், சர்க்கரை, இளநீர், திருநீறு இவைகளைக் கொண்டு வருதல், காணிக்கை செலுத்துதல், பிரார்த்தனை நிறைவேற்றுதல் ஆகியவைகள் இங்கு இடையருது நடைபெறுகின்றன. திருமணங்களும் இங்கே வந்து செய்து கொள்ளுகின்றுர்கள்.

இத்தலத்தைப்பற்றிய நூல்கள் பல உள. அருணகிரிநாதர் ஒரு திருப்புகழ்ப் பாடல் பாடியருளியுள்ளார். மயூராசல புராணம், மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ், மயிலத்துலா (வேலைய சுவாமிகள் இயற்றியது) மயிலாசலமாலை, மயிலாசலக் கலம்பகம் ஆகியவைகள் தற்போதுள்ள சுவாமிகளால் அச்சிடப்பெற்று இலவச வெளியீடாக உள்ளன. மயிலம் திருக்கோயில்-திருமட வரவாறும் இப்போது தேவஸ்தானம் வெளியிட்டிருக்கிறது. புதுவை P. N. இராஜமாணிக்கம் பிள்ளை என்பவர் இயற்றிய மயிலத்தந்தாதி, நெஞ்சு

:: திருவயிந்திரபுரம் ::

வையமேழு முண்டாலிலை வைகிய
மாயவன் அடியவர்க்கு
மெய்யனகிய தெய்வ நாயகனிடம்
மெய்தரு வரைச்சாரல்
மொய்கொள் மாதவிசண்பகம் முயங்கிய
முல்லையங் கொடியாட
செய்ய தாமரைச் செழும்பணை
திகழ்தரு திருவயிந்திரபுரமே

—திருமங்கையாழ்வார்.

ஆழ்வார்களால் பாடப்பெற்ற நூற்றெட்டுத் திருப்பதிகளில் நடுநாட்டில் உள்ளவை இரண்டு; அவை திருக்கோவலூரும் திருவயிந்திரபுரமும் ஆம். திருவயிந்திரபுரம் என்னும் திவ்விய தேசம் தென்னர்க்காடு மாவட்டத்தில் இருக்கிறது. திருப்பாதிரிப்புலியூர் (Cuddalore N. T.) இரயில் நிலையத்திற்கு மேற்கே நாலு கல் தொலைவிலுள்ளது. கெடிலநதிக்கரையில் அமைந்திருக்கிறது. சாதாரணமாக திருவந்திபுரம் என்ற பேரால் வழங்கப்படுகிறது. திரு அயிந்திரபுரம், திரு அஹீந்திரபுரம், அயிந்தை நகர் என்ற பெயர்களும் உண்டு. அஹீந்திரன் (அநந்தாழ்வான்) பூசித்ததால் இப்பெயர் ஏற்பட்டது.

திருமால் அகில உலகங்களைக் காப்பதற்காக எடுத்த அவதாரங்கள் ஐந்து வகைப்பட்டன. அவை, பர, வியூக, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை என்பன. "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம்தானே" என்றபடி அர்ச்சாவதாரமும் ஒன்றெனப்படும். இந்த அர்ச்சாவதாரத்தை நான்குவிதமாக வகுத்துள்ளனர். (1) சைத்தம்—அநாதிகாலமாகப் பகவான்தானே தோன்றியிருப்பது; (2) தைவம்-பிரம்மாதி தேவர்கள் தவம் செய்து தோன்றியுள்ளது; (3) ஆர்ஷம்—முனிவர்கள் தவத்திற்காகத் தோன்றியிருப்பது; (4) மானவம்-முன் மூவகையுமின்றி அரசர், அடியார்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திருவயிந்திரபுரத்தில் தோன்றியுள்ள அர்ச்சாவதாரம் நான்கினுள் முதன்மையான சைத்தம் அதாவது பகவான் அநாதிகாலமாகத்தானே தோன்றியிருப்பது.

இத்திருப்பதியில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் திருநாமங்கள் தெய்வநாயகன், தேவநாதன், தெய்வநாயகமூர்த்தி என்பன. வைகுண்ட நாயகி, செங்கமலவல்லி என்பவை நாச்சியாரின் திருப்பெயர்கள். இறைவன் கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இத்தலத்தில்

விடு தூது என்ற நூல்களும் இப்பதியைப் பற்றியனவே.

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் ஞான குருவாகவும், சூரன் மயில்வடிவான மலையாக இருந்து தவம் செய்ய அருள்புரிந்த கருணையங்கடலாகவும், திருமணக்கோலப் பெருமாளாகவும் இருந்து மெய்யன்பர்களுக்கு இத்தலத்தே காட்சி அளிக்கும் முருகப்பெருமான் இம்மையின்பமும் மறுமையின்பமும் எளிதின் ஈபவர். தன்னடி அடைந்தவர் முன்னிய அனைத்தும் முடிக்கும் மயிலம் முருகப்பெருமான் சந்நிதி வந்து பொன்னடி வணங்கி எண்ணிய எண்ணியாங்கு பெற்றுமண் மிசை இன்புற வாழ்க.

அரும்புக் கருணை மாரிசொரிந்
தன்பு பூண்டோ ரனைவருக்கு
மாண வாதிப் பாசங்க
ளகற்றித் தாபத்திரை யந்தணிய
விரும்பு போலு மனங்களையு
மிளக்கி யுளக்கண் கொடுத்தருளி
யிடேற் றுதற்கே யெழுந்தருளு
மெங்கள் செல்வச் சிவஞானி
கரும்பு பொழிந்த செழும்பாலே
கனியில் வடித்த கொழுஞ்சாறே
கண்டு கேட்டுண் டுயிர்த்துற்றுக்
களிக்கு மமுதே யென்றென்று
விரும்பி நுகரும் பேரின்ப
விளைவே தாலோ தாலேலோ
விறுமயிலை மலையின்மணி
விளக்கே தாலோ தாலேலோ.

—இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர்,

சந்திரவிமானம். தீர்த்தங்கள் கருடநதி, சேஷதீர்த்தம் என்பன. ஆதிசேடனுக்கும், சந்திரனுக்கும் கருடனுக்கும் பிரத்தியட்சம்.

இத்திருப்பதியைப்பற்றிப் பிரம்மாண்ட புராணத்தில் ஐந்து அத்தியாயங்களிலும், காந்தபுராணத்தில் நான்கு அத்தியாயங்களிலும், பிரகங்காரதிய புராணத்தில் ஐந்து அத்தியாயங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. திருமங்கை மன்னன் பத்து பாசுரங்களால் மங்களசாசனம் செய்தருளியுள்ளார். ஸ்ரீமன் நிகமாந்த மகாதேசிகன் வடமொழி, பிராகிருதம், தமிழ் இம்மொழிகளில் பல தோத்திரங்கள் செய்துள்ளனர்.

என உருவில் மருப்பில் உலகை எடுத்தது, வையமுண்டு ஆலிலைமேல் துயின்றது, அவுணன் மார்பகம் பிளந்தது, மூவுலகம் ஈரடியால் அளந்தது, சக்கரவர்த்தித் திருமகனாய் சீதையுடன் கானகம்போனது, இலங்கை மன்னன் முடி பொடிசெய்தது, மலையைக் குடையாகப் பிடித்து ஆநிரைகளைக்காத்தது, பார்த்தனுக்குச் சாரதியானது முதலிய திருமாலின் திருவிளையாடல்களை திருமங்கையாழ்வார் அருளிய பாசுரங்களில் எடுத்தோதுகின்றார். 'வானுலாவிய மதிதவழ்மால்வரை மாமதிள்புடைசூழ, தேனுலாவிய செழும்பொழில் தழுவிய திருவயிந்திரபுரமே' என்றும், 'வரைவளந்திகழ் மதகரி மருப்பொடு மலைவளரகிலுந்தி, திரைகொணர்ந்தணை செழுநதிவயல்புகு திருவயிந்திரபுரமே' என்றும் இயற்கையழகை எடுத்தியம்பியுள்ளனர். இறைவனைத் தெய்வநாயகன் என்ற திருப்பெயரால் ஒரு பாசுரத்தில் கூறியிருக்கின்றார். எம்பெருமான் திருக்கோயிலின் ஒருபுறம் கெடிலநதி வளைந்தோடுவதும், மற்றொரு பாங்கர் சிறு குன்றும் அதன்மேல் ஒரு கோயில் இருப்பதும் இயற்கைக் காட்சியின் மாட்சியாய் விளங்குவது நேரில் காணவேண்டியவை.

ஸ்ரீ தேசிகன் மற்றெல்லாத் திருப்பதிகளைக் காட்டிலும் திருவயிந்திரபுரத்தின்மேல் அளவற்ற பக்தி பூண்டு அங்கு பல காலம் தங்கியருளியிருந்தார். இதனாலேயே அவர், 'அயிந்தைமாநகரில் அமர்ந்தனை எமக்காய்' என்றும், 'மகிழ்ந்து வாழும் போதிவை நாம் பொன்னயிந்தை நகரில் முன்னாள்' என்றும் தாம் மகிழ்ச்சியுடன் உறைந்த இடம் திருவயிந்திரபுரமே என்றும் கூறியுள்ளார். அவர் இங்கே தான் மந்திரசித்தியும் பெற்றார்.

இக்கோயிற் சுவர்களில் சில கல் வெட்டுக்களும் காணப்படுகின்றன. முதற் குலோத்துங்க சோழன், விக்கிரமசோழன், மூன்றும் இராஜராஜசோழன், முதல் சுந்தரபாண்டியன், விக்கிரமபாண்டியன், வீரபாண்டியன், மூன்றும்ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், விஜயநகர மன்னன் அச்சுதராயன், பெருஞ்சிங்கன் முதலிய அரசர்கள் காலத்தவை. கோயில் விளக்குகளுக்காக ஆடுகள், நிலதானம், பொன் வழங்கியதையும், நிலவிற்பனை முதலியவற்றைப் பற்றியும் கூறுகின்றன. பெருஞ்சிங்க தேவனின் நன்மைக்காக மேற்குக் கோபுரம் கட்டப்பட்டதாக ஒரு கல் வெட்டறிவிக்கிறது. தமிழ்ப் பாடலாகவுள்ள ஒரு கல்வெட்டு தொண்டைமன்னன் ஒருவனைக் குறிக்கின்றது. விஜயநகர மன்னன் கல் வெட்டு தெலுங்குமொழியிலுள்ளது. மூன்றும் இராஜராஜன் (கி. பி. 1216-48) கல்வெட்டொன்றில் உள் நாட்டுக் குழப்பத்தைப்பற்றித் தெரிவிக்கிறது. பெருஞ்சிங்கன் சோழ மன்னனைச் சேந்தமங்கலம் என்ற இடத்தில் சிறைப்பிடித்ததும், ஒய்சளமன்னன் வீரநரசிம்மன் (II) சோழனைச் சிறைமீட்டு அரியணை ஏற்றியதும், பெருஞ்சிங்கனுக்குத் துணையாகவந்த இலங்கையரசன் பராக்கிரமபாகு போரில் உயிர் துறந்ததும் முதலிய செய்திகள் இக்கல்வெட்டில் காணக்கிடக்கின்றன. இவை வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்குப் பேருதவியாயிருப்பன.

மின்னுமாழி யங்கையவன் செய்யவ
ளுறைதரு திருமார்பன்
பன்னுநான் மறைப்பல் பொருளாகிய
பரமனிடம் வரைச்சாரல்
பின்னுமாத விப்பந்தலில் பெடைவரப்
பிணியவிழ் கமலத்து
தென்ன வென்று வண்டின்னிசை
முரல்தரு திருவயிந்திரபுரமே.

—திருமங்கையாழ்வார்.

அன்பு அணிந்த சிந்தையராய் ஆய்ந்தமலர்தூவி
முன்பணிந்து நீர்எமக்கு மூர்த்தியரே—என்பர்
எம்ஐயிந்திர புரத்தார்க்கு இன்தொண்டர் ஆனுர்
தமை இந்திர புரத்தார் தாம்.

—பிள்ளைப்பெருமாளையங்கார்.

திருநந்திதேவர்*

[திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள்]

உலகத்திற் பல ஜீவன்கள் இருந்தபோதிலும் மனிதனை மட்டும் உயர்வாகக் கருதுவானேன்? மனிதனிடத்து ஓர் உயரிய குணம் இருக்கிறது. அதுவே தன்னைப்பற்றி ஆராயும் குணம் இவ்வித அறிவே உயர்ந்ததாகும். இதுவே ஆன்மாவைத் தூய்மைப்படுத்தவல்லது. மற்றவையெல்லாம் ஒரு சமயம் இருந்து மறுசமயம் மறைவன. அவை சிற்சில இடங்களுக்கோ சிற்சில சமயங்களுக்கு மட்டுமோ பயன் படுவன.

பின்னர் உடம்புக்கும் உயிருக்குமுள்ள சம்பந்தம் என்ன? உடல் வேறு; உயிர் வேறு; இந்நிலையை அறியக் கூடிய அறிவு இன்னும் நமக்கு வரவில்லை. தற்போதைய நம்முடைய அறிவு ஐந்தாகப் பிரிந்து நிற்கிறது. ஒன்று பலவாகப் பிரியும்போது பலம் குறைவது இயற்கை. பள்ளத்தின் வழி நீர் ஓடுவதுபோல ஐம்புலன்களின் வழி ஓடும் அறிவு கண்ணின் வழியே வெகுதூரம் செல்கிறது. மற்றவை நம்மிடமே உள்ளன. அவை சிறிது தூரத்தில் உள்ளவைகளையே அறியும் தகுதியுடையன.

கண்ணால் பார்க்கப்படுவதே உலகம். ஆங்கிலத்தில் பார்ப்பதற்கு லுக் (Look) என்று சொல்கிறோம். பார்ப்பது லோகம். இது லுக் என்பதன் தாதுவினடியாகப் பிறந்தது. இவ்வுலகத்துப் பொருள்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. உலகத்தை நன்றாகப் பார்ப்பவனே தன்னைப் பார்க்கிறான். இல்லாதவன் தன்னைப் பார்ப்பது இல்லை. எதிரில் உள்ளதைமட்டும் அறிவது அறிவன்று. இவ்வித அறிவை யுடையவன் மனிதனாகக் கருதப்படமாட்டான். சாதாரண உலகில் பெரியோர் வைத்துவிட்டுப்போன சொத்தைக்கொண்டு காலந் தள்ளுபவனுக்கு மதிப்பு அதிகமா? அல்லது தானாகவே கஷ்டப்பட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழச் சம்பாதித்து அதனால் ஆம் பயனை அனுபவிப்பவனுக்கு மதிப்பு அதிகமா? பின்னவனுக்கே மதிப்பு அதிகம் என்று கூறுவதில் த்டைசொல்வார் யார்? அதனால் உயர்ந்த பொருள்களைக் காண்பதே அறிவாகும். உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்று அறிந்து கொள்வது மட்டும்தானா நம்மறிவுக்குத் தகுதி? நம்மறிவு அதையும் தாண்டிச் செல்லுதல் வேண்டும்.

உலகத்துக்கு வேறொரு பெயர் ஜகத் என்பது. ஜ – தோன்றுவதைக் காட்டும் ஓரெழுத்து. க – மறைவது. இவ்வுலகம் தோன்றி மறைவதென்பதை இப்பதம் குறிக்கிறது. தோன்றின பொருள் மறையும்; மறைந்த பொருள் தோன்றும். ஐந்து பூதங்களும் ஒரே காலத்தில் இருந்தது இல்லை. ஒவ்வொரு பூதத்துக்கும் சக்தி உண்டென்பதைத் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆகாய சக்தியினால் இக்காலத்தில் எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றன. இவ்வைந்து பூதங்களும் தோன்றின காலத்தை அறிவது அரிது.

ஆகாசம், வாயு, தேயு, நீர், மண் என்ற முறைப்படியே இவை ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின. இவை ஒன்று சேர்ந்ததே உலகம். சிலர் உலகம் இயற்கையென்பர். அன்னார் உலகத்தில் சூடு, குளிர் முதலிய இருவித குணங்களிருப்பதை அறியார். இரண்டுவித வேறுபட்ட குணங்களிருப்பின் அஃது இயற்கை உலகமாகுமா? இதனால் இவ்வுலகம் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதே: உலகம் உண்டானபோதே நாம் உண்டானோம். உலகத்திலுள்ள ஐந்து பூதங்களும் ஒன்றுபட்டிருத்தலால் இதை ஒரு சித்புருஷன் ஆட்டிவைத்தல் வேண்டும்.

இவ்வுலகத்தை ஈசாவாஸ்யம் என்றும் கூறலாம். ஈசனால் படைக்கப்பட்டதே ஈசாவாஸ்யம். அவனே தன்னால் படைக்கப்பட்ட உலகத்தைக் காப்பாற்றுபவன். உயிரற்ற பொருள்களைக் கூட்டிவைக்க ஒருவன் இருப்பதாலேயே அவை ஒன்றுசேர்ந்து இயங்குகின்றன.

இவற்றைக் கூட்டுவிப்பவனை நீ எவ்வாறு உணர்வாய் என்ற கேள்வி எழலாம். நமக்குப் பக்கத்திலுள்ள காற்றை நாம் காண்கிறோமா? காணாததால் காற்று இல்லையென்று கூறிவிட முடியுமா? சில சமயங்களில் அக்காற்று உஷ்ணமாய் இருப்பதையும் சில சமயங்களில் அது குளிர்ச்சியாயிருப்பதையும் உணர்கிறோம். அதனால் காற்றென்பது உண்டென்று நிரூபிக்கிறோம். அதுபோலக் காணாததைக் கண்டு கூறுவோரே பெரியோர். இதை வேறோர் உதாரணத்தாலும் விளக்குவாம்.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு சிறு பையன் சேர்ந்து இரண்டு மாதங்களே ஆயினவென்று வைத்துக்கொள்வோம். வேறொருவன் இரண்டு வருஷங்களாக வாசிக்கிறான். கல்வி உத்தியோகஸ்தர் வரும்போது ‘ட’ என்ற எழுத்தைக் கரும்பலகையில் எழுதி முன்னவனைக் கேட்டால் அவன் என்ன கூறுவான்? ஒரு கோடு என்பான். பின்னவனோ ‘ட’ என்ற ஒலியைக் குறிப்பதென்பான். இருவருக்கும் வித்தியாசம் என்ன? முன்னவன் கண்டதைக் கண்டவாறே கூறினான். பின்னவனோ கண்டதை மனத்தில் கொண்டு கண்ணுக்குக் காணப்படாத ஒன்றைக் கூறினான். இவ்விருவரில்

*இது, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலை வெள்ளீச்சரத்தில் 25-4-37ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

பின்னவனையே நாம் மெச்சுகிறோம். அப்படியே பெரியோரும்.

உயிரற்ற பொருள்கள் ஒன்று சேர்ந்தபோது மனிதனைக் காட்டிலும் அறிவுடையனவாகின்றன. உதாரணமாகக் கடிகாரத்தை எடுத்துக்கொள்வோம். அஃது உயிரற்ற பொருள். ஆயினும் மனிதன் அறிவுக்கு எட்டாதகால அளவை அது காட்டுகிறது. எனவே, அது மனிதனைக் காட்டிலும் அறிவுள்ளது. அச்சிறப்பு அதற்கு எவ்வாறு வந்தது? அதற்குள் ஒரு சித்புருஷன் இருந்து அதனை ஆட்டிவைப்பதனாலன்றோ?

ஈஸ: என்ற பதத்துக்கே கடவுள் என்பது பொருள். இது காப்பாற்றுபவன் என்பதை உணர்த்துகிறது. காக்க உள்ளவனே கடவுள். அக்கடவுள் இரக்கம் அல்லது அன்பு மயமாகவே யிருக்கிறார். இதனாலேயே திருநாவுக்கரசு சுவாமிகள் வேதாரண்யத் தேவாரத்தில்,

"இரக்கமொன்றிலீர்......"

என்று கடவுளைச் சுட்டுகிறார். தயை இல்லாவிடில் ஆன்மாக்கள் ஜீவிக்கமாட்டா. அதனால் கடவுளிடம் அன்பு உண்டு. இதை நாம் காண்பதில்லை. இதற்கு உதாரணமாக எதைக் கூறுவது? முன்னர்க் கூறிய காற்றையே கூறலாம். இக்காலத்தில் காற்றுக்கு எடை உண்டு என்பது கண்டு பிடிக்கப்பட்டபோதிலும் நாம் அதைக் காண்கிறோமா? இல்லையே! கடவுள் சோதனைக்கு அகப்படாதவன். அதனாலேயே பெரியோர் அக்கடவுளைச் 'சோதனைக்ககப்படாச் சோதி! உன்னைச்சோதிக்கத் துணிந்தேன்' என்று கூறினர். உலகத்தைப் பார்க்கப் பார்க்கவே நமக்குக் கடவுள் நினைவு உண்டாகிறது.

பால் தயிராகத் திரிதல்போலப் பஞ்சபூதம் இத் தேகமாகத் திரிந்தது. பஞ்சபூத பரிணாமமே உலகம் என்பர். காரணம் தப்பினால் மாணம் உண்டாவது நிச்சயம். காரணத்தை நாம் இருதயம் (Heart) என்று கொள்ளலாம். பிரிந்துகிடக்கிற பஞ்சபூதங்களையும் கடவுள் அன்பால் ஒன்று சேர்த்துக் காக்கிறார். நாம் அவரிடம் அன்பு பாராட்டவில்லையேல் அவர் நம்மை வெறுப்பார். கடவுளுக்கு எல்லாரிடத்தும் ஒரேவிதமான அன்பு உண்டு.

இக்காலத்தில் சிறிய உதவி செய்தவருக்கும் நாம் வந்தனம் (Thanks) செலுத்துகிறோம். கடவுள் அன்புக்கு நாம் கைம்மாறு காட்டுகிறோமா? ஈசன் நமக்கு இவ்வளவு பெரிய உலகத்தைக் கொடுத்தான். அதை நாம் மறந்து விட்டோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று திருவள்ளுவர் கூறுகிறார். செய்த நன்றியை மறப்பது கொலை செய்தலுக்குச் சமமாகும்.

கடவுளிடத்து நாம் நன்றியை எவ்வாறு காட்டுதல் கூடும். அவனைப்பற்றிய நினைவு சதா நம்மிடம் இருத்தல்வேண்டும். ஆனால் அவனோ நம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவன். அதனாலேயே மணிவாசகனார் கடவுளை "மாற்றம் மனங் கழிய நின்ற மறையோனே" என்றார். தைத்திரியோபநிஷத்தும் வாக்கு மனம் கடந்ததே கடவுள் என்று கூறுகிறது.

அப்படிப்பட்ட கடவுளைக் காணுதல் எவ்வாறு? உருகிய உள்ளத்துக்கு அவன் வெளிப்படுவான். 'உள்ளம் உருகின் உடனாவர்' என்பது திருவுந்தியார்.

'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'

—பட்டினத்தார்.

'அழுதால் உன்னைப் பெறலாமே......'

—மணிவாசகனார்.

அவனைத் தவிர நம்மைக் காப்பார் ஒருவர் இல்லை. அதனால் அவனொருவனே நமக்குக் கதி.

இதுவரை கடவுளைப்பற்றியும், அக்கடவுளைப்பற்றிய நினைவே சதாநம்மிடம் ஏன் இருத்தல் வேண்டுமென்பது பற்றியும் பேசினோம். இனி நந்தி தேவரைப்பற்றிச் சிறிது பார்ப்போம்.

நந்தி என்ற பதத்துக்கே சந்தோஷமாயிருப்பவன் என்பது பொருள். பிறரைச் சந்தோஷப்படுத்துபவனும் அவனே. நந்தியோடு 'ஆ' சேர்த்தால் ஆநந்தி என்றாகிறது. ஆனந்த மயமே நந்தி. சந்தோஷம் நிலைத்

திருப்பதன்று; ஒரு காலத்தில் மறையக் கூடியது. ஆனால் ஆனந்தமோ என்றும் நிலைத்திருப்பது. நந்தி, நம்பன் முதலியன கடவுள் பெயர்கள்.

இனி நந்திக்குரிய வேறுபல பெயர்களைக் கவனிப்போம்.

தேவர் என்பதும் நந்தியின் பெயர். தேவர்க்குரிய சிறப்புக்கள் என்ன? அவர் அதிக வயதுள்ளவர்; அமுதம் சாப்பிட்டவர்; பொன்னுலகத்தில் இருப்பவர்: கிழத்தனம் இல்லாதவர்; காளைப் பருவம் உடையவர்; நல்லனவற்றைச் செய்து புகழுடம்பு பெற்றவர்.

" ஆதியிலும் திருநந்தி அனுதியிலும் திருநந்தி
வாதனையால் விளையாட வருமிடமும் திருநந்தி
தீதிலாத திருநந்தி திகழ்பெருமைத் திசைமுகனுர்
ஓதிடினும் அவர்க்குவாய் ஒருகோடி போதாவே"

என்று ஞானக் கூத்தர் நந்திபெருமான் பெருமையைக் கூறியிருக்கிறுர்.

ஒருவர்க்கு ஆசை உண்டாயின் அன்பு குறையும்; அதனுல் அறிவு குறையும். அதனுல் பிறவாமலிருக்க ஆசைப்படுங்கள் என்று திருவள்ளுவர் கூறுகிறுர்.

' வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்'

—திருக்குறள்.

ஆசைகளைப் பூர்த்தி செய்தவர் திருநந்தி. 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்.' பிறர்க்கு உபகரிப்பதே செல்வர்க்கு அழகு. நந்தி ஆனந்தச் செல்வர். அவர் நமக்கு உதவி செய்யாமல் இரார். இதனுற்றுன்,

" செம்பொரு ளாகமத் திறன் தெரிந்து
நம்பவ மறுத்தநம் நந்தி வானவன் "

என்று கூறப்பட்டிருக்கிறது. தெரிந்து என்பது என்னைத் தெரியும்படிச் செய்து என்ற பொருளில் வந்திருக்கிறது.

ஒருவன் படிக்குந்தொறும் படிக்குந்தொறும் அறியாமையே மிகும் என்று திருவள்ளுவர் திருக்குறளில் கூறியிருக்கிறுர். அதனுல் படிப்பதாலேயே நம் சந்தேகங்கள் தெளிவுரு. நாம் ஒரு குருவைக் கொள்ளுதல் வேண்டும். திருநந்திதேவரே நமக்கேற்ற குரு. குருவுக்கு மேகத்தை ஒப்பிடலாம். சமுத்திரத்திலுள்ளது உப்பு நீர். அது குடிக்க உதவாது; குளிக்க உதவாது. அதுபோலவே சாத்திரக்குப்பை. சாத்திரக்குப்பை நமக்கு உதவாது. ஆனுல் மேகமாகிய குரு என்ன செய்கிறுர். மேகம் சமுத்திர நீரை உட்கொண்டு நமக்குச் சுத்த நீரை அளிப்பது போலக் குரு சாத்திரக் குப்பைகளின் உட்பொருளைக்கொண்டு நமக்கு உபதேசமாக வழங்குகிறுர். அதனுல் கடவுள் குருவாக வந்த மூர்த்தமே திருநந்திதேவர்.

" அங்கணன் கைலை காக்கும் அகம்படித்
தொழின்மை பூண்டு
நங்குரு மரபுக் கெல்லாம்
முதல்குரு நாதன் ஆகி "

என்று நந்திதேவரைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

இணைப்பை யறிந்தால் பிரவர்த்தியை விடுகிறோம். ஓடுகின்ற அறிவு பிரவர்த்தியின் பாற்பட்டது. அதைக் கட்டுப்படுத்தலே நிவர்த்தி மார்க்கமாகும். நாம் நிவர்த்தி மார்க்கத்தில் செல்ல எண்ணுகிறோம். இதைக் கற்றுக்கொடுப்பவர் கோயிலிலுள்ள நந்திதேவர். ஆகமம் இதையே கூறுகிறது. ஆகமம் என்பதற்கு வருகிறது என்பது பொருள். மந்திரியாக இருந்த மணிவாசகனுர் பரமகுருவின் வரவை நோக்கி அழுதனை பெறுகிறோம்.

இனி நந்திக்குரிய குணங்கள் யாவை என்பதை ஆராய்வோம். அவர்க்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நந்தியெம்பெருமானுக்கு நந்தியென்பது தீக்ஷாநாமம். நாமம் மட்டும் இருந்து பிரயோசனம் இல்லை. அதனுலேயே அவர்க்கு அதிகாரம் வழங்கப்பட்டது. பெயர் இருந்து அதிகாரம் இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லாமையைத் திருக்குறள் விளக்குகிறது. சிவபெருமான் நந்திக்கு அதிகாரம் கொடுத்தமையைத் திருவையாற்றுப் புராணம்,

" வருநந்தி மிசைக்கொண்டு
வானுலவுந் திரிபுரங்கள்
கருநந்தி விழநகைத்த
கண்ணுதலோ னென்றுலகக்

குருநந்தி யையாறன்
குலவுமுனி மைந்தனுக்குத்
திருநந்தி தேவனெனத்
திருநாமஞ் சாற்றினனே"

என்ற செய்யுளில் கூறுகிறது.

நந்திதேவர்க்குரிய அங்கங்கள் என்ன? இதைத் திருவையாற்றுப் புராணம்,

"மற்றிணையி லாக்கயிலை
மலைநாதன் நந்திக்கு
நெற்றியிற்கண் நாலுபுயம்
நெருப்புருவம் பிறைகொண்முடி
சற்றுமொரு குறையில்லாச்
சாருபம் பணித்தருளிப்
பெற்றியின லருட்சுரிகைப்
பிரம்புமருள் செய்தனனே"

என்று கூறுகிறது.

நெற்றிக்கண் ஆசையில்லாமையைக் காட்டுகிறது. ஆசையை உண்டாக்க வந்த மன்மதனை எரித்தது நெற்றிக்கண். நான்கு புயங்கள் சாதாரண மனிதரல்லர் என்பதைக் காட்டுகின்றன.

நெருப்பின் நிறம் தனியே யிருக்கும் தன்மையுடையதல்ல. சார்ந்ததன் நிறத்தையே அஃது உடையது. அதனால் நெருப்பின் நிறம் வெண்மை என்னலாம். நந்தியின் வடிவம் வெண்மை. இது நெருப்பைக் குறிக்கிறது. கடவுள் அழல்வடிவினன். அதனால் கடவுளின் அம்சமே திருநந்தி.

நந்திதேவர்க்குச் சந்திரனும் உண்டு. சந்திரன் இரவில் சஞ்சரிப்பவன். அதனால் அவன் தோஷசஞ்சாரி. தோஷத்தில் சஞ்சரித்து நன்மை உண்டாக்குபவன். இதுவே குருவின் நோக்கம்.

நந்திதேவர்க்கு அளித்திருப்பது சாரூப முத்தி. முத்தி மூன்று வகைப்படும்; பழிபடு முத்தி, பதமுத்தி, பரமுத்தி. முத்தி அல்லாதது பழிபடுமுத்தி. படிப்படியாக வருவது பத முத்தி. எல்லாவற்றையுங் கடந்தது பரமுத்தி. பரமுத்தியே சாரூபமுத்தி. கடவுளிடமிருந்து எல்லாப் பாக்கியமும் கொண்டவர் சாரூப முத்தியடைந்தவர். இஃது ஒரு குறைவு மில்லாதது. சிவபெருமான் உருத்திரரெல்லார்க்கும் சாரூபமுத்தி யளித்திருந்த போதிலும் நந்தியெம்பெருமானுக்கு அளித்தது போல அதிகாரம் தரவில்லை. அதிகாரம் அடிக்கவும் அணைக்கவும் உபயோகப்படுகிறது.

திருநந்திதேவர்க்குப் பிரம்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதற்காக? சந்நிதானத்தை மறைப்பவர்களை அடிப்பதற்காக. அடிபட்டவரே ஆண்டவனை நினைப்பர்.

நந்திதேவர் உடைவாளையும் உடையவர். இதுவும் அதிகாரத்துக்கு அறிகுறி.

நந்திதேவரின் வலது கையில் மழுவும் இடது கையில் மானும் உண்டு. இவ்விரண்டும் வேதத்தைக் குறிப்பன. பட்டினத்தார் திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதில்,

"வேதம் மான்மறியே......"

என்று கூறி யிருக்கிறார். வேதமாகிய மான் குட்டியைத் தாங்கி யிருக்கிறார் என்பது வேதமாகிய பொருளைத் தாங்கி யிருக்கிறார் என்று பொருள்படும். வலது கையிலுள்ள மழு வீரத்தைக் காட்டுவது; ஆண்மையை உணர்த்துவது. மழுவை விட்டதாக எந்தச் சரிதமும் கூறவில்லை. மழு சம்ஹரிக்கும் தன்மையுடையது. அதனால் கடவுள் சம்ஹார கர்த்தாவாகிறார். எல்லாவற்றையும் சம்ஹரிப்பவனே உண்டாக்கவல்லவன். இதுவே கடவுள் சக்தி. சம்ஹாரன் என்ற பதத்துக்கு ஒழுங்காக இழுத்துக்கொள்பவன் என்பது பொருள். சமஹாரம் ஓய்வு பெறுதல். இது கடவுளின் அன்பின்பாற்பட்டது. எல்லா ஜீவன்களையும் ஒரே காலத்தில் ஒய்வுபடுத்து தலே மகா சம்ஹாரம். இவ்வதிகாரம் திருநந்தி தேவர்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாட்சியாகப் பிரம்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

திருநந்திதேவர் ஒரு சித்தனுமாவர். சித்தன் வாழ்வுபற்றித் திருவேரகத்தைப் பற்றிய திருமுருகாற்றுப்படை உரையில் நச்சினார்க்கினியர் கூறியிருக்கிறார். சித்தி செய்யத் தொடங்கியவன் ஞானியாகமாட்டான். நினைவு இல்லாமல் சித்தி கைவரப் பெற்றவரே சித்தர். திருவையாற்றுப் புராணம்,

"யோசனைகள் பன்னிரண்டா
யிரமுள்ள திருமலையிற்
பேசரிய சாரூபம்
பெற்றகன நாதருக்கும்
பாசமிலாச் சித்தருக்கும்
பாரிடங்க ளானவர்க்கு
மாசின்மே லதிகார
மையளிந் தருள்செய்தான்"

என்ற செய்யுளால் நந்தியெம்பெருமானுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டமை கூறப்பட்டிருக்கிறது.

இவ்வளவு அதிகாரத்தோடு கூடிய நந்திக்கு ஆலயத்தின் காவல் தரப்பட்டிருக்கிறது. இதை மேற்படி புராணம்,

"ஏழுமதில் புடைசூழ்ந்த
விருநான்கு வாயிலுக்கும்
வாழியதன் றனைப்பணிய
வருமடியார் யாவரையும்
சூழவரு காலங்க
ளறிந்துவிடுந் தொல்பணிக்கு
மாழிசூழ் புவித்தன்
ஆலயத்தினுங் காவல் கொடுத்தான்"

என்று கூறுகிறது.

இக்காவலின் திறத்தை மன்மதன் சரித்திரம் விளக்குகிறது. மன்மதன் சிவபெருமான்மீது பாணத்தை விடத் துணிந்தான். நந்தி 'உம்' எனவே அவன் பெருமூச்சு விட்டான். நந்தியின் காப்பைக் கண்டதும் அவன் பயம் கொண்டான். பெரிய புராணம்,

"நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அனேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க்கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினல் பெற்றுன்
காப்பதக் கயிலைமால் வரைதான்"

என்பதால் நந்தி கோயில் காவல் பூண்டமை விளங்குகிறது.

ருத் என்றால் துக்கம் என்று பொருள்; ரன் ஓட்டுகிறவன். அதனால் ருத்ரன் துன்பத்தை ஓட்டுபவன். "இடும்பை நோய் ஓட்டும் உருத்திரன்" என்று சிவஞான முனிவர் கூறுகிறார். இப்பெயரும் திருநந்திதேவர்க்குப் பொருத்தமாகும். எப்படி? ஒரு காலத்தில் தேவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து சிவபெருமானிடம் சூரபன்மனைப்பற்றி முறையிடச் சென்றனர். பிரமர்வே முதலில் சென்றார். அவர் நந்தியை நோக்கி,

"நந்தியெம் போதுகேள்
நங்கள்பால் துன்பெலாம்
சிந்தை செய்திடுதி"

என்று கூறினார். இக்கூற்றைக் கண்டு நந்திதேவர் பரிதாபப்பட்டார். துன்பப்படுபவரைக் கண்டு பரிதாபப்படல் சான்றோர் இயல்பு.

உடனே நந்திதேவர் உள்சென்று பரமனுடைய ஆக்ஞையைப் பெற்றுத் தேவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். இதனாலேயே நந்திதேவர்க்குத் தூயவன் என்ற பெயரும் உண்டாயிற்று. நந்திக்குச் சைலாதிபதி என்ற ஒரு பெயரும் உண்டு. அவர்க்குத் தண்டித்தற் பணியும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரு சமயம் பிரம்மா செய்த யாகம் ஒன்றுக்கு நந்திதேவர் அனுப்பப்பட்டார். ஆங்குத் தக்கன் சிவபெருமானை இழித்துக் கூறினான். நந்தியெம்பெருமான் இரு காதுகளையும் பொத்திக்கொண்டு 'சிவ, சிவ' என்றார். இதுவே மந்திரம் சொல்லவேண்டிய முறை. நம்முடைய காதுக்கும் கேளாதபடி நாம் மந்திரத்தைச் சொல்லுதல் வேண்டும். உடனே தக்கன் தலைபோகவென்றும், அவ்விடத்தில் ஆட்டுத்தலை உண்டாவதாக வென்றும் நந்திதேவர் சாபம் போட்டார். ஆட்டுத்தலை மற்றெருதரம் தூஷியாது என்பதனால் அவ்வாறு சபித்தார் போலும்.

காசியில் விஸ்வநாதருக்குத் துரோகம் செய்ய எண்ணிய வியாஸரைத் தண்டித்தவரும் திருநந்திதேவரே.

'எனைத்தானும் நல்லவைகேட்க அனைத்தானும் ஆன்ற பெருமைதரும்' என்ற திருக்குறள்படி உபதேச அளவே நமது குணமும் இருக்கும். அவ்வளவே பெருமையும்.

சனற்குமாரர் பிரமதேவருடைய புத்திரர்;

சிவலிங்கம்

இலிங்கம தாவ தியாரும் அறியார்
இலிங்கம தாவ தெண்டிசை யெல்லாம்
இலிங்கம தாவ தெண்ணெண் கலையும்
இலிங்கம தாக எடுத்த துலகே.

—திருமூலர்

சிந்துவெளியில் அகழ்ந்தெடுத்த புதை பொருள்களில் சிறியவும் பெரியவுமான பல சிவலிங்கங்கள் இருக்கின்றன. சர் ஜான் மார்ஷல் என்பார் எங்கும் சிவலிங்க மயம் என்று கூறி யிருக்கிறார். சிந்து வெளி நாகரிகத்தை இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முற்பட்டதென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஆதலின் சிவலிங்க வழிபாடு வேத காலத்திற்கு முற்பட்டதென்பர். இச்சிவலிங்கங்களைக் கண்ட மேனாட்டு ஆராய்ச்சி வல்லுநர்கள் 'சைவ சமயம் கணித்தறிய முடியாத பழமையுடையது' என்று வியப்புற்றுக் கூறியுள்ளனர்.

சிவலிங்கம் என்பது சிவம், இலிங்கம் என்று இருசொற்களால் ஆயது. சிவம் என்பது கடவுள்; லிங்கம் என்பது அடையாளம். சிவலிங்கம் என்பது கடவுளைக் காட்டும் குறி அல்லது அடையாளம் என்பது பொருள். லி=லயம், ஒடுங்குதல்; கம்=போதல், தோன்றுதல். லிங்கம் என்றால் ஆன்மாக்களும் உலகங்களும் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்குமான இடம் என்பது விரிந்த பொருள். இலிங்கம் என்பது இலங்கு என்னும் சொல்லடியாகப் பிறந்து இலங்குவது, விளங்குவது என்ற பொருளுடையதென்றும் கூறுவர். உலகம் தோன்றக் காரணமாயும் அதற்கும் அப்பாற்பட்ட ஒரு முழுமுதலைத் தமிழன் கடவுள், இயவுள் என்ற பெயர்களையிட்டு அழைத்தான். கடவுள் என்ற சொல்லில் கட + உள் என்பவை பகுதி விகுதிகள். கட என்பது எல்லாவற்றையும் கடந்தவன் (Transcendental) என்பதைக் குறிக்கும். எல்லாவற்றையும் கடந்தவன் என்றால் உலக உயிர்களுக்கு என்ன பயன் என்று கேட்டு விடுவார்கள். ஆதலின், உள் என்ற விகுதியால் கடவுள் எல்லா உயிர்களுக்குள்ளும் (Immanent) நீக்கமற நிறைந்து நிற்பதைக் குறிக்க நிற்பது தோன்ற கடவுள் என்ற சொல் அமைந்திருக்கிறது. இயவுள் என்பது எல்லாவற்றையும் இயக்கும் சக்தி யுடையவர் என்பது உணர்த்த நிற்கின்றது.

சிவன் என்றால் சிவந்தவன் என்று பொருள்; செம்மை என்ற சொல்லடியாகப் பிறந்தது என்றும் சொல்லலாம். 'சிவன்' எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்' என்பதும் காண்க. பிலிப்பைன் தீவுகளில் இன்றும் மக்கள் சிவனைச் சிவப்பன் என்றே வழங்குகின்றனர். ஞாயிறு (செங்கதிர்) வழிபாடே சிவவழிபாடாக நாளடைவில் வந்ததென்பது ஆராய்ச்சியாளர் கொள்கை. அவ்வழிபாடு உலகம் முழுவதும் பரவி யிருந்ததென்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. மக்கள் குடியிருப்புப் பெரும்பாலும் கோயில்களைச் சுற்றி யிருந்தன. அங்கு கோயில் கொண்டிருந்த சிவனுடைய பெயர்களை நகர்கள், இடங்கள் முதலியவற்றிற்கு இட்டனர். எகிப்து நாட்டிலே இலிபியவனாந்தரத்தில் சிவன் என்னும் பாலை நிலப் பசுந்தரை ஒன்று இன்றும் உள்ளது. பாபிலோனியாவில் சிவன் என்னும் பட்டணத்தின் பெயர்

முருகப்பெருமானுடைய சிஷ்யர்; என்றும் இளமையுடையவர்.

பரமேஸ்வரரிடத்து உபதேசம் பெற்றவர் அனந்ததேவர். அவர் ஸ்ரீகண்டருக்கு உபதேசித்தார். அவர் நந்திதேவர்க்கும், நந்திதேவர் சனத்குமாரர்க்கும், சனத்குமாரர் சத்திய ஞானதரிசனிக்கும், அவர் மெய்கண்டாருக்கும் உபதேசித்தனர். இது பரம்பரையாக வந்த உபதேசம். உபதேசம் இருவகைப்படும்; ஒன்று நூல் வகையாக வருவது; மற்றொன்று பரம்பரை வழியாக வருவது.

"எந்தை சனற்குமரன் ஏத்த இயல்பாய் நந்தி உரைத்தருளும் ஞானநூல்" என்றார் பெரியாரும். ஆசாரிய முறையில் நமக்கு அனுக்கிரகம் பண்ணுகிறவர் திருநந்தி தேவரே.

—ஞானியார் சுவாமிகள் நினைவு மலர்

களிமண்பட் டயங்களில் காணப்படுகின்றது. வடஅமெரிக்காவில் கொலறடோ என்ற ஆற்றங்கரையிலுள்ள குன்றின் உச்சியில் சிவ ஆலயம் இருந்ததைப் பழம்பொருள் ஆராய்ச்சியாளர் 1937-ஆம் ஆண்டில் கண்டுபிடித்தனர்; அவ்வாலயம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர். கிரேந்தா (Crete) என்னும் தீவு பழந்தமிழரின் குடியேற்ற நாடாக இருந்தது. அங்குள்ள பழைய நகரம் ஒன்றுக்கு சிவன்நகர் என்று பெயர். சின்ன ஆசியாவிலும் சிவாஸ் என்று பழைய நகர் ஒன்று உண்டு. வடஇந்தியாவில் சிவபுரம் என்ற ஒரு ஊர் இருந்ததைப் பாணினி குறிப்பிடுகிறார். இலங்கையில் சிவன்மலே அல்லது சிவன் ஒளிமலே என்பதிருப்பது யாவரும் அறிந்ததே.

இடப்பெயர்களே சிவன் என்றழைத்த தோடமையால் காலப்பெயர்களர்கவுங்கொண்டனர். மேற்கு ஆசிய மக்களின் ஆண்டின் மூன்ருவது மாதம் சிவன் என்பது. பாபிலோனியாவில் கிடைத்த களிமண் ஏடுகளில் சிவன் என்ற மாதம் குறிக்கப்படுகிறது. சிவன் பின்லாந்து மக்களின் காத்தற் கடவுள். விவிலிய மறையின் பழைய ஏற்பாட்டில் சிவன் (Chien) என்னும் கடவுளைப்பற்றிக் கூறப்படுகிறது.

அக்கேடிய மக்களின் ஏழு முக்கிய விண்மீன்களில் மூன்ருவது சிவன் எனப்பட்டது. ஜப்பானிய மக்களின் பழைய தெய்வங்களில் ஒன்று சிவோ என்பது. சிவன் என்ற பெயர் மக்களுக்கும் இடப்பட்டிருந்தது. சிவ வணக்கமே பின்னர் சிவலிங்க வழிபாடாயிற்று. அவ்வழிபாடு உலக முழுமையும் ஒரு காலத்தில் இருந்ததை ஆராய்ச்சியாளர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

திருக்கயிலாயமலேயே சிவலிங்க உருவமாக இருக்கிறது. இந்திய நாகரிகமும் அதன் பழமையும் என்ற நூலில் முக்கேசி என்பார் இலிங்க வழிபாடு உலக முழுவதும் பரவியிருந்ததைப் பின்வருமாறு கூறியிருக்கிருர்:--

"இந்திய மக்கள் சிவனின் அருட்குறியாகிய சிவலிங்கத்தைத் தொன்று தொட்டு வழிபட்டு வருகின்றனர். இவ்வணக்கம் இந்தியாவுள் மாத்திரம் நின்றுவிடவில்லே. உலகின் எல்லா நாடுகளிலும் ஒருகால் பரவியிருந்ததென்பதை விளக்குவதற்கு வேண்டிய சான்றுகள் கிடைத்திருக்கின்றன. சீன, ஜப்பான், இந்துக்கடல் தீவுகள், பசிபிக்கடல் தீவுகள் முதலிய இடங்களில் இவ்வழிபாடு முற்றிலும் மறைந்து விடவில்லே. ஆப்பிரிக்க அமெரிக்க மக்களிடையும் இது ஒருகால் பரவியிருந்தது. ஆசிரிய, யூதேய, சீரிய, சின்ன ஆசிய, பாபிலோனிய மக்களிடையும் இது காணப்பட்ட தென்பதைக் கிறித்த மறைவாயிலாக அறிகிரேம். சிலகாலம் முன் பாபிலோன் நாட்டில் சிவலிங்கங்கள் பல அகழ்ந்தெடுக்கப்பட்டன. எகிப்திய சமாதிச் சுவர்களில் சிவலிங்கங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. அயர்லாந்தில் சிவலிங்கங்கள் கிறித்துவ ஆலயங்கள் பலவற்றுள் காணப்படுகின்றன. ஸ்காத்துலாந்திலும் சிவலிங்கங்கள் பலவற்றைக் கண்டு பிடித்திருக்கின்றனர். திபெத்து, பூத்தான் என்னுமிடங்களில் சிவலிங்க வணக்கம் காணப்படுகின்றது. ஜப்பானிய மதமான சிந்தோயிசத்தில் சிவலிங்கம் முதன்மையானது. அமெரிக்காவில் பெரு, மெக்சிக்கோ இவ்விடங்களில் சிவலிங்கம் வழிபடப்பட்டது. ஆபிரிக்காவில் தகோமி (Dahomi) என்ற இடத்தில் இலிங்கம் லெங்பா (Lengba) என்னும் பெயருடன் வைத்து வணங்கப்பட்டது."

இனி, சிவலிங்கத்தின் தத்துவத்தை ஒருவாறு தெரிந்துகொள்வோம். கடவுள் ஒருருவம் ஒரு நாமம் இல்லாதிருந்தாலும் உருவமுடைய மக்களாகிய நாம் அவரைப் பல உருவங்களாலும் பல பெயர்களாலும் வணங்குகிரேம். உருவத்திலுள்ள நாம் உருவத்தைத்தானே வணங்க முடியும். கடவுளின் திருவுருவம் அருவம், உருவம், அருவுருவம் என மூவகை. அருவத்தில் சிவம், சக்தி, நாதம், விந்து என நான்குவிதப் பெயர் பெறுவர். உருவத்தில் மகேசன், உருத்திரன், மால், அயன் என நால்வகைப் பெயர் பெறுவர். அருவுருவத்தில் சதாசிவம் எனப்பெயர்பெறுவர். இதை,

சிவன்சக்தி நாதம்விந்து;
  சதாசிவன்; திகழுமீசன்,
உவந்தருள் ருத்திரன், மால்,
  அயன்; ஒன்றின் ஒன்ருய்
பவந்தரும் அருவம்நாலு, உருவம்
  நாலு உபயம் ஒன்ரு
நவந்தரு பேதம் ஏகநாதனே
  நடிப்பன் என்பர்

என்ற செய்யுளால் அறியலாம். இறைவனின் அருவுருவமே சிவலிங்கமாகும். சிவலிங்க அமைப்பில் கீழே உடுக்குபோன்ற பீடம் காணப்படுவது ஆவுடையார். அதன்மேல் உருண்டு நீண்ட முனையற்ற தண்டம், பாணம் அல்லது லிங்கம் எனப்படும். ஆவுடையாரின் ஒரு பக்கத்தில் கோமுகம் காணப்படும்.

கலாரூப மெனப்படும் சுத்தமாயையே குடிலை என்றும், அதற்கு ஆதாரமாய் அதனை அதிட்டித்து நிற்பது **பராசக்தி** என்றும், அப் பராசத்தியை அபின்னமாகவும், குணமாகவும் கொண்டிருப்பது **பரசிவம்** என்றும் கூறப் படும். குடிலை, சத்தி, சிவம் இவை மூன்றும் ஒன்று கூடியது **சிவலிங்கம்.** அந்த சிவலிங் கம் ஆசனம், **மூர்த்தி, மூர்த்திமான்**களாகிய சிவக்குறியாம்.

சிவாசனத்தில் பீடமும் இலிங்கமும் முறையே சத்தியும் சிவமும், விந்துவும் நாதமும் ஆகும். அவை பேரண்டம், சிற் றண்டம், பிண்டம் எனவும் கூறுவர். சிவ லிங்கத்தின் கீழ்ப்பீடம் **நகாரமும்,** நடுப்பாகம் **மகாரமும்,** மேற்பீடம் **சிகாரமும்,** நாதக்குழி **வகாரமும்,** இலிங்கம் **யகாரமும்,** ஆகிய ஐந் தெழுத்தின் உருவம் என்றும் சொல்வர். கீழ்ப்பீடம் **உகாரமும்,** மேற்பீடம் **மகாரமும்,** நாதக்குழிவிந்துவும், இலிங்கம் நாதமும் ஆகிய ஓரெழுத்தொரு மொழியான **பிரணவ ரூபமும்** ஆகும். இன்னும், இலிங்கத்தின் பாகங்களை நிவர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித் தியாகலை, சாந்திகலை, சாந்தியாதிதகலை என்ற பஞ்சகலா சத்திரூபம் என்றும், பஞ்சபூதப் பிரேரகர்களாகிய சதாசிவர், மகேச்சுவரர், உருத்திரர், திருமால், பிரமன் முதலானவர்க ளாகவும் கொள்கின்றனர். பீடத்திலுள்ள நான்கு வட்டங்களை முறையே ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி என் னும் சத்திகளால் வியாபிக்கப்பட்ட சூரிய மண்டலம், சந்திரமண்டலம், அக்கினி மண்ட லம், சத்திமண்டலம் என்னும் நான்கு மண் டலமாகக் கூறப்படும்.

ஆவுடை சக்தியைக் குறிக்கிறது. பாணம அல்லது லிங்கம் சிவத்தினது உண் மைச் சொரூபமான பரவெளியைக் குறிக் கிறது. பரவெளி முப்பத்தாறு தத்துவங் களையும் கடந்தது. ஞானகாசம் என்னும் இப்பரவெளி சிதம்பரம், திருஅம்பலம், சிற்றம் பலம் என்று கூறப்படும். இதில்தான் நடரா ஜன் ஐந்தொழில் நடனம் செய்கின்றான். அவன் நடனத்தினால்தான் சராசரங்களும் இயங்குகின்றன. இலிங்கம் ஆவுடையாரை ஊடுருவிச் சென்றிருப்பது சிவம் அல்லது நாதம், சக்தி அல்லது விந்துவை ஊடுருவி வியாபித்திருக்கிறதென்பதையும், ஒன்று மற்றொன்றைப் பிரியாமல் சேர்ந்திருக்கின்ற தென்பதையும் காட்டுகின்றது. சக்தி, சிவத் துக்குள்ளே அடங்கித் தொழிற்செய்வதை ஆவுடை லிங்கத்தின் கீழடங்கியிருப்பது குறிக்கிறது. கோமுகி, சிவசக்தி உயிர்கள் மேல் காட்டும் தண்ணளியைக்காட்டுகின்றது. இதனாலேயே ஆலய வழிபாடு செய்வோர் கோமுகி வழியாக வந்து விழுகின்ற அபிஷேக நீரை எடுத்துத் தலையில் தெளித்துக்கொள் கின்றனர்.

இறைவனது அஷ்ட மூர்த்தங்களாவன பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், ஜீவான்மா என்பன. முதல் ஏழும் ஜடப்பொருள்கள். ஜீவான்மா ஒன்றுமட்டுமே சித்துப்பொருள். சித்துப்பொருளான ஜீவனில் சிவனை வணங் குதலே தலையாய வழிபாடு. அதைக் காட்டவே சிவாலயங்களில் கர்ப்பக்கிரகத்தில் முக்கிய மூர்த்தியாக எழுந்தருளச் செய்திருப்பது சிவ லிங்கமூர்த்தி. சிவலிங்கமானது ஜீவனைக் குறிக்கும். ஆவுடையார் இதய கமலத்தைக் குறிக்கும். எனவே ஜீவனில் சிவனைக் கண்டு வழிபடுவது சிறந்த முறையெனக் குறித்து நிற்கின்றது. திருமூலர்,

> உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
> வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
> தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
> கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

என்று கூறியிருக்கின்றனர். 'ஜீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது' என்ற கூற்றும் இதை வற்புறுத்துகின்றது. இன்னும் திருமூலர், அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங் கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என்ற பகுதிகளில் இலிங்க தத்துவத்தைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளனர்.

இலிங்கம் பதியினைக் குறிக்கும். முன் னுள்ள நந்தி பசுவினைக் குறிக்கும். அதன் பின்னுள்ள பலிபீடம் பாசத்தைக் குறிக்கும். நந்தியான பசு, பலிபீடமான பாசத்தைப் பின்னே தள்ளி பதியாகிய இறைவனிடம் ஒரு முகமாகக் கிடப்பது, மக்கள் ஆசாபாசங்களை விடுத்து ஒரு முகமாக இறைவனை வழிபட்டு அவன் பேருளுக்குப் பாத்திரமாவதைக் காட்டுவதற்கே என்பதை உணரவேண்டும்.

சிவ விஷ்ணுத்தல அட்டவணை

சிவத்தலங்கள்

தலம். (1)	இறைவன், இறைவி. (2)	பாடல் (3)	இரயில் நிலையம் (4)	குறிப்பு (5)
		சோழ நாடு		
		தஞ்சாவூர் மாவட்டம்		
55 தென் குரங்காடு துறை.	ஆபத்சகாயேசுவரர் பவளக்கொடி அம்மை.	சம்பந்தர், அப்பர் ...	ஆடுதுறை ...	சுக்கிரீவன் பூசித்த தலம்.
56 திருக்குருகாவூர் ...	வெள்ளடைஈசுவரர் காவியங்கண்ணியம்மை.	சம்பந்தர், சுந்தரர் ...	சீர்காழி ...	சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும், அவருடன் வந்த பரிஜனங்களுக்கும் சிவபெருமான் கட்டமுதும் தண்ணீரும் கொடுத்தருளிய தலம்.
57 திருக்குறுக்கை ...	வீரட்டேசுவரர் ஞானம்பிகை.	அப்பர் ...	மாயவரம் ...	அட்ட வீரட்டானங்களில் ஒன்று. காமனை எரித்த தலம்.
58 கைச்சினம் ...	கைக்சினநாதேசுவரர் வெள்வளை அம்மை.	சம்பந்தர் ...	திருவாரூர் ..	திருணபிந்து முனிவர், தேவேந்திரன் பூஜை செய்த தலம். தேவேந்திரனுடைய கைச் சின்னம் லிங்கத்தில் இருப்பதால் கைச்சினநாதர் என்று பெயர்.
59 கொட்டையூர் (கோடீச்சுரம்).	கோடீசுவரர் பந்தாடுநாயகி.	அப்பர் ...	கும்பகோணம் ...	மார்க்கண்டேயர் பூசித்த தலம். லிங்கத்தில் அனேக சிறிய லிங்கங்கள் இருக்கின்றன. கோடி விநாயகர் சிறப்பு. 2 மைலில் சுவாமிமலை (திருவேரகம்) இருக்கிறது.

(1)	(2)	(3)	(4)	(5)
60 திருக்கொண்டீச்சுரம்.	பசுபதீசுரர் சாந்தநாயகி.	அப்பர்	... நன்னிலம்	.. காமதேனு பூசித்த தலம். அம்மை பசுவாகி சுவாமியைத் தேட கொம்பு சுவாமியின் சிரசில் பட்டு சுவாமி தேன் பட்டதாகச் சொல்லப்படுகிறது.
61 திருக்கொள்ளம்புதூர்	வில்வ வனேசுவரர் சௌந்தராம்பிகை.	சம்பந்தர்	... நீடாமங்கலம்	... ஞானசம்பந்தர் அடியார்களுடன் சிவனுடைய திருவருளால் கோயிலை அடைய ஓடத்தில் கடந்தார்.
62 திருக்கொள்ளிக்காடு.	அக்னீசுவரர், பஞ்சினு மெல்லடி அம்மை.	,,	... திருவாரூர்	... அக்னி பூசித்த தலம். மேற்குப்பார்த்த சன்னிதி. சனி பகவான் சிறப்பு.
63 கோடி (குழகர் கோயில்).	அமிர்தகடேசுவரர் மையார் தடங்கண்ணி அம்மை.	சுந்தரர்	... வேதாரண்யம்	... இங்கேயுள்ள சுப்பிரமண்யருக்கு ஒரு முகமும் ஆறு திருக்கரங்களும் இருக்கின்றன.
64 திருக்கோடிகா ...	திரிகோடீசுவரர் வடிவாம்பிகை.	சம்பந்தர், அப்பர்	... திருவிடைமருதூர்	... மூன்று கோடி முனிவர்கள் பூசித்த தலம்.
65 திருக்கோட்டாறு ...	ஐராவதேசுவரர் வண்டமர் பூங்குழல் அம்மை.	சம்பந்தர்	... திருநள்ளாறு	... ஐராவதம் பூசித்த தலம்.
66 கோட்டூர் ...	கொழுந்தீஸ்வரர் மதுரவசனம்பிகை.	,,	... மன்னார்குடி	... தேவர்களும், குச்சர முனிவரும் பூசித்த தலம். மேற்குப் பார்த்த சந்நிதி.
67 திருக்கோலக்கா ...	சத்தபுரீசுவரர் ஓசை கொடுத்த நாயகி,	சம்பந்தர், சுந்தரர்	... சீர்காழி	... ஞான சம்பந்தர் பொற்றாளம் பெற்ற தலம்.
68 திருக்கோழம்பம் ...	கோகிலேசுவரர் சௌந்தரநாயகி.	சம்பந்தர், அப்பர்	... நரசிங்கன்பேட்டை	குயிலாய்ப் போன சந்தன் என்னும் வித்யாதரன் இங்கு பூசித்து சாபம் நீங்கப் பெற்றான்.

(1)	(2)	(3)	(4)	(5)
69 திருக்கோளிலி ...	கோளிலிநாதேசுவரர் வண்டமர்பூங்குழல் அம்மை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	கீவளூர் ...	சப்த விடங்கத்தலங்களில் ஒன்று.(அவனி விடங்கர்–பிருங்க நடனம்) பிரமன் பூசித்த தலம். அகத்தியர் பூசித்த லிங்கம் பிரகாரத்தில் இருக்கிறது. குண்டையூர் தலம் $\frac{3}{4}$ கல்லில் இருக்கிறது. எட்டுக்குடி என்னும் சுப்பிரமணியர் தலம் $1\frac{1}{2}$ கல்லில் இருக்கிறது.
70 திருச்சக்கிரப்பள்ளி,	ஆலந்துறை ஈச்வரர் அல்லியங்கோதை.	சம்பந்தர் ...	ஐயம்பேட்டை ...	விஷ்ணு பூசித்து சக்கிரம் பெற்றமையால் சக்கிராப்பள்ளி எனப்பெயர் வந்தது. சப்தஸ்தானம் சிறப்பு.
71 திருச்சத்தி முத்தம் ...	சிவக்கொழுந்தீசுவரர் பெரிய நாயகி.	அப்பர் ...	கும்பகோணம் ...	பராசக்தி சுவாமியைத் தழுவி முத்தம் கொடுத்த தலம். மங்கையர்க்கரசியார் பிறந்த ஊர்.
72 சாத்தமங்கை (அயவந்தி).	அயவந்திசுவரர் மலர்க்கண்ணம்மை.	சம்பந்தர் ...	திருநள்ளாறு ...	திரு நீலநக்க நாயனர் அவதாரம் செய்த தலம். மேற்குப் பார்த்த சந்நிதி.
73 திருச்சாய்க்காடு (சாயாவனம்).	சாயாவனேசுவரர் குயிலினும்நன்மொழி அம்மை.	சம்பந்தர், அப்பர் ...	சீர்காழி ...	உபமந்நிய முனிவர் பூசித்த தலம். மாடக்கோயில். தனுச சுப்ரமண்ய மூர்த்தி மிகவும் அழகான சிலை.
74 சிக்கில் ...	வெண்ணெய் லிங்கேசுவரர், வேல்நெடுங் கண்ணி அம்மை.	சம்பந்தர் ...	சிக்கில் ...	மாடக்கோயில். வசிஷ்டர் காமதேனுவைப் பெறும்பொருட்டு பூசித்த தலம். சிங்கார வேலவர் சந்நிதி விசேடம். கோலவாமனப் பெருமாளும் இருக்கிறார். கந்த சஷ்டித் திருவிழா மிகவும் சிறப்பு.
75 சிவபுரம் ...	சிவபுர நாதர் சிங்காரவல்லி.	சம்பந்தர், அப்பர் ...	கும்பகோணம் ...	விஷ்ணு வராகமாய்ப் பூசித்த தலம்.
76 சிறுகுடி ...	மங்களேசுவரர் மங்களநாயகி.	சம்பந்தர் ...	பேரளம் ...	செவ்வாயும், கருடனும், கந்தர்வர்களும் பூசித்த தலம்.

(1)	(2)	(3)	(4)	(5)
77 திருச்சிற்றேமம் (சிற்ருய்மூர்).	பொன்வைத்த நாதேசுரர் அகிலாண்ட நாயகி.	சம்பந்தர் ...	ஆலத்தம்பாடி ...	அகத்தியர், இந்திரன், நாகராஜன், பிரமன், வேதங்கள் பூசித்த தலம். சுவாமி சந்நிதியில் ஒரு தேன் கூடு இருக்கிறது. சித்தர்கள் தேனிக்கள் உருவமாய்ப் பூசித்ததாகச்சொல்லப்படுகிறது. திருச்சிற்றம்பலத்தை திருச்சிற்றேமம் என்றும் கூறுவர் சிலர்.
78 திருச்செங்காட்டங் குடி (கணபதிச் சுரம்).	உருத்ராபதிசுவரர் திருக்குழல் நாயகி.	சம்பந்தர், அப்பர் ...	நன்னிலம் ...	சிறுத்தொண்ட நாயனருடைய தலம்.
79 திருச்செம்பொன் பள்ளி (செம்பனர் கோயில்).	சுவர்ணபுரீசுவரர் மருவார்குழலி அம்மை.	,, ...	செம்பனர் கோயில்.	இந்திரனும், குபேரனும் பூசித்த தலம்.
80 திருச்சேய்ஞலூர் ...	சத்தியகிரீசுவரர் சகிதேவியம்மை.	சம்பந்தர் ...	கும்பகோணம் ...	சண்டேசுர நாயனர் ஸ்தலம். குமாரக் கடவுள் சூர சம்காரம் செய்ய சிவபெருமானைப் பூசித்து சர்வ சங்கார படைக் கலத்தைப் பெற்ற தலம்.
81 திருச்சேறை (உடையார்கோயில்).	செந்நெறியப்பர் ஞானவல்லி அம்மை	சம்பந்தர், அப்பர் ...	கும்பகோணம் ...	ஏனாதி நாயனருடைய அவதார தலமான எயினனூர் (ஏன நல்லூர்) இத்தலத்திலிருந்து 2½ கல்லில் இருக்கிறது.
82 திருச்சோற்றுத்துறை	தொலையாச்செல்வர் ப்பில்லா அம்மை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	தஞ்சாவூர் ...	சப்த ஸ்தான தலம். இந்திரன், சூரியன் பூசித்த தலம்.
83 தண்டலைநீணெறி (தண்டலைச்சேரி).	நீணெறி நாதேசுவரர் ஞானம்பிகை,	சம்பந்தர் ...	மணலி ...	கூர்மாவதாரங்கொண்ட விஷ்ணுவின் ஓட்டை சிவபெருமான் அணிந்து அருளிய தலம். அறிவாட்டாய நாயனருடைய அவதார தலமான கணமங்கலம் ஒரு கல்லில் உள்ளது.
84 தருமபுரம் ...	யாழ்மூரிநாதேசுவரர் தேனமிர்தவல்லி.	,, ...	காரைக்கால் ...	காரைக்கால் அம்மையாருடைய தலம். தருமராஜா பூசித்த தலம்.

(1)	(2)	(3)	(4)	(5)
85 திருத்தலைச்சங்காடு...	சங்கருநாதேசுரர் சௌந்தர நாயகி.	சம்பந்தர் ...	ஆக்கூர் ...	மாடக்கோயில். விஷ்ணு பூசித்துப் பாஞ்சஜன்யம் பெற்ற தலம்.
86 திருத்தலை ஆலங்காடு.	ஆடவல்ல ஈசுவரர் திருமடந்தை அம்மை.	அப்பர் ...	கும்பகோணம் ...	தாருகாவன முனிவர்கள் அனுப்பிய முயல்கள் மீது சிவபெருமான் நடந்து அருளிய தலம். கபில முனிவர் இங்கு பூசித்தார்.
87 திருந்துதேவன்குடி ...	கற்கடகேஸ்வரர் அருமருந்தம்மை.	சம்பந்தர் ...	,, ...	நண்டு பூசித்த தலம். கோயில் நஞ்சை நிலங்களுக்கு மத்தியில் இருக்கிறது.
88 திலதைப்பதி ...	முத்தீசுவரர் பொற்கொடியம்மை.	சம்பந்தர் ...	பூந்தோட்டம் ...	தசரத சக்ரவர்த்திக்கு இராம இலக்குமணர்கள் தில தர்ப்பணம் செய்த தலம். சந்திரன் பூசித்த தலம்.
89 திருத்துருத்தி (குற்றாலம்).	வேதேசுவரர் முகிழாம்பிகை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	குற்றாலம் ...	மேற்குபார்த்த சந்நிதி. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஏற்பட்ட பிணி இங்கு நீங்கிற்று.
90 திருத்தெங்கூர் ...	வெள்ளிமலைநாதர் பெரியநாயகி.	சம்பந்தர் ...	திருநெல்லிக்காவல் ...	இலக்குமியும், நவக்கிரகங்களும் பூசித்த தலம்.
91 திருத்தெளிச்சேரி (கோயிற்பத்து).	பார்வதீசுவரர் சத்தியம்மை.	,, ..	காரைக்கால் ..	மேற்குப் பார்த்த சந்நிதி. திருஞான சம்பந்தர் தர்க்கம் செய்து பௌத்தர்களைத் தோற்கடித்து சைவர்களாகச் செய்தார்.
92 தென்குடித்திட்டை (திட்டை)	பசுபதீசுவரர் உலகநாயகியம்மை.	,, ...	திட்டை ..	கௌதமர், ஆதிசேஷன், காமதேனு இவர்கள் பூசிந்த தலம்.
93 தேவூர் ...	தேவபுரீசுவரர் மதுரபாஷணிம்மை.	,, ...	கீவளூர் ...	கௌதமர், பிரகஸ்பதி, இந்திரன், குபேரன், முதலியோர் பூசித்த தலம். மாடக்கோயில்.

(1)	(2)	(3)	(4)	(5)
94 திருநல்லம் (கோனேரி ராஜபுரம்).	உமாமகேசுவரர் மங்களநாயகி.	சம்பந்தர், அப்பர் ...	ஆடுதுறை ...	மேற்குப் பார்த்த சந்நிதி. நடராச விக்கிரகம் சிறப்பானது.
95 திருநல்லூர்ப்பெருமணம் (ஆச்சாபுரம்)	சிவலோகத்யாகேசர் நங்கையுமையம்மை.	சம்பந்தர் ...	கொள்ளிடம் ...	திருஞானசம்பந்தர், அடியார்களுடன் ஜோதியில் கலந்த தலம்.
96 திருநல்லூர் ...	கல்யாணசுந்தரேசுவரர் கல்யாணசுந்தரி.	சம்பந்தர், அப்பர் ...	சுந்தரப்பெருமாள் கோயில்.	அப்பருக்குத் திருவடி சூட்டியருளிய தலம். அமர்நீதிநாயனர் முத்தி பெற்ற தலம். மாடக்கோயில்.
97 திருநள்ளாறு ...	தர்ப்பாண்யேசுவரர் போகமார்த்த பூண் முலையம்மை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	திருநள்ளாறு ...	சப்தவிடங்கங்களில் ஒன்று. (நகரி விடங்கர்-உன்மத்த நடனம்) சனி பகவான் சந்நிதி சிறப்பு. நளன் பூசித்த தலம். சொர்ணவிநாயகர் சிறப்பு.
98 திருநறையூர் (சித்தீச்சுரம்).	சித்தநாதேசுவரர் அழகாம்பிகை.	சம்பந்தர், சுந்தரர் ...	கும்பகோணம் ...	ஆண்டபிள்ளையார் சிறப்பு.
99 திருநனிபள்ளி (புஞ்சை).	நற்றுணையப்பர் மலையான்மடந்தை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	மாயவரம் ...	திருஞானசம்பந்தருடைய தாயார் பிறந்த தலம்.
100 நன்னிலம் ...	மதுவனேசுவரர் மதுவனநாயகி.	சுந்தரர் ...	நன்னிலம் ...	மாடக்கோயில். நன்னிலத்துப்பெருங்கோயில் எனப்படுகிறது.
101 திருநாகேச்சுரம் ...	சன்பகாரண்யேசுவரர் குன்றமுலைநாயகி.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	திருநாகேச்சுரம் ...	சேக்கிழார் அன்பு வைத்திருந்த தலம். சந்திரன், சூரியன் பூசித்த தலம்.

வைணவத் தலங்கள்

சோழ நாடு

திருச்சி மாவட்டம்.

	ஊரின் பெயர். (1)	பிரயாண வசதி. (2)	பெருமாள், தாயார் திருநாமம். (3)	மங்களா சாஸனம் செய்த ஆழ்வார்கள். (4)	குறிப்பு. (5)
1	திருப்பேர்நகர் "கோவிலடி" என வழங்கும்.	சென்னை-திருச்சி கார்ட் லைன், லால்குடி. சென்னை–திருச்சி மெயின்லைன், பூதலூர் ஸ்டேஷனுமாம்.	அப்பக்குடத்தான் கமலவல்லி.	திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார்.	இவ்வெம்பெருமான் வலத்திருகரத்தின் கீழ் குடமுள்ளது.
2	திருவெள்ளறை வடமொழியில் "ச்வேதகிரி" எனப்படும்.	ஸ்ரீரங்கம் ...	புண்டரீகாட்சன் பங்கயச்செல்வி செண்பகவல்லி.	பெரியாழ்வார், திருமங்கையாழ்வார்.	உய்யக்கொண்டார் அவதாரஸ்தலம்.
3	திருவரங்கம் - கோயில் எனவும் பெரிய கோயில் எனவும் வழங்கும்.	சென்னை-திருச்சி கார்ட் லைன், ஸ்ரீரங்கம் ஸ்டேஷன்.	பெரியபெருமாள் (மூலவர்), நம்பெருமாள் (உத்ஸவர்), ஸ்ரீரங்கநாதன், அழகிய மணவாளன் எனவும் ப்ரஸித்தி உண்டு. ஸ்ரீரங்கநாச்சியார்.	மதுரகவியாழ்வாரைத் தவிர மற்றனைவரும் மங்களாசாஸனம் செய்துள்ளனர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகரர், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார். திருமங்கையாழ்வார்.	கண்ணெதிரே காணும் பரமபதம் எனக் கருதி இதனைப் பூலோக வைகுண்டம் என்பர். திருப்பதிகள் அனைத்திற்கும் இதுவே தலையாயது. ஸ்வயம் வ்யக்த க்ஷேத்திரங்களுக்குள்ளும் இதுவே முதலாயது. இதனை வைணவஸாம்ராஜ்யத்தின் "ராஜதானி" எனலாம். பட்டர் போன்ற வைணவப் பேராசிரியர்களது அவதாரஸ்தலமும் இதுவே. புகழ் படைத்த ஆண்டாள், பாணர், ஸ்ரீராமானுஜர், முதலியோர் பரமபதம் எய்திய தலமும் இதுவே. ஏழு மதில்கள் சந்நிதியைச் சூழ்ந்துள்ளன. இவ்வளவு பெரிய கோயில் நம் தேசத்தில் வேறெங்கும் இலது.

(1)	(2)	(3)	(4)	(5)
4 பரமபதம் ...	...	பரமபதநாதன், பெரியபிராட்டியார்.	பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடிகள், திருப்பாணாழ்வார், மதுர கவியாழ்வார். திருமங்கையாழ்வார்.	இதுவே முக்தி ஸ்தலம் எனப்படுகிறது

ஈரிருபதாம் சோழ மீரோன்பதாம் பாண்டி
ஓர்பதின் மூன்றுமலை நாடோரிண்டாம்—சீர்நடுநாடு
ஆறேடீரெட்டுத் தொண்டை அவ்வட நாடாறிரண்டு
கூறுதிரு நாடொன்றாகக் கொள்.

[சோழ நாடு 40, பாண்டிநாடு 18, மலைநாடு 13, நடுநாடு 2, தொண்டை நாடு 22, வடநாடு 12, திருநாடு 1-ஆக மங்களாசாசனம் பெற்ற திவ்விய தேசங்கள் 108.]

(வைணவத்தலங்கள் முற்றிற்று)

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

திருவெம்பாவை

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

[பழம் பொருள்களுக்கும் பழமையான பொருளே! பிற்பட்ட புதுமைக்கும் அத்தன்மை யுடையவனே! உன்னைத் தலைவனாக அடைந்த நாங்கள், உன் அடியவர்களின் பாதம் பணிவோம்; உதவியாவோம். அவர்களே எங்கள் கணவராவர். அவர்கள் சொன்னபடி பணிசெய்து அடிமையாய் வாழ்வோம். தலைவனே! இந்த வகை நீ எங்களுக்கு அருளினால் ஒரு குறையும் இல்லாதவர்களாவோம்].

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச் செய்த

திருப்பாவை

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங் கமழத் துயிலணைமேற் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவந் தாள்திறவாய்
மாமீ ரவளை யெழுப்பீரோ வுன்மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ வனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

[மணிகள் பதித்த மாளிகையில் சுற்றிலும் விளக்குகள் எரிய, நறும்புகை கமழ, படுக்கையிலே உறங்கும் அம்மான் மகளே! மாணிக்கக் கதவின் தாழ்ப்பாளைத் திறப்பாயாக! (என்று சொல்ல அவள் எழுந்திராது கிடப்ப அவள் தாயைப் பார்த்து) மாமியரே! அவளை எழுப்பக் கூடாதோ? உன் மகள் தான் ஊமையோ, செவிடோ, அனந்தலோ, காவலிடப்பட்டாளோ அல்லது நெடிதுறங்கும்படி மந்திரம் பண்ணப்பட்டாளோ? (என்று தாயாரைக் கேட்க, அவள் இறைவன் திருப்பெயர்களைச் சொல்லுங்கவென்ன) மகாமாயவன், மாதவன், வைகுந்தன் என்று இப்படியாக அவனுடைய பல திருநாமங்களைச் சொன்னோம் (என்கிறார்கள்).]

அடியவர்கள் திருநட்சத்திரங்கள்


விகாரி—ஆனி

சைவம்

15௨—ஏயர் கோன் கலிக்காம நாயனார்
25௨—மாணிக்கவாசக சுவாமிகள்
30௨—அமர்நீதி நாயனார்

வைணவம்

7௨—திருப்புளியாழ்வார்
24௨—மாறனேரி நம்பி
29௨—திருவாழிப்பிள்ளை
30௨—பெரியாழ்வார்
30௨ வடக்குத் திருவீதிப்பிள்ளை
,, திருவரங்கப் பெருமாளையர்
,, எங்களாழ்வான்
32௨—ஸ்ரீமந் நாதமுனிகள்



திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் பிரகாரம்

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1.
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-2.